28°c
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர் குழு, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS

விரையுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 169 வள்ளுவர் ஆண்டு: 2045
சித்திரை 31, புதன் 14.05.2014

மாகாண மட்ட உதைபந்தில் இருபிரிவிலும் யாழ்ப்பாணம் சம்பியன்

பக்கம் 22

# இன அழிப்பு நாள் மே-18

## தமிழ்த் தேசிய முன்னணி பிரகடனம்

யாழ்ப்பாணம், மே 14
மே - 18 தமிழினத்தின் மீதான இன அழிப்பு நாள் என்று பிரகடனப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இறுதிப் போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதைத் தடுப்பதன் மூலம் தாம் புரிந்த இன அழிப்பை மறைத்து விட முடியும் என்று இலங்கை அரசு நம்புகின்றது என்றும் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பாக அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-
"பிரித்தானியர்களிடமிருந்து இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரத்தைச் சிங்களவர்கள் பெற்றுக் கொண்டனர். தீவை விட்டுப் பிரித்தானியர்கள் வெளியேறிய நாள் தொடக்கம் தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் வேலைத் திட்டங்களை இலங்கையின் ஆட்சியாளர்கள் தீவிரப்படுத்தியே வந்தனர்.
இந்த அழிப்பிலிருந்து தமிழ்த் தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்ள அகிம்சை வழியில் தமிழ் அரசியல் தலைமைகள் மேற்கொண்ட ஜனநாயக வழிப் போராட்டங்கள் முழுமையாகத் தோல்வியடைந்தன. அதனால் தமிழ் மக்கள் தமது தேசத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.
அரசியல் விடுதலைக்கான தமிழ் மக்களது ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்துக்கு சித்தரித்தது. சர்வதேச நாடுகள் உண்மைகளை அறிந்திருந்தபோதும், தத்தம் பூகோள அரசியல் நலன்களுக்

21ஆம் பக்கம் பார்க்க

## கமலுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 14
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடமாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன்

21ஆம் பக்கம் பார்க்க

## உறவுகளை நினைவுகூருவதை யாரும் தடுத்துவிட முடியாது

### வலி.தெற்குப் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14
வடக்கு மக்கள் தமது உறவுகளை நினைவு கூருவதைத் தடுத்து நாட்டின் நல்லிணக்க முயற்சிகளை நசுக்கும் செயற்பாடுகளை இலங்கை இராணுவமும், அரசும் செய்து வருகின்றன. உயிர் நீத்த ஆன்மாக்களை நினைவு கூரும் உரிமையை யாரும் தடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிராகாஸ்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் வடபகுதியில் கடைப்பிடிப்பதற்கு இராணுவம் தடை விதித்துள்ளமையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,
"தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முள்ளிவாய்க்கால் துயரம் என்பது அவர்களது வாழ்நாளில் மறக்க முடியாத வடுவாக உள்ளது. இந்தத்

21ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் பகுதியில் மிரட்டும் சிவில் உடையினர்

### குற்றஞ்சாட்டுகின்றது கூட்டமைப்பு மறுக்கிறது பாதுகாப்புத் தரப்பு

யாழ்ப்பாணம், மே 14
இறுதிப் போரில் மரணித்த தமிழ் உறவுகளை நினைவு கூரும் நாள் நெருங்கும் வேளையில், முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் ஆகியோர் கடந்த சில தினங்களாக சிவில் உடையில் மக்களை அச்சுறுத்தும் வகையில் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் படைப்பிரிவினர், அங்குள்ளவர்களின் பெயர் விவரங்களைத் திரட்டுகின்றனர் என்று கூறும் கூட்டமைப்பு உறுப்பினர்கள், வீதிகளில் செல்லும் மக்களையும் மிரட்டும் வகையில் விசாரணைகள்

21ஆம் பக்கம் பார்க்க

# நினைவேந்தலுக்கான தடை பிரிவினைக்கே பங்களிக்கும்

## தேசிய சமாதானப் பேரவை கவலை

கொழும்பு, மே 14
வடக்கில் உள்ள தமிழர்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை - கட்டமைப்புக்களை - தாங்களே உருவாக்கிக் கொள்வதற்கான வெளியை இலங்கை அரசு மீண்டும் ஒரு முறை ஏற்படுத்தி விட்டுள்ளது. இது பிரிவினைவாதச் சிந்தனைக்குப் பங்களிப்புச் செய்யும்.
இவ்வாறு தெரிவித்துள்ளது தேசிய சமாதானப் பேரவை. மாத்தறையில் போர் வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்தும் அரசு போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொது நிகழ்வுகளுக்குத் தடைவிதித்துள்ளமை குறித்தே பேரவை இந்தக் கருத்தை முன்வைத்துள்ளது.
இது தொடர்பில் அது விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-,
மே 18ஆம் திகதி மாத்தறையில் வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்துகிறது அரசு. இதற்காக ஒரு வார காலத்துக்கு அங்கு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்தே வெற்றிக் கொண்டாட்டங்களுக்கு அரசு எவ்வளவு முக்கியத்துவம் வழங்குகின்றது என்பது தெரிகிறது. அதேநேரத்தில் போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு வடக்கில் அரசு தடை விதித்துள்ளது.
அரசியல் கட்சிகள் மற்றும் பிரிவினைக் குழுக்கள் விடுதலைப் புலிகளைப் போற்றிப் புகழ்வதற்கும் அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
போர் முடிவுக்கு வந்ததன் நினைவு நிகழ்வுகளை வடக்கிலும் தெற்கிலும் நடத்துவது தொடர்பில் அரசு காட்டும் இத்த

21ஆம் பக்கம் பார்க்க

"உயர்கல்வி கற்றிருக்காவிட்டாலும் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு புத்தகங்கள் வாசித்து படித்துக் கொள்ளமுடியும்தானே. நிதி சம்பிரதாயம் பொருளாதார தத்துவம் தொடர்பில் சிறிதளவேனும் அவர் தெரிந்திருக்க வேண்டும்."
- அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க

பக். 2



## இலங்கைத் தமிழர்களை அகதியாக ஏற்கக் கூடாது

### இந்திய மத்திய அரசு உத்தரவாம்

சென்னை, மே 14
இலங்கையில் இருந்து தமிழ் நாட்டுக்கு வருவோரை அகதிகளாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது என்று 'நியூ. இந்தியன் எக்ஸ் பிரஸ்' நாளிதழ் கூறுகின்றது. இலங்கையில் தற்போது அமைதி திரும்பியுள்ளதால், 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றுக்கொள்வதை இந்திய அரசு நிறுத்தியுள்ளது என்றும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.
இதுகுறித்து மண்டபத்தில் உள்ள சிறப்பு பிரதி மாவட்ட ஆட்சியர் பணியக வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-
"2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இருந்து வரும் எவரையும் அகதிகளாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று

21ஆம் பக்கம் பார்க்க

கசினோவுக்கு எதிராக களமிறங்கினார் வீரவன்ஸ

பக்கம் 12

## விசாரணைப் பொறிமுறையின் அடுத்த கட்டம் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஆராய்வு

கொழும்பு, மே 14
இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரில் இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டநகர்வுகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.
ஜெனிவாத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கைக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நிபுணர்கள் குழுவை ஐ.நா.மனிதஉரிமைகள்ஆணையாளர் நவநீதம்பிள்ளை இம்மாத இறுதியில் நியமிக்கவுள்ளார். இந்தநிலையில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கூடி, தீர்மானம் தொடர்பில் தமது அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆராய்ந்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

21ஆம் பக்கம் பார்க்க

## நினைவுகூருவதற்குத் தடை ஐ.நா. சபை விசேட கவனம்



கொழும்பு, மே 14
இலங்கையின் வடபகுதியில் போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து ஐக்கிய நாடுகள் சபை விசேட கவனம் செலுத்தும் என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்.

விரிவான தகவல்கள் 2 ஆம் பக்கத்தில்

## ஜெயக்குமாரி, விபூசிகா சார்பில் உரிமை மீறல் மனு

யாழ்ப்பாணம், மே 14
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விபூசிகா மற்றும் அவரது தாயார் ஜெயக்குமாரி ஆகியோர் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.
தமிழீழ விடுதலைப் புலிகளை மீள உருவாக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சினால் தேடப்படுபவ

21ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் தடைப் பட்டியல்; கவலை வெளியிட்டது பிரிட்டன்

லண்டன், மே 14
இலங்கைக்கு வெளியே செயற்படும் பல தமிழர் அமைப்புகளையும் தனியாள்களையும் இலங்கை அரசு தடை செய்துள்ளமை குறித்துப் பிரிட்டன் கவலை கொண்டிருப்பதாக அறிவித்திருக்கின்றது.
பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடைய தரப்புகள் குறித்து ... இங்கு தெளிவான சாட்சியங்கள் ... குமிடத்து அத்தகைய தனியாள்கள் அல்லது குழுவினர் குறித்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை அரசுக்கு உள்ள உரிமையை பிரிட்டன் மதிக்கின்றது என்று குறிப்பிட்ட பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சர் ஹுகோ ஸ்வயர், அதே சமயம், அத்தகைய தடை நடவடிக்கை கருதது ... வெளிப்பாட்டு

21ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நினைவேந்தலுக்கு இராணுவம் தடை; ஐக்கிய நாடுகள் சபை விசேட கவனம்

நியூயோர்க், மே 14

வடபகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசேட கவனம் செலுத்தும் என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக்.



இலங்கையில் இறுதிப் போர் முடிவுக்கு வந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 18 ஆம் திகதி வடபகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் இந்த ஆண்டு வடபகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்துவதற்கு இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். தடையையும் மீறி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இறுதிப் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களை நினைவுகூருவதை இராணுவத்தினர் தடுத்திருக்கும் இந்த நடவடிக்கை தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- "நாங்கள் அந்தத் தடை குறித்து இன்னமும் ஆராயவில்லை. எனினும் அது குறித்து நாம் கவனம் செலுத்துவோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை- இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மே 18 ஆம் திகதி மேற்கொள்ள பல தரப்புக்களும் அழைப்பு விடுத்துள்ளன. (ற-5)

## இளைஞர் மாநாட்டுக்கு வந்தோர் தஞ்சம் கோருகின்றனர்

கொழும்பு, மே 14

நடந்து முடிந்த சர்வதேச இளைஞர் மாநாட்டுக்கு நைஜீரியா, உகண்டா மற்றும் கிரிபானி ஆகிய நாடுகளில் இருந்து வந்திருந்த 6 பேர் இலங்கையிடம் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். அதனால் இளைஞர் விவகார அமைச்சுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.


இளைஞர், யுவதிகள் என 6 பேர் தஞ்சம் கோரியுள்ளனர் என்றும், எனினும் விஸா காலம் முடிவடைந்த பின்னர் எவரும் இங்கு தங்க முடியாது. அவர்கள் அவரவர் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் இலங்கை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். (ற)

## இணையத்தளம் ஒன்றுக்கு இலங்கையில் தடையாம்

கொழும்பு, மே 14

இலங்கையில் நேற்றுமுதல் இணையத்தளம் ஒன்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. சிறிலங்கா மிரர் எனும் இணையத் தளமே இணைய சேவை வழங்குநர்களால் இலங்கையில் பார்க்க முடியாதவாறு தடை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து இணையத்தள உரிமையாளர்கள் இணைய சேவை வழங்குநர்களுடன் தொடர்பு கொண்டபோது, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படியே இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது என்றும் ஆணைக்குழுவின் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ள முயன்றபோது, அவர் நாட்டில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. (ற)



பாதுகாப்புத் தரப்பினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகும் வெசாக் தினக் கொண்டாட்டம் மாலை 6.30 மணியளவில் யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. மதியம் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் மாலையில் நடைபெறும் நிகழ்வுகளைத் தொடர்ந்து 200 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல் மற்றும் பக்திப் பாடல்கள் நிகழ்வுகள் என சமய நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. இந் நிகழ்வுகள் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு பொது மக்களின் பார்வைக்காக நீடிக்கும். முனியப்பர் கோயில் வீதியில் உள்ள புல்லுக்குளத்தில் அழகிய செயற்கை மலர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், வீதிகளும் அலங்கார மின்குமிழ்கள் மற்றும் வெளிச்சக் கூடுகள் கொண்டும் அழகிய சோடனைகள் செய்யப்பட்டும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. (ற-86)

## தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு மஹிந்த வாழ்த்து

கொழும்பு, மே 14

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் சூமா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

"தேர்தல் வெற்றியானது ஜனாதிபதியின் தனிப்பட்ட பிரபல்யத்தை விடவும், முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலாவின் கட்சி என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றே கருதப்பட வேண்டும். ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைமைத்துவத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்பட வேண்டும்"- என்று ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் என்று தொடர்ந்து வருகின்றது. (ற)

## துமிந்த சில்வா சிங்கப்பூர் செல்வதற்கு அனுமதி

கொழும்பு, மே 14

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிங்கப்பூர் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் துமிந்த சில்வாவின் கடவுச்சீட்டு உயர் நீதிமன்றின் பொறுப்பில் உள்ளது.

இந்த நிலையில், சிங்கப்பூர் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு அனுமதியளிக்குமாறு துமிந்தவின் சட்டத்தரணி உயர் நீதிமன்றில் நேற்று கோரியிருந்தார். அதை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்ற நீதிவான் லலித் ஜயசூரிய, கடவுச் சீட்டை ஆறு வார காலங்களுக்கு விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

இதன்படி, துமிந்த ஆறு வார காலம் சிகிச்சைக்காக சிங்கப்பூர் பயணம் செய்[illegible]ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

## உயர்தரம் சித்தியடையாவிடினும் புத்தகங்களை விமல் படிக்கலாமே?

### விமர்சிக்கின்றார் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, மே 14

உயர்தரத்தில் சித்திபெறாவிட்டாலும், உயர்கல்வி கற்றிருக்காவிட்டாலும் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு புத்தகங்கள் வாசித்து படித்துக் கொள்ள முடியும்தானே. நிதி சம்பிரதாயம் பொருளாதார தத்துவம் தொடர்பில் சிறிதளவேனும் அவர் தெரிந்திருக்க வேண்டும் என்று விமர்சித்துள்ளார் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பி.பி.ஜயசுந்தர ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வருகின்றார் என்றும் எஸ்.பி.திஸாநாயக்க பி.பி.ஜயசுந்தரவை பாராட்டிப் பேசுவதால் அவரது அமைச்சரவை பத்திரங்களுக்கு உடனடியாக நிதி ஒதுக்கப்படுவதாகவும் விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்த கருத்துக்குப் பதில[illegible]ளிக்கும் விதமாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"அமைச்சர் விமல் வீரவன்ஸவால் 'ஜய வேவா' மாத்திரமே சொல்ல முடியும். அமைச்சு செயலாளர் என்பது சாதாரண பதவி அல்ல எனவும் சிறந்த நிபுணத்துவம் பெற்றவர்கள் அதில் இருக்கின்றனர். அவர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

அமைச்சர் ஒருவர் சட்ட விரோத செயலுக்கு அனுமதி கோரினால் அதனை நிராகரித்து விளக்கம் அளிக்கும் அதிகாரம் அமைச்சுச் செயலாளர்களுக்கு இருக்கின்றது. பி.பி.ஜயசுந்தர என்பவர் பொருளாதார நிபுணத்துவம் பெற்ற, நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றச் செயற்படும் நபர்"- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பி.பி.ஜயசுந்தர என்பவர் இலங்கையின் பொருளாதார கொலையாளி. அவர் சந்திரிகா ஆட்சியில் அரச நிறுவனங்களை [illegible]ற்றவர். அவர் சிறையில் இருக்க வேண்டியவர் என்று வீரவன்ஸ விமர்சித்திருந்தார். (ற-10)

## வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வே எங்களது நித்திய பிரார்த்தனையாகும்

### அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் அவர்களது சொந்த இடங்களில் சென்று மீளக்குடியமர வேண்டும் என்பதே எங்களின் நித்திய பிரார்த்தனையாகவுள்ளது. அது நிறைவேறும் வரையில் அவர்களுக்கான உதவிகள் வழங்க முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் ஆறு.திருமுருகன்.

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில்தங்கியுள்ளமக்கள்தொழில் வாய்ப்புக்கள் இன்மையாலும், இலங்கை அரசின் நிவாரணங்கள் எதுவும் இல்லாதமையினாலும் கடுமையான பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர். அதையடுத்து நலன்புரி நிலையங்களி[illegible]லுள்ள அங்கவீனர்கள், விதவைகள், கடுமையாகப் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய அகில இலங்கை இந்துமா மன்றம், நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முன் வந்துள்ளது.

ஒரு வருடகாலத்திற்கு நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக வழங்கப்படவுள்ளன. இதன் ஆரம்ப வைபவம் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கலை ஆரம்பித்து வைத்த பின்னர் உரையாற்றியபோதே ஆறு.திருமுருகன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து [illegible] தங்கியுள்ள மக்கள் அவர்களது சொந்த இடத்துக்குச் செல்ல வேண்டும். இதுவே எமது நித்திய பிரார்த்தனையாக உள்ளது. இந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியேற வேண்டும் என்பதற்காக நாங்களும் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றோம்.

அங்கு சென்று குடியமரும்வரையில், மக்களுக்குத் தேவையான உதவிகளை நாம் வழங்குவதற்கு முயற்சிகள் எடுப்போம். முதற்கட்டமாக ஒரு தொகுதி மக்களுக்கு வழங்கப்படும் இந்த உதவிகள் அனைத்து நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கும் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஸ், வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிஷிர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-5)

## பள்ளிக்குடாவில் மீனவர்கள் மூவருக்கு எதிராக வழக்கு

பூநகரி, மே 14

பள்ளிக்குடா கடற்கரையில் அநாதரவான நிலையிலிருந்த தடை செய்யப்பட்ட ஒரு தொகுதி வலைகளைக் கைப்பற்றிய கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் அவை தொடர்பாக மூன்று மீனவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பள்ளிக்குடா கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன் பிடிப்பதில் ஈடுபடுவதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைக்குக் கிடைத் இரகசியத் தகவலைத் தொடர்ந்து பிரதிப் பணிப்பாளர் தலைமையில் அங்கு விரைந்து சென்ற அதிகாரிகள் வலைகளை மட்டும் கைப்பற்றினர்.

இது குறித்த விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகள் மூன்று மீனவர்கள் மீது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (வ-115)

## சேமலாப நிதியில் இணைக்கப்படாதோர் தொழில் திணைக்களத்துக்கு அறிவிக்கலாம்

### உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் பிரதி ஆணையாளர்

அச்சுவேலி, மே 14

"தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் இதுவரை ஊழியர் சேமலாப நிதியில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்படாமல் இருப்பின் அது தொடர்பான விவரங்களை வடபிராந்திய தொழில் திணைக்கள பிரதி ஆணையாளரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தலாம். வழங்கப்படும் தகவல்கள் இரகசியமாக பேணப்படுவதுடன் திணைக்கள அலுவலர்கள் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வர்"

இவ்வாறு வடபிராந்திய தொழிற்திணைக்கள பிரதி ஆணையாளர் கனகசபாபதி கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

தனியார்துறை மற்றும் கூட்டுறவு சார் நிலை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களை ஊழியர் சேமலாப நிதியில் இணைத்துக் கொள்ளாமல் இருப்பது தொடர்பாக அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்;


தனியார் துறை நிறுவனங்கள் தனியார் வர்த்தக நிலையங்கள் மற்றும் கூட்டுறவுசார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் ஊழியர் சேமலாப நிதியில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். இது பணிகொள் வோரின் தலையாய கடமை ஆகும்.

இந்த விடயத்தில் பணிகொள்வோர் சிலர் தவறி விடுகின்றனர். சிலர் தந்திரோபாயங்களைக் கையாண்டு . பணியாளர்களை உறுப்பினர்களாக ஊழியர் சேமலாப நிதியில் சேர்த்துக் கொள்ள தவறிவிடுகின்றனர். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக முறைப் பாடுகள் கிடைத்துள்ளன.

ஊழியர் சேமலாப நிதியில் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளாத நிறுவனம் மற்றும் வியாபார நிலையங்கள் மற்றும் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கும் பணியாளர்களின் விவரங்களைத் தொலைபேசி மூலமோ அல்லது கடிதத்தின் மூலமாகவோ பிரதி தொழில் ஆணையாளர், வடபிராந்திய தொழிற்திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத் தரலாம். தகவல்கள் மிக இரகசியமாகப் பேணப்படும்.

திணைக்கள அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு பணியாளர்களுக்கு பாதிப்பு இல்லாத உரிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்" எனத் தெரிவித்தார். (க-11)

## தென்பகுதிக்கு 'கூலர்'களில் அள்ளப்படும் கடலுணவுகள்


கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணம் நோக்கி படையெடுத்துவரும் தென்பகுதி கூலர் வாகனங்கள் இங்குள்ள கடலுணவுகளை தாராளமாக அள்ளிச் செல்கின்றன.

யாழ். குடாநாட்டை அண்டிய கடற்பகுதிகளில் தற்போது பெரிய அளவில் மீன்கள் பிடிபடுவதை அடுத்தே தென்பகுதி கூலர் வாகனங்களின் வருகை அதிகரித் துள்ளன.

மீன் வகைகள், இறால், கணவாய், நண்டு போன்றவற்றை வியாபாரிகள் கொள்வனவு செய்து இந்தக் கூலர் வாகனங்களில் விற்பனைக்காக தென்பகு திக்கு எடுத்துச் செல்லப்படு கின்றனர்.

கடந்த காலத்தில் குடாக் கடலில் மீன்கள் பிடிபடுவது குறை வாக காணப்பட்டதாலும், அவற் றின் விலை அதிகரிப் பாலும், தென்பகுதி வியாபாரிகளின் வருகை குறைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-17)

## பிரதேச சபையின் உடுவில் அலுவலகம் தற்காலிகமாக தலைமை அலுவலகத்தில்

வலி. வடக்கு, மே 14

மருதனார்மடம் சந்தைத் தொகுதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால் அந்த இடத்தில் இயங்கி வருகின்ற வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகம் தற்காலிகமாக தலைமை அலுவலகத்துக்கு இடம்மாற்றப்படுகின்றது என்று பிரதேச சபை தவிசாளர் தி. பிரகாஸ் அறியத்தந்துள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் உடுவில் உப அலு வலகத்துடன் தொடர்பு கொள்பவர்கள் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம். உடுவில் உப அலுவலகத்துடன் இயங்கி வந்த ஆயுள்வேத வைத்திய சாலை மற்றும் பொது நூலகம் ஆகியன தொடர்ந்தும் அவ் விடத்திலேயே இயங்கும்.

**சந்தையின் உட்புறத்தே வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியிலுள்ள மரக்கறி மற்றும் பலசரக்கு வியாபார இடங்க ளும் சந்தையின் தெற்கு பகுதிக்கு தற்காலிகமாக இடம் மாற்றப் படவுள்ளன.**

பொது நூலகம் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு உள்நுழைகின்ற பாதை தற்காலிகமாக சந்தையின் மேற்குப் பக்கமாகவுள்ள சிங்கத்தின் கலட்டி வீதியிலிருந்து உள்நுழையத்தக்கவாறு மாற்றியமைக்கப்படவுள்ளது.

சந்தையின் உட்புறத்தே வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியிலுள்ள மரக்கறி மற்றும் பலசரக்கு வியாபார இடங்களும் சந்தையின் தெற்கு பகுதிக்கு தற்காலிகமாக இடம் மாற்றப்படவுள்ளன.

சந்தையின் மேற்குப்பக்கமாக உடுவில் மானிப்பாய் வீதியில் சிங்கத்தின் கலட்டி வீதி ஓரமாகவுள்ள வெற்றுக்காணி வாகன தரிப்பிடமாக பயன்படுத்தப்படவுள்ளது. மருதனார்மடம் சந்தைத் தொகுதி நிர்மாணத்துக்கென மேற்கொள்ளப்படும் மேற்குறித்த மாற்றங்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## ஆய்வு கூடங்களுக்கு கணினிகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அமைக் கப்பட்டுள்ள மஹிந்தோதய ஆய்வு கூடங்களுக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் கணினிகள் வழாங்கப்பட்டுள்ளன.

வலயத்தைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. ஆகியவற்றுக்கு தலா 28 கணினிகள் வீதம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.

மஹிந்தோதய திட்டத்தில் ஆய்வு கூடங்கள் அமைக்கப் பட்டுள்ள வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கும் கணினி கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டது.

ஒவ்வொரு பாடசாலையிலும் தலா 20 மில்லியன் ரூபா செலவில் மஹிந்தோதய ஆய்வு கூடம் அமைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## பிரதேச சபைக்குச் சொந்தமான கிரவலை ஏற்றியவர் பிடிபட்டார்

சண்டிலிப்பாய், மே 14

வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக குவிக்கப்பட்டிருந்த கிரவல் மண்ணை தந்திரமாக டிராக்டரில் ஏற்றிச் சென்ற ஒருவர் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் பதில் தவிசாளரிடம் கையுமெய்யுமாக அகப்பட்டுக் கொண்டார். தவிசாளர் எடுத்த உடனடி நடவடிக்கையைத் தொடர்ந்து ஏற்றிச் செல்லப்பட்ட கிரவல் மண் முழுவதும் பிரதேச சபையில் பறிமுதல் செய்யப்பட்டது.

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் பல கோடி ரூபா செலவில் ஐந்து வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகளுக்காக ஒப்பந்தகாரரால் ஏற்கெனவே கல், மண் என்பன தேவையான இடங்களில் குவிக்கப்பட்டிருந்தன. வீதிகளின் புனரமைப்புப் பணிகள் முடிந்த பின்பு வீதி வேலைகளுக்காக பறிக்கப்பட்டதில் எஞ்சிய கல், மண் என்பன பிரதேச சபைக்கே சொந்தமாகும். இந்த நிலையில் சுதுமலை தெற்கு மாவடி வீதியின் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து எஞ்சியிருந்த கிரவல் மண் பிரதேச சபைக்குத் தெரியாமல் டிராக்டரில் ஏற்றிச் செல்லப்பட்டது.

குறித்த மோசடி குறித்து பதில் தவிசாளருக்குக் கிடைத்த தகவலையடுத்து அவ்விடத் துக்கு தவிசாளர் விரைந்து சென்ற போது மண்ணைக் கடத்திய வர் தவிசாளரிடம் கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டார். தவிசாளர் எடுத்த உடனடி நடவடிக்கை யைத் தொடர்ந்து ஏற்றிச் செல்லப்பட்ட மூன்று டிராக்டர் கிரவல் மண் பிரதேச சபை வளாகத்தில் பறிக்கப்பட்டுள்ளது. (வ-115)

## சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாட்டை வெட்டிய 5 பேருக்கு அபராதம் விதிப்பு

தென்மராட்சி, மே 14

மாட்டை வெட்டி இறைச்சியை விற்கத் தயாரான வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட உடுப்பிட் டியைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐந்து பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் நேற்று அபராதம் விதிக்கப்பட்டது.

நுணாவில் மேற்குப் பகுதியில் சட்ட விரோதமாக மாடு வெட்டுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்குகிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த போது மாட்டை வெட்டிப் பங்கு போடும் நிலையில் இருந்த தொடர்புடைய ஐந்து பேரையும் கைது செய் தனர்.

அனுமதிப் பத்திரமின்றி மாடு வெட்டியதாக இந்த ஐந்து பேருக்கும் எதிராக நேற்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் ஐந்து பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித் தார். (ஒ-9)

## கதிர்காமம் செல்லும் பாதயாத்திரைக் குழுவில் சிங்கள பக்தரும்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலிலிருந்து கதிர்காமத்துக்குச் சென்று கொண்டிருக்கும் பாத யாத்திரையில் வெள்ளவத்தையைச் சேர்ந்த சிங்கள பக்தர் ஒருவரும் முதல் முறையாக இணைந்து கொண்டார்.

கடந்த சனிக்கிழமை காலை புறப்பட்ட இந்தப் பாத யாத்திரைக்குழுவினர் நேற்றுக் காலை பரந்தன் உமையாள் புரம் கண்ணகை அம்மன் கோயிலைச் சென்றடைந்தனர். அங்கு தங்கியிருந்து விட்டு இன்று காலை புறப்பட்டு தர்மபுரம் - நெத்தலி ஆறு பிள்ளையார் கோயிலைச் சென்றடைந்து தங்கி நின்று நாளைக் காலை முல்லை மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பை நோக்கி யாத்திரையைத் தொடர இருப்பதாக பாத யாத்திரைக் குழுத் தலைவரான காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகர் கோயில் தர்மகர்த்தாவான வேல்சாமி என அழைக்கப்படும் மகேஸ்வரன் தெரிவித்தார். சந்நிதி முருகன் திருவருளால், குழுவினர் செல்லும் இடமெல்லாம்பொதுமக்கள்உணவுஉட்பட அனைத்து வசதிகளையும் செய்து தருவதாக வேல்சாமி மேலும் தெரிவித்தார். (ஒ-173)

## உரிமை கோராத சைக்கிள்கள்

வடமராட்சி, மே 14

வல்வெட்டித்துறைப் பொலிஸார் உரிமைகோரப்படாத 6 சைக்கிள்களை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர். இவற்றில் 4 சைக்கிள்கள் லுமாலா வர்க்கத்தைச் சேர்ந்தவை.

அவற்றின் உரிமையாளர்கள் யாராவது இருப்பின் ஆறு மாத காலப்பகுதிக்குள் உரிமை கோரிப் பெற்றுக் கொள்ளு மாறும், இல்லாவிடின் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்றும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (வ-173)

## வடக்கின் நீர்வள அபிவிருத்தி குறித்த இருநாள் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், மே 14

வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாணத்தின் நீர்வளத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான இரண்டு நாள் ஆய்வரங்கு எதிர்வரும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் எல்லைக்கு உட்பட்ட 5 மாவட்டங்களிலும் குடி தண்ணீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கான நன்னீரின் பயன்பாடு அதிகரித்துச் செல்லும் அதேசமயம் நன்னீருக்கான பற்றாக்குறையும் அதிகரித்துச் செல்கிறது. மேலும், சூழல் விரோதச் செயற்பாடுகளினால் இருக்கின்ற நீரிலும் மாசுக்கள் கலந்து வருகின்றன. பூமி வெப்பமடைவதால் ஏற்படும் காலநிலை மாற்றங்களால் வருங்காலங்களில் அதிக வறட்சியை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களின் உயிர் ஆதாரமும் விவசாயப் பொருளாதாரத்தின் மூலாதாரமுமான நன்னீர் வளத்தைப் பாதுகாத்து அதனை நிலைபேறான அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டியுள்ளது. அதற்கு ஏற்ற கொள்கைகளை வகுத் துத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னோடியாக எதிர்வரும் செப்ரெம்பர் முதல் வாரத்தில் வடமாகாண நீர் வள அபிவிருத்தி தொடர்பான இரண்டு நாள் ஆய்வரங்கை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் நீரியலுடன் தொடர்புடைய நிபுணர்கள் இந்த ஆய்வரங்கில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம். ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் ஜூன் 05 ஆம் திகதிக்கு முன்பாக விவசாய அமைச்சு, இல 295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மின் னஞ்சல் முகவரிக்கோ தங்கள் பெயர் விவரங்களையும் ஆய்வுக் கட்டுரையின் உத்தேச தலைப்பையும் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

**சூழல் விரோதச் செயற்பாடுகளினால் இருக்கின்ற நீரிலும் மாசுக்கள் கலந்து வருகின்றன.**

## அறநெறி வழிபாட்டு முறை தொடர்பாகக் கலந்துரையாடல்

வலி.வடக்கு, மே 14

சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு, மாதகல் ஜம்புநாதேஸ்வரர் ஆலயத்தில் வலிகாமம் பிரதேச சைவ ஆலயங்களின் தர்மகார்த்தா சபை உறுப்பினர்கள், பரி பாலனசபை உறுப்பினர்கள், வழிபடுவோர் சபை உறுப்பினர்கள் மற்றும் இந்து மத குருமார்களுக்கு மான அறநெறி வழிபாட்டு முறைகள் சம்பந்தமான கலந்துரையாடலும் அதனைத் தொடர்ந்து செந்தமிழ் யாகமும் நடை பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)

## விசாரணையை துரிதப்படுத்துமாறு ஜூன் மாதம் கவனவீர்ப்பு போராட்டம்

### *காணாமற்போனோரின் உறவினர்களால் முன்னெடுப்பு*

யாழ்ப்பாணம், மே 14

இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையைத் துரிதப்படுத்தக் கோரி எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் முன்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் போராட்டம் நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக் கட்டப் போரின், இறுதிக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மற்றும் பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தனர். இவ்வாறு சரணடைந்தவர்கள் இன்று வரையில் விடுவிக்கப்படவில்லை. இவ்வாறான தொரு நிலையில் அவர்களைக் கண்டுபிடித்து தருமாறு ஆட்கொணர்வு மனு கடந்த வருடம் ஜூன் மாதம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் இன்னமும் இதற்கான தீர்வு கிடைக்கவில்லை.

தொடர்ந்தும் அரச தரப்புச் சட்டத்தரணிகளால் வழக்கு இழுத்தடிப்புச் செய்வதாக மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே குறித்த வழக்கு விசாரணையை துரிதப்படுத்தக் கோரி, வழக்கு விசாரணை இடம்பெறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் முன்பாக எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் இன்னமும் இதற்கான தீர்வு கிடைக்கவில்லை.**

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் சகல தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு காணாமற் போனோரின் உறவினர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ந-5)

## தமிழருக்கு நீதிகோரி தொடர் கவனவீர்ப்பு

### பிரிட்டன் பிரதமர் அலுவலகம் முன்பாக நாடு கடந்த தமிழீழ அரசு முன்னெடுப்பு

மே-18 தமிழீழத் தேசிய நாளை மையப்படுத்தி நாடு கடந்த தமிழீழ அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் பன்முகச் செயற்பாடுகளின் ஓர் அங் கமாக தமிழர்களுக்கான பரிகார நீதிகோரி, பிரிட்டன் பிரதமர் அலுவலகம் முன் தொடர் கவனவீர்ப்பு நிகழ்வொன்று நாடுகடந்த தமிழீழ அரசின் இளையோர் மற்றும் பண்பாட்டு விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரிட்டன் பிரதமர் அலுவலகம் முன் தொடங்கியுள்ள கவனவீர்ப்பு நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்தது. அது இவ்வாரம் முழுவதும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ளது.

கண்காட்சி, இலங்கை புறக்கணிப்பு விழிப்பூட்டல் பரப்புரை, துண்டுப்பிரசுர விநியோகம், கவிதை, உரை என பல்வேறு வடிவங்களில் ஈழத் தமிழினத்துக்கு நடந்தேறிய இனப்படுகொலைக்கு பரிகார நீதிகோரி அமையும் இந்த கவனவீர்ப்பு நிகழ்வில் ஒவ் வொரு நாளும் மாலை 7 மணிக்கு தெருவெளி நாடகமும், சுடரேந்திய வணக்கக் கூடலும் இடம் பெறுகின்றன.

இதேவேளை - வரும் மே 17 ஆம் திகதி சனிக்கிழமை லண்டனில் இடம்பெறவுள்ள இலங்கை புறக்கணிப்பு மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. (வ)

## மே 18 ஆம் திகதியை கரி நாளாக நினைவு கூருக

### 18 மே இயக்கம் அழைப்பு

மே 18 ஆம் திகதியை கரி நாளாக நினைவுகூருவோம் என்று 18 மே இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து அந்த இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வன் துயரங்கள் ஊடாக பயணித்த காலம் ஐந்தாண்டுகளைக் கடக்கின்றது. முள்ளிவாய்க்காலில் மூர்ச்சையாகிப் போனவர்களுக்கு எந்தப் பெறுமதியையும் தராத உலகம் எம்மை வெறுங்கையோடு பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கின்றது.

இந்த அலைந்துழலும் வாழ்க்கைப் பாகத்தில் எம்மிடம் எஞ்சியிருப்பதெல்லாம் எம் மீது திணிக்கப்பட்ட வன் கொடுமைகளின் நினைவுகள் மட்டும்தான். முள்ளிவாய்க்கால் பறித்துக் கொண்டவைகளிலிருந்து மிச்சமாய் இருக்கும் அந்த நினைவுகளையாவது நாம் இறுகப் பற்றிக் கொள்ள முயற்சிக்கின்றோம். இழந்தவைகளும் அதன் துயர வலிகளும் அந்த நினைவுகளால் ஒத்தடம் பெறுவதை உணர்கின்றோம்.

ஆறாத வடுவாகி நிற்கும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை 40 ஆயிரம் தமிழ் உயிர்களைத் தின்றதாக ஐ.நா .சொல்கின்றது.

களத்தில் நின்ற தமிழர்களுக்குத்தான் தெரியும் இன்னும் எத்தனை ஆயிரம் கொலைகள் சமநேரத்தில் நிகழ்ந்தன என்று. தாயின் கருவில் இருந்த சிசு, தொடக்கம் நாளை கட்டையேறத் தயாராயிருந்த மூத்தோர் வரைக்கும், கண் மூடித்தனமாகக் கொன்றொழித்தவர்கள் வெற்றியைக் கொண்டாடுகையில் நாம் ஒன்று கூடி ஒருதுளி கண்ணீரைக் காணிக்கையாக்கும் வழி வகையின்றி நிற்கின்றோம்.

இந்தக் காயங்களை சொற்களுக்குள் அடக்கி விட முடியாது. எம் அவலத்துக்கு மொழியில்லை. அதனால் தான் அது இன்னமும் மௌனித்தே கிடக்கின்றது.

இந்த நாள்களில் எம்மிடம் இருக்கும் துயர் வலிமை பெற வேண்டும். முள்ளிவாய்க்கால் தந்த துயர நினைவுகளை நினைந்துருகுதல் அந்த வலிமையைத் தரும் கணங்களாக இருக்கும். மே 18 இல் முள்ளிவாய்க்காலில் மரணித்த அனைத்து மக்களின் மரணப் பெறுமதியையும் கனதியாக்குங்கள்.

அன்றைய தினத்தை கரி நாளாகக் கடைப் பிடிப்போம். அதற்காக உங்கள் வீடுகளில் மே 18 ஆம் திகதி மாலை 6.10 மணிக்கு ஈகைச் சுடரேற்றுங்கள். அந்தக் குறுகிய வன்முறை வெறிக்குத் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்களுக்காக ஒரு நிமிட அக வணக்கத்தைச் செலுத்துங்கள். இந்த நாள்களில் மௌனித்த அந்த ஆன்மாக்கள் மேன்மை பெறட்டும். அவை எமக்கு வலிமை தரட்டும் -என்றுள்ளது. (வ)

## முசலி பிரதேசத்தில் சிங்கள குடியேற்றம்

யாழ்ப்பாணம், மே 14

முசலிப் பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றுவதற்காக இராணுவத்தினரின் துணையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஆளும் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்.

கடந்த வெள்ளிக்கிழமை, நாடாளுமன்றில் மீள்குடியேற்ற அமைச்சின் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-

"வன்னி மாவட்டத்தில் வசித்து போர் காரணமாக வேறிடங்களுக்குச் சென்ற மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதானது மந்த கதியிலேயே நடைபெறுகின்றது. அத்துடன் மீள்குடியமர்ந்தவர்களுக்கு போதியளவு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. குடிதண்ணீரைக் கூட பணம் செலுத்திப் பெறுக்கொள்ள வேண்டிய நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

மேலும் முசலிப் பிரதேசத்தில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்துக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற வகையில் அங்கு மீள் குடியேறுபவர்கள் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த பிரதேசத்தில் வசித்திருக்க வேண்டும். அல்லது அவர்களின் பெற்றோரோ, பெற்றோர்களின் பெற்றோரோ வசித்திருக்க வேண்டும்.

இடம்பெயர்ந்து உள்நாட்டில் வசித்த பிரதேசத்தில் வசித்த பதிவை இரத்துச் செய்து பிரதேச செயளாலரிடம் அல்லது பொறுப்பு வாய்ந்த அதிகாரியிடம் அதற்கான ஆவணங்களைப் பெற்று சமர்பிக்கப்படும் பட்சத்தில் மாத்திரம் தான் மீள்குடியேறுகின்ற பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன் படியே கடந்த காலங்களில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது. சிங்கள சகோதரர்களும் மீளக்குடியேறும் போது இதே நிபந்தனைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் இதனை மீள் குடியேற்ற அமைச்சு கண்காணிக்க வேண்டும்.

முசலிப் பிரதேச மக்கள், அண்மைக் காலமாக அங்குள்ள படையினரின் செயற்பாடுகள், அந்தப் பிரதேசத்தில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகளுக்குரியதாக இருப்பதாக அச்சம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு எழுத்து மூலமாக தெரிவித்துள்ளேன்.

அந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற முஸ்லிம், தமிழ் மக்கள் ஆளும், எதிர்கட்சி உறுப்பினர்கள், சிங்கள சகோதரர்கள் மீள்குடியேறுவதை ஆதரிக்கின்றனர். அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே மீள் குடியேற்ற இடம்பெற வேண்டும். அதை விடுத்து வேறு மாவட்டங்களில் வசித்தவர்களை அங்கு வந்து மீள் குடியேற்ற ஒரு போதும் விடப் போவதில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ந-5-18)

## பொலிஸ் கொன்ஸ்டபிள் அளுத்கமவில் கொலை

கொழும்பு, மே 14

அளுத்கம, தர்கா நகர பொலிஸ் நிலைய கொன்ஸ்டபிள் நேற்று முன்தினம் இரவு சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். அளுத்கம பிரதேசத்தில் நடைபெற்ற ஒரு வைபவ நிகழ்ச்சிக்குச் சென்று வீடு திரும்புகையிலேயே இவர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

50 வயதான டொன் சுமித் அஸாத் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார். 20 வயதுடைய அவரது மகனும் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்துள் ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்தக்கொலைச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான 43 வயது மதிக்கத் தக்க ரன்ஜித் சில்வா என்பவரையும் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது அளுத்கம வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். தர்கா நகரில் பெரும் பரபரப்பையும், சர்ச்சையையும் ஏற்படுத்திய

**அளுத்கம பிரதேசத்தில் நடைபெற்ற ஒரு வைபவ நிகழ்ச்சிக்குச் சென்று வீடு திரும்புகையிலேயே இவர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.**

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-10)


## மரண அறிவித்தல்



### திருமதி மகாலட்சுமி சிவனடியார்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி சிவனடியார் நேற்று செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சதாசிவம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவனடியாரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பத்மநாதனின் (J.P) அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னையா, சிவகுருநாதன் மற்றும் செல்வராசா காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் ராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத் துனியும் செல்வராணி, சாந்தா, சரவணபவானந்தன், சத்தியநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும் கதிரமலை, பரஞ்சோதி, கோணேஸ்வரி, நந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஷாலினி கணேசமூர்த்தி நந்தினி சிவகௌரி ஜெயக்குமார், சதீஸ்வரன் குமுதா, பத்மநிதி சௌந்தரராஜன் தனுசா சசிகரன் சிற்சரூபன் டிலாஜினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சகானா பூர்விகா, கிருஷானா, கிருஷாந்த், நர்த்தனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,
திருநெல்வேலி.

(48062)

தகவல்:
குடும்பத்தினர்.

# மாநகர சபையில் கடமையாற்றும் அனைவருக்கும் நிரந்தர நியமனம்

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 14

யாழ்.மாநகர சபையில் கடந்த காலங்களிலிருந்து கடமையாற்றும் அனைத்து ஊழியர்களுக்குமான நிரந்தர நியமனம் வழங்கப்படும். பொருத்தமான பணிகளுக்கு அனைத்து ஊழியர்களும் நியமிக்கப்படுவர் என்று யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

பதில் தொழிலாளர்கள் சிலருக்கு இதுவரை நியமனம் வழங்கப்படாமல் இழுபறியில் இருப்பது தொடர்பில் அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**'யாழ்.மாநகர சபையில் பணியாளர்களை நியமிப்பது தொடர்பாக சபையால் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு எந்தப்பணியாளர்களை எத்தகைய பணிகளுக்கு அமர்த்தலாம் எனத் தீர்மானிக்கும்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-


"யாழ்.மாநகர சபையில் பணியாளர்களை நியமிப்பது தொடர்பாக சபையால் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு எந்தப்பணியாளர்களை எத்தகைய பணிகளுக்கு அமர்த்தலாம் எனத் தீர்மானிக்கும். அந்தத் தெரிவின் அடிப்படையில் அந்தந்த பதவிகளுக்கு ஊழியர்கள் நியமிக்கப்படுவர்.

இந்தக் குழுவின் ஆய்வு நடவடிக்கைகள் முடிவடைய சிறிது காலம் தேவைப்படுவதால் நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் தாமதமடைகின்றன. எனினும் சபையில் கடமையாற்றிய எந்தப் பணியாளர்களும் வெளியில் அனுப்பப்படமாட்டார்கள் பொருத்தமான பணிகளுக்கு அவர்கள் நியமிக்கப்படுவர்" என்றார்.

இதேவேளை 2008 ஆம் ஆண்டு தொடக்கமும், 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தும் மாநகர சபையில் பதில் தொழிலாளர்களாக கடமையாற்றி வந்த தொழிலாளர்கள் 2013 ஆம் ஆண்டு மாநகர சபையின் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டனர். அதன் பின்னர் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தியதையடுத்து அவர்களுக்கு இருவாரங்களில் நியமனம் வழங்கப்படும் என்று மாநகர சபையால் உறுதியளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 37 பேருக்கு நேர்முகத்தெரிவு நடத்தப்பட்டு 10 பேர் நியமனத்தில் இருந்து விலக்கப்பட்டனர்.

மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்காதவர்களே இவ்விதம் விலக்கப்பட்டதாக அதற்குக் காரணம் கூறப்பட்டது. எனினும் மாநகர சபை எல்லைக்கு வெளியில் வசிப்பவர்களும் மாநகரசபையில் பணியாற்றி வருகின்றனர். இந்த நிலையில் தமக்கான நியமனத்தை மாந்கர சபை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்வதாகவும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-14)

## பப்பாசிச் செய்கை குடாநாட்டில் அமோகம்



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.குடாநாட்டில் இம்முறை பப்பாசிச் செய்கை அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளது. அனேகமான விவசாயிகள் 'ரெட்லேடி' இன பப்பாசிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி செய்கையில் ஈடுபட்டனர். இதன் மூலம் விவசாயிகள் அதிகளவில் பப்பாசியை அறுவடை செய்தும் வருகின்றனர்.

பப்பாசிப் பழங்கள் அதிகளவில் சந்தைக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலை திடீரென சரிவடைந்துள்ளன. முன்னர் கிலோ 60 ரூபாவரை விற்கப்பட்ட பப்பாசி தற்போது கிலோ 40 ரூபாவாக விற்பனையாகின்றது. (வ-17)


## தென்மராட்சி பிரதேச முதியோருக்கு ஆலயச் சுற்றுலா

தென்மராட்சி, மே 14

தென்மராட்சி பிரதேச முதியோர் பேரவையினர் பிரதேசத்திலுள்ள முதியோர்களை யாழ். மாவட்ட ஆலயங்களைத் தரிசிக்க அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாகாண சமூக சேவைகள் திணைக்கள அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ள இந்த ஆலய சுற்றுலாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 55 முதியோர்கள் அழைத்துச்செல்லப்படவுள்ளனர்.

ஆலய சுற்றுலாவில் பங்குபற்ற விரும்பும் முதியோர்கள் தமது விவரங்களை செயலாளர், தென்மராட்சி பிரதேச முதியோர் பேரவை, இல.16, மகளிர் கல்லூரி வீதி, சாவகச்சேரி என்னும் முக்வரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



பண்டத்தரிப்பு புனித பாத்திமா ஆலயத்தின் நவ நாள் வருடாந்த திருவிழா கடந்த பத்து தினங்களாக நடைபெற்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலிப் பூசையும் 9 மணிக்கு அன்னை வெளி வீதியுலா வரும் நிகழ்வும் இடம் பெற்றன. திருப்பலிப் பூசையை யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும் அவருடன் இணைந்து ஏனைய அருட்தந்தையரும் நிறைவேற்றினார்கள். நேற்றைய இறுதி நாள் நிகழ்வில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அடியவர்கள் கலந்து கொண்டதுடன் படை அதிகாரிகளும் பூசையில் கலந்து கொண்டனர். (வ-86)

## சந்தைகளில் தாராளமாக மா, பலா பழங்கள்

யாழ்ப்பாணம்,மே 14

தற்போது மாம்பழம், பலாப்பழம் ஆகிய பழவகைகளின் சீசன் ஆரம்பமாகியதை அடுத்து அவை பெரிய அளவில் சந்தைக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலை திடீரென சரிவடைந்துள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம், மருதனார்மடம், சங்கானை போன்ற சந்தைகளில் பழவகைகள் தாராளமாகத் தினமும் வந்து சேர்கின்றன.

விலாட்டு ஒன்று 10 ரூபாவாகவும், கறுத்தக்கொழும்பான் 20 ரூபாவாகவும், பலாப்பழம் ஒன்று 75 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

காற்றுக் காலம் ஆரம்பமாகியதை அடுத்தே இந்த பழவகைகளின் வருகை அதிகரித்துள்ளது.

அடுத்த வாரங்களில் அவற்றின் விலை மேலும் சரியலாம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். (வ-17)

## ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்தோருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், மே 14

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறும் உதவி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

நாளைமறுதினம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனால் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய அவர்கள் ஆசிரிய உதவியாளர்களாக உள்ளீர்க்கப்பட்டு கடந்த 2012 மே 15 ஆம் திகதி தொடக்கம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன.

இன்று புதன்கிழமையுடன் பயிற்சிக் காலம் முடிவடைவதால் அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் 3 ஆண்டுகளும், யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் 2 ஆண்டுகளும் நியமனம் வழங்கப் பட்ட அந்தந்தப் பாடசாலைகளில் கட்டாயமாகக் கடமையாற்ற வேண்டும் என்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயிற்சிகளை நிறைவு செய்த கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கும் ஏனையோர் வட மாகாணத்தின் ஏனைய மாவட்ட பாடசாலைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# நகரப் பகுதியின் அபிவிருத்தி குறித்து மக்களிடம் கருத்தறியும் நடவடிக்கை

## சாவகச்சேரி நகர சபையால் ஆரம்பம்

தென்மராட்சி, மே 14

சாவகச்சேரி நகர சபையினர் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் தேவைகளை அடையாளப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல்களை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஆரம்பித்துள்ளனர்.

இதன் பிரகாரம் நுணாவில் கிழக்கு பிரிவு (ஜே/306) மக்களுடனான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்திலும், எதிர்வரும் 16 ஆம் திகதி பி.ப.3.30 மணிக்கு மீசாலை மேற்குப் பிரிவு (ஜே/319) மக்களுக்கான கலந்துரையாடல் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்திலும்.

கல்வயல் பிரிவு (ஜே/305) மக்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கல்வயல் பொது நோக்கு மண்டபத்திலும் இடம்பெறும்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் பிரிவு (ஜே/300) மக்களுடனான கலந்துரையாடல் கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றபோது பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்ட மக்களிடம் முன்னுரிமை அடிப்படையில் வேலைத் திட்டங்களை எழுதி வழங்குமாறு தனித்தனி யான படிவங்கள் கையளிக்கப்பட்டன.

மக்களால் கையளிக்கப்பட்ட படிவங்களில் பெரும்பாலான (96 வீதமான) தெரிவாக சாவகச்சேரி டச்சு வீதி புனரமைப்பு, கண்டுவில் குளம் ஆழமாக்கல், வாய்க்கால் வெட்டுதல் போன்றவை அடையாளப்படுத்தப்பட்டன.

கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ள வேண்டிய அபி விருத்திப் பணிகள் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்காக ஐந்து பேர்கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. நகர சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்து ரையாடலுக்கு நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமை வகித்தார். (வ-9)

# 290 முதல் 305 தொகுதிகள் கிடைக்கும் என்கிறது பா.ஜ.க.

புதுடில்லி, மே 14
நடைபெற்று முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு இந்த முறை 290 முதல் 305 தொகுதிகள் வரை கிடைக்கும் என்று நம்புவதாக பா.ஜ.க. தெரிவித்துள்ளது.
நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் நடந்து முடிந்துள்ள நிலையில், நாளை மறுதினம் வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. இந்நிலையில் தேர்தலுக்குப் பின்னரான கருத்துக் கணிப் புகள் பா.ஜ.க. அமோக வெற்றி பெறும் என்று கூறுகின்றன. அதுகுறித்துக் கருத்துத் தெரி விக்கும்போதே பா.ஜ.க. இவ்வாறு வெளிப் படையாகக் கருத்துத் தெரிவித் துள்ளது.
இதுகுறித்து அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"உத்தரப் பிரதேச மாநிலத்தில் மட்டும் 50 முதல் 55 இடங்கள் வரை எதிர்பார்க்கின்றோம். இந்த முறை ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகள் தேர்தலின் போது எமக்காக கடினமாக உழைத்ததை ஒப்புக் கொள் கின்றோம்"- என்று தெரிவித் துள்ளது. (ற)

## மன்மோகனுக்கு பிரியாவிடை கொடுத்தது பிரதமர் அலுவலகம்



புதுடில்லி, மே 14
பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, பிரதமர் அலுவலக பணியாளர்கள் எழுந்து நின்றபடி பிரியாவிடை கொடுத்தனர். நெகிழ்ச்சியான இந்த நிகழ்வின்போது, சிலரது விழிகளில் இருந்து கண்ணீர்த் துளிகள் வழிந்தன,
மே 17ஆம் திகதி பிரதமர் பதவியில் இருந்து விடை பெறும் மன்மோகன் சிங்குக்கு நேற்று பிரதமர் அலுவலக பணியாளர்கள் சுமார் 110 பேர், சௌத் ப்ளாக்கில் பிரியாவிடை கொடுத்தனர்.
பிரதமர் பதவியை 10 ஆண்டு காலமாக வகித்து வந்த மன்மோகன் சிங்குக்கு, பிரதமர் அலுவலகம் பிரியாவிடை வழங்கிய நிகழ்வு மிகவும் நெகிழ்ச்சிக்குரியதாக இருந்தது. பிரதமருக்கு அனைவரும் எழுந்து நின்று மரியாதை அளித்ததாக, பிரதமர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
உங்கள் அனைவரின் பணிகளுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார் என்று பிரதமர் அலுவலகப் பணியாளர்களிடம் நெகிழ்ச்சியுடன் கூறினார் மன்மோகன் சிங்.
ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 10 ஆண்டு காலம் பிரதமராக இருந்த மன்மோகன் சிங்கை, பணியாளர்கள் சிலர் கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தனர். அப்போது, பிரதமர் மன்மோகன் சிங்குடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், முதன் மைச் செயலர் புலோக் சட்டர்ஜி, பிரதமரின் ஆலோசகர் டி.கே.ஏ. நாயர் மற்றும் பிரதமரின் ஊடக ஆலோசகர் பங்கஜ் பச்சௌரி ஆகியோர் உடன் இருந்தனர். (ற)

## ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு



புதுடெல்லி, மே 14
பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வரும் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.
முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் உள்ள சில சொத்துகளுக்கு உரிமை கோரி லெக்ஸ் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அதனிடையே, லெக்ஸ் நிறுவன வழக்கு முடியும் வரை சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடை விதிக்கக்கோரி ஜெயலலிதா தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த மனுவை நேற்று விசாரித்த உச்ச நீதிமன்றம், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க மறுத்துவிட்டது. இதைத் தொடர்ந்து, ஜெயலலிதா தரப்பு வழக் கறிஞர் மனுவை திரும்பப் பெற்றுக் கொண்டார். (ற)

## காங்.தோல்வியடைந்தால் ராகுல் காந்தி காரணமல்ல

*சகில் அகமது கூறுகின்றார்*

புதுடெல்லி, மே 14
தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைச் சந்தித்தால் அதற்கு ராகுல் காந்தி காரணமாக மாட்டார் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான சகில் அகமது.
புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மையக் குழுக் கூட்டத்துக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
"ராகுல் காந்தி நாட்டை ஆளவில்லை. காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் அவரும் ஒருவர். தேர்தல் முடிவுகள் எப்படி அமைந்தாலும் அதற்கு காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அனைவரும்தான் பொறுப்பு.
கருத்துக் கணிப்புக்களை காங்கிரஸ் கட்சி நம்பவில்லை. கடந்த 2004 மற்றும் 2009 ஆம் ஆண்டு தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி கருத்துக் கணிப்புக்களை பொய்யாக்கிக் காட்டியுள்ளது."- என்று தெரிவித்துள்ளார். (ற)




கூவாகம் கூத்தாண்டவர் கோயில் திருவிழாவில் விஜயவாடாவை சேர்ந்தச் சகானா "மிஸ் கூவாகம் 2014 பட்டத்தை வென்றார். உலகப் பிரசித்தி பெற்ற கூவாகம் கூத்தாண்டவர் கோயில் சித்திரைத் திருவிழாவுக்காக ஆண்டுதோறும் நாடு முழுவதும் இருந்து பல்லாயிரக்கணக்கான திருநங்கைகள் விழுப்புரத்தில் கூடுவது வழக்கம். இத்திருவிழாவின் ஒரு நிகழ்வான "மிஸ் கூவாகம் பேஷன் ஷோ" போட்டி நேற்று நடைபெற்றது. எய்ட்ஸ் விழிப்புணர்வை வலியுறுத்தி நடத்தப்படும் இந்த பேஷன் ஷோவில் 50க்கும் மேற்பட்ட திருநங்கைகள் கலந்து கொண்டனர். 'மிஸ் கூவாகம்' பட்டத்தை விஜயவாடாவை சேர்ந்த சகானா தட்டிச் சென்றார். அவருக்கு நடிகர் சரத்குமாரும், அவரது மனைவி ராதிகா சரத்குமாரும் பட்டங்களைச் சூட்டி, பரிசுகளை வழங்கினார்கள்.

## தேர்தல் கருத்துக் கணிப்பு பொழுது போக்கும் வேலை

*ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் தெரிவிப்பு*


டில்லி, மே 14
தேர்தல் கருத்துக்கணிப்பு என்பது ஒரு மிகச் சிறந்த பொழுது போக்குவேலைஎன்று தெரிவித்துள்ளார் ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா.



நேற்றுமுன்தினம் வெளியான தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புத் தொடர்பாக தனது டுவிற்றர் பக்கத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"இந்தக் கருத்துக் கணிப்புக் களைப் புறக்கணிக்கின்றேன். கருத்துக்கணிப்புகள் எல்லாம் பொழுது போக்கு வேலை. இதன் நம்பகத்தன்மை குறித்து ஏதும் கூற இயலாது. குறிப் பிட்ட மாநிலக் கட்சிகளுக்கு வெற்றி வாய்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கருத்துக்கணிப்புகளுக்கு இடையே மிகுந்த வேறுபாடு இருக்கிறது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# துரத்திய கணவனிடம் இருந்து தப்பித்து ஓடிய மனைவி காதலனுடன் கிணற்றுக்குள் தவறி விழுந்து படுகாயம்

கையும் களவுமாகப் பிடிக்க வந்த தமது கணவனிடம் இருந்து தப்பிப்பதற்காக தலை தெறிக்க ஓடிய மனைவியும் அவரது காதலனும் எதிர்பாராத விதமாக 60 அடி ஆழ கிணற்றில் விழுந்து படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் கிருஷ்ண கிரி மாவட்டத்தில் உள்ள சின்னக் கிணறு என்ற பகுதியில் நடந்துள்ளது.
சின்னகிணறு பகுதியைச் சேர்ந் த துர்வாசன் (வயது-39). [illegible] மனைவி மலர்க்கொடி (வயது-30). இவர்களுக்கு 3 வயதில் ஆண் குழந்தையொன்று உள்ளது.
இந்நிலையில் துர்வாசனின் மனைவி மலர்க்கொடிக்கும் வேலன் (வயது-35) என்வருக்கும் முறைதவறிய உறவு இருந்துள்ளது. இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்துள்ளனர்.
அது குறித்து அறிந்த துர்வாசன், சில நாள்களுக்கு முன்பு மனைவியை கண்டித்துள்ளார். அப்போது மலர்க்கொடி தனக்கு வேலனுடன் பழக்கம் இல்லை என்று கூறியுள்ளார்.
அதை ஏற்க மறுத்த துர்வாசன் ஊர் பஞ்சாயத்தில் முறையிட்டுள்ளார். அங்கு, தனது கணவர் தன்மீது அபாண்டமாக பொய்க் குற்றம் கூறுவதாக மலர்க்கொடி தெரிவித்தார்.
அதையடுத்து ஊரார், துர்வாசனிடம்உன்மனைவிமீதுஅபாண்டமாக குற்றம் சாட்டக் கூடாது. உனக்கு அவள் மீது சந்தேகம் இருந்தால் கையும் களவுமாகப் பிடித்து வா எனக் கூறியுள்ளனர். துர்வாசன் மனைவியை கையும் களவுமாகப் பிடிக்கத் திட்டமிட்டார். அதன்படி அவர் நேற்றுமுன்தினம் தான் வெளியூர் செல்வதாக கூறிவிட்டு வீட்டைவிட்டுவெளியேசென்று பதுங்கியிருந்துள்ளார்.
அன்று நள்ளிரவு வேலன் மலர்க்கொடியைச் சந்திக்க வந்துள்ளார். அதைப் பார்த்து ஆத்திரமடைந்த துர்வாசன் கூச்சலிட்டபடி ஓடிவந்தார். இதனால் அதிர்ச்சியடைந்த அந்த ஜோடி துர்வாசனிடம் சிக்காமல் தப்பிப்பதற்காக



அங்கிருந்து தலைதெறிக்க ஓடினார். ஆனாலும் துர்வாசன் அவர்கள் இருவரையும் விரட்டினார். தலைதெறிக்க ஓடிய அந்த ஜோடி எதிர்பாராதவிதமாக 60 அடி ஆழ கிணற்றுக்குள் தவறி விழுந்தனர். கிணற்றில் தண்ணீர் இல்லாததால், உள்ளே விழுந்த வேகத்தில் இருவரின் கால்களும் முறிந்தன. இவர்களின் அலறல் சத்தம் கேட்டு கிராமத்தினர் அங்கு திரண்டனர்.
இதுபற்றி தகவலறிந்த பொலிஸாரும் தீயணைப்பு வீரர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். ஒரு மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு இருவரையும் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்தச் சம்பவம் குறித்து தற்போது பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர். (ற)

# கிழக்கு உக்ரைன் விடுதலை கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு

கீவ், மே 14
உக்ரைன் நாட்டில் இருந்து கிழக்குப்பகுதி விடுதலை அடைந்து விட்டது என்று அங்குள்ள ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். அத்துடன் கிழக்குப் பகுதியை ரஷ்யாவுடன் இணைக்கவும் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். இது குறித்து ரஷ்யா உடனடியாக பதில் எதுவும் அளிக்கவில்லை. ஆயினும் கிளர்ச்சியாளர்களுடன் உக்ரைன் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்று அந்த நாடு கேட்டுக் கொண்டுள்ளது.
உக்ரைன் அதிபராக இருந்த விக்டர் யானுகோவிச், தனக்கு எதிராக உள்நாட்டில் கிளர்ச்சி வெடித்ததையடுத்து நாட்டை விட்டு வெளியேறி ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார். அதனையடுத்து உக்ரைன் அதிபராக புதிதாக பதவியேற்ற அலெக்ஸாண்டர் துர்ச்சினோவ், தங்கள் நாட்டை ஐரோப்பிய யூனியன் அமைப்பில் சேர்ப்பதற்கு அதிக ஆர்வம் காட்டவே, அதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.
இதனிடையே, உக்ரைனுக்கு எதிராக கிரீமியா பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிரீமியாவில் பொதுவாக்கெடுப்பு நடத்தி ரஷ்யாவுடன் அப்பகுதியை கிளர்ச்சியாளர்கள் இணைத்தனர். இதே போல், உக்ரைனின் கிழக்குப் பகுதியான டொனெட்ஸ்க் மற்றும் லூகான்ஸ்க் பகுதியிலும் உக்ரைன் அரசுக்கு எதிராக கிளர்ச்சி வெடித்தது.
அந்தப் பகுதியில் உள்ள உக்ரைன் அரசு கட்டடங்கள், தொலைக்காட்சி நிலையங்கள் உள்ளிட்டவற்றை கிளர்ச்சிப் படையினர், தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துடன், உக்ரைனுடன் நீடிப்பதா? அல்லது வேண்டாமா? என்பது தொடர்பாக அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களிடையே ஞாயிற்றுக்கிழமை கிளர்ச்சியாளர்கள் பொது வாக்கெடுப்பு நடத்தினர். இதில் 90 சதவீத மக்கள், உக்ரைனில் இருந்து பிரிந்து தனித்துச் செயல்படுவதை ஆதரித்து வாக்களித்தனர்.
இதனையடுத்து உக்ரைனில் இருந்து டொனெட்ஸ்க் பகுதி விடுதலையடைந்து விட்டதாக கிளர்ச்சியாளர்கள் திங்கட்கிழமை அறிவித்துள்ளதுடன் ரஷ்யாவுடன் டொனெட்ஸ்க் பகுதியை இணைக்கவும் கிளர்ச்சிப் படையினர் விருப்பம் தெரிவித்தனர்.
அதேவேளை, உக்ரைன் நாடாளுமன்றத்தில் அந்தநாட்டின் அதிபர் அலெக்ஸாண்டர் துர்ச்சினோவ் உரையாற்றுகையில், பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களால் உக்ரைனின் கிழக்குப் பகுதியில் நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பு எந்தச் சட்ட விதியையும் கடைப்பிடிக்காத போலி நாடகம்.
இது கொலை, கடத்தல், வன்முறை மற்றும் பிற தீவிர குற்றங்களுக்கு இணையாகக் கருதப்படக்கூடியது. சட்டபூர்வமான நடவடிக்கையால் மட்டுமே அதற்கான நீதியை நிலைநாட்ட முடியும். அந்தப் பகுதியில் வன்முறையைக் கைவிட்டு சட்டப்படி தங்களின் கோரிக்கையைமுன்வைக்க தயாராக இருந்தால் அவர்களுடன் தொடர்ந்து பேச்சு நடத்த அரசு உறுதியாக இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## அதிகளவு மதுவால் 10 வினாடிக்கு ஒருவர் சாவு

லண்டன், மே 14
உலகெங்கும் அதிக அளவில் மது குடிப்பதால் 10 வினாடிகளுக்கு ஒரு நபர் உயிரிழக்கின்றார் என்று உலக சுகாதார மையம் அதிர்ச்சித் தகவலொன்றை வெளியிட்டுள்ளது.
மதுப்பழக்கம் தொடர்பான உலக சுகாதார மையத்தின் இந்த புதிய அறிக்கையில் கடந்த 2012 ஆம் ஆண்டு அதிக அளவில் மது அருந்தியதால் 3.3 மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஐ.நா. அமைதிப் படைக்கு முதலாவது பெண் தளபதி

நியூயோர்க், மே 14
ஐக்கிய நாடுகள் சபையின் உலக அமைதிகாக்கும் படைக்கு முதன்முறையாக ஒரு பெண் தளபதி நியமிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ - மூன்,
"உலக அமைதி காக்கும் படைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நோர்வேயைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கிறிஸ்டின் லுண்ட் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதியில் இருந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவுள்ளார்.
துருக்கியின் சைப்ரஸ் பிரிவுக்கும், கிரீசிற்கும் இடையில் உள்ள 112 மைல் நிலப்பரப்பும், 900 இராணுவத் துருப்புகளும் இவரது கண்காணிப் பின்கீழ் செயற்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



ஈரான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைநகர் டெஹ்ரானில் ஜனாதிபதி ஹசன் ரஹானியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ற)

## கார் ஓட்டிய 2 வயது குழந்தை


பெர்லின், மே 14
ஜேர்மனியில் தனது தந்தைக்குத் தெரியாமல் 2 வயதுச் சிறுவன் ஒருவன் 'ஸ்டார்ட்' செய்த கார் ஒரு கம்பத்தில் மோதி நின்றது.
தலைநகர், பெர்லினைச் சேர்ந்த மிரான் கன் என்ற அந்தச் சிறுவன், தனது தந்தை தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில் இந்தச் சாகசத்தை செய்திருக்கிறான்.
இந்த சாகசச் செயலுக்காக, யாருக்கும் தெரியாமல் கார்ச் சாவியை எடுத்துக் கொண்டதுடன், கார் நிறுத்துமிடம் செல்வதற்கான மின்தூக்கி (லிஃப்ட்) பொத்தான்களை இயக்குவதற்காக ஒரு சிறிய நாற்காலியையும் அந்தச் சிறுவன் சமயோசிதமாக எடுத்துச் சென்றிருக்கிறான்.
'ரிமோட் கன்ட்ரோல்' முறையில் வெற்றிகரமாக கதவைத் திறந்த அவன், முதல் கியரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தக் காரை 'ஸ்டார்ட்' செய்ததும், அது நகரத் தொடங்கியிருக்கிறது.
அங்கிருந்தவர்கள் அனைவரும், 'மெர்ஸிடிஸ்' கார் ஒன்று நகருவதையும், அதன் ஓட்டுநர் இருக்கையில் ஒரு குழந்தை இருப்பதையும் பார்த்து திகைத்துள்ளனர்.
நகர ஆரம்பித்த கார், நகரத் தொடங்கிய இடத்திலிருந்து சிறிது தூரத்திலிருந்த கம்பத்தில் மோதி அந்தக் கார் நின்று விட்டதால் அதிர்ஷ்டவசமாக பெரிய விபத்து எதுவும் நிகழவில்லை. (ற)

## அமெ. தொழில்நுட்பத்துடன் டிரோன் தயாரிக்கிறது ஈரான்

தெஹ்ரான், மே 14
ஈரான் அணு மையங்களை வேவு பார்ப்பதற்காக அமெரிக்காவால் அனுப்பப்பட்டு, ஈரானால் கைப்பற்றப்பட்ட ஆளில்லா உளவு விமானங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய உளவு விமானங்கள் தயாரிக்கப்படவுள்ளன என்று அந்த நாடு அறிவித்துள்ளது.
அந்த நாட்டின் அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பான காட்சிகளில், 'ஆர்.க்யூ-170' வகையைச் சேர்ந்த அமெரிக்க விமானத்தைப் போலவே வடிவமைக்கப்பட்டிருந்த விமானத்தின் படங்கள் இடம் பெற்றிருந்தன.
இதுகுறித்து ஈரானிய அதிகாரி ஒருவர் கூறுகையில்,
"கைப்பற்றப்பட்ட அமெரிக்க விமானத்தின் ரகசியக் குறியீடுகளை எங்களது பொறியியலாளர்கள் வெற்றிகரமாகக் கண்டுபிடித்துள்ளனர். அதனை அடிப்படையாகக் கொண்டு புதிய ஆளில்லா உளவு விமானங்களை உருவாக்குவோம்.
இந்த வகையில் தயாரிக்கப்படும் எங்களது விமானம் விரைவில் பறக்க விடப்படும்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## விமானங்களுக்கு இலவச பாதை அறிவிப்புச் சேவை
## பிரிட்டனின் செயற்கைக்கோள் வலயமைப்பான இன்மர்சாட் புதிய திட்டம்

லண்டன், மே 14
உலகிலுள்ள அனைத்துப் பயணிகள் விமானங்களுக்கும் அடிப்படையான ஒரு பாதை அறிவிப்பு சேவையை இலவசமாக வழங்குவதற்கு பிரிட்டனின் செயற்கைக்கோள் வலையமைப்பு நிறுவனமான இன்மர்சாட் முன்வந்துள்ளது.
மலேசிய விமானமான எம்.எச். 370 கடந்த மார்ச் 8ஆம் திகதி சுவடே இல்லாமல் காணாமற் போனதை அடுத்தே இன்மர்சாட் இந்தச் சேவையை வழங்க முன்வந்துள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இன்மர்சாட்டின் மூத்த துணைத் தலைவர் கிறிஸ் மெக்லவ்லின்,
"உலகிலுள்ள அதிகமான விமானங்களில் தொண்ணூறு சதவீதமானவற்றில் இன்மர்சாட்டின் கருவி ஏற்கனவே இருக்கிறது. எனவே எவ்வித செலவும் இல்லாமல் விமானப் போக்குவரத்துத் துறை உடனடியாக தீர்வு காண்பதற்கான வழி இது தான்"- என்று தெரிவித்துள்ளார்.
இந்த இலவச சேவை மூலம், பறக்கும் விமானங்கள் இருக்கும் இடம் பற்றி துல்லியமாக தகவல் வழங்க முடியும். பறக்கின்ற ஒரு விமானம் தான் இருக்கும் இடத்தை செயற்கைக்கோள் துணை கொண்டு அறிந்து அந்த விவரத்தையும் அது பயணிக்கும் வேகம், உயரம் பற்றிய தகவல்களையும் இன்மர்சாட்டின் உலக லாவிய செயற்கைக்கோள் கட்டமைப்புக்கு 15 நிமிடங் களுக்கு ஒரு முறை அனுப்பிக் கொண்டிக்கும் வகையிலான கட்டமைப்பு இதுவாகும்.
'சற்றலைட் டிராக்கிங்' என்று சொல்லப்படுகின்ற செயற்கைக்கோள் மூலமாக பாதையை அறிவிக்கும்முறையை விமான நிறுவனங்கள் பயன்படுத்தத் தயங்குவது பெரும்பாலும் அது அதிக செலவாகும் என்பதால்தான். அந்தச் சேவையை இன்மர்சாட் இலவசமாக வழங்க முன்வந்திருப்பதன் மூலம், பறக்கும் விமானத்தின் இடத்தை எப்போதுவேண்டுமானாலும் துல்லியமாக அறிந்துகொள்ள உதவும் என்பதால் அது நிச்சயம் விமானப் போக்குவரத்துதுக்கு துறைக்கு பெரிய உதவியாக அமையும்.
மலேசிய விமானம் காணாமல் போன பின்னணியில் உலக விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் எவ்வித மான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது குறித்து சிவில் விமானப் பயண நிர்வாக அமைப்பு தீவிரமாக ஆராய்ந்து வரும் நிலையில் இன்மர்சாட் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.
போயிங் 777 ரகத்திலான பெரிய விமானமான எம்.ஹெச்-370 விமானம் தடயமே இல்லாது மறைந்து போனமை பலருக்கும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. ஒரு விமானத்தை அடையாளம் காட்டக்கூடிய கருவிகள் அதன் உள்ளிருந்தே நிறுத்தப்படலாம் என்பதும், பூமியில் உள்ள ராடார்களின் வீச்சை விட்டு நகர்ந்து விட்டால், ஒரு விமானத்தின் இடம் பற்றி கண்டறிய வழியில்லாமல் இருப்பதும் ஏற்க முடியாத விடயமாக இருக்கிறது. இன்மசார்ட்டின் இந்தச் சேவை எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க வழிகோலலாம்.
மலேசிய விமானத்தில் இருந்த இன்மர்சாட் கருவியில் இருந்து சற்று நேரம் வந்த மின் அலை ஒலிச் சமிக்ஞைகளைக் கொண்டே இந்தியப் பெருங்கடல் பகுதியில் அதன் எச்சங்களைத் தேட நடவடிக்கை எடுக்கப்பட்டன. (ற)



இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் அனுஷ்டிக்கப்படவுள்ள வெசாக் போயா தினங்களை யொட்டி கொழும்பை அண்டிய பகுதியில் நிர்மாணிக் கப்பட்டுள்ள வெசாக் தோரணம்.

# வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக சிவிலியன் ஒருவரையே நியமிக்க வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு. மே 14
தற்போது வடமாகாண சபை யின் ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியொருவரே செயற்பட்டு வருகிறார். இது தொடர்பில் எமக்கு உடன்பாடு இல்லை. அதே சமயம் புதிய ஆளுநராகவும் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவரே நியமிக்கப்படவுள்ளார் என அறிய முடிகிறது. இதனை ஏற் றுக்கொள்ள முடியாது. சிவி லியன் ஒருவரே ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கூறியிருக்கிறார் ஜன நாயக இடதுசாரி முன்னணி யின் தலைவரும் சமூக ஒரு மைப்பாடு அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார.

அமைச்சர் வாசுதேவ நாண யக்கார இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வடக்கின் முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரனுடன் கலந்துரையாடி அவரின் இணக்கப்பாட்டுடனேயே ஆளுநர் நியமனம் செய்யப்பட வேண்டும். அது மட்டுமன்றி வடக்கு மாகாண சபை செய லாளர், பொலிஸ் அத்தியட்சகர் போன்றவர்களின் நியமனங் களின் போதும் முதலமைச்ச ருடன் பேச்சு நடத்தி முடிவு எடுக்க வேண்டும். இது குறித்து அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசு இந்த நடைமுறையைப் பின்பற்றுவ தில்லை. இது கவலை தரும் விடயமாகும் என்றார்.

**யாழ். பல்கலைக்கழகம் மூடியது அநீதியாகும்**

இது இவ்வாறிருக்க , யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது சரியல்ல. இது அநீதியான செயற்பாடாகும் என்றும் அமைச்சர் வாசுதேவ குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின் றன. இவ்வாறான நிலையில் யாழ். பல்கலைக்கழகம் மூடப் பட்டதைஏற்றுக்கொள்ளமுடியாது. விடுதலைப் புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்டதொரு அமைப்பாகும். அவ்வாறான அமைப்பின் உறுப்பினர்க ளெனது உயிரிழப்புகளை நினைவு கூருவது சட்டவிரோதமாகும். அதைச் சாட்டாக வைத்து யாழ். பல்கலைக்கழகத்தை மூடுவது பொருத்தமான செய லல்ல. சரியான நடவடிக்கையும் அல்ல. என்று தெரிவித்திருக் கிறார் வாசுதேவ. (ஒ)

"புதிய ஆளு நராகவும் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவரே நியமிக்கப் படவுள்ளார் என அறிய முடிகிறது.



வாசுதேவ நாணயக்கார

# வேலை நிறுத்தம் செய்தால் நோயாளியாகவே பிறப்பர்

கொழும்பு.மே 14
சுகாதார சேவையில் எந்த வொரு பதவியில் இருந்து கொண்டும் வேலை நிறுத்தம் செய்தால் அடுத்த பிறவியில் அவர்கள் நோயாளியாகவே பிறக்க நேரிடும் என்று சுகா தார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



மைத்திரிபால சிறிசேன

2,500 பேரை தாதியர் பயிற் சிக்கு சேர்த்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

உலகில் சமூக அரசியல் மாற் றம் ஏற்படும் போது சுகாதாரத் துறையிலும் மாற்றம் ஏற்படு கிறது. அதனால் தொழிற் சங்கங்களின் போராட்ட முறை யில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

தாதிய சேவையை மனிதாபி மான சேவையாக எண்ணிச் செயற்படுமாறு சுகாதார அமைச்சர் தாதியர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

# விரோதத்தை சம்பாதிக்காது போராட்டத்தில் ஈடுபடுங்கள்

## பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம் தீர்வு காண முடியும் என்கிறார் மஹிந்த

கொழும்பு.மே 14
மக்களின் விரோதத்தை சம் பாதிக்காத வகையில் போராட் டங்கள் இடம்பெற வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மண் டபத் தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர்இவ்வாறுகூறினார்.



நிகழ்வில் கலந்துகொண்ட தாதியர்கள்

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:-

உரிமைகளை வென்றெடுக்கும் அதேவேளை-மக்களுக்கு எவ் வாறுசேவையாற்றமுடியும் என் பதனை நினைத்துப் பார்க்க வேண்டும். பிரச்சினைகளுக்கு பேச்சு மூலம்தீர்வுகாணமுடியும் என்ற நிலையில் வெயிலில் காய வேண்டிய அவசியமில்லை. கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சுதந்திர மாக மே தினக் கூட்டங்களை நடத் திய தரப்பினர், நாட்டில் சுதந் திரம் இல்லை என்று சர்வ தேசத்திடம் முறைப்பாடு செய் கின்றனர். நாட்டில் கருத்துச் சுதந்திரத்துக்கு இடமில்லை எனத் தெரிவிக்கும் தரப்பினர் அலரி மாளிகைக்கு முன்னால் சுதந்திரம் எங்கே எனக் கேள்வி எழுப்பி போராட்டம் நடத்துகின்றனர். கடந்த காலங் களில் போராட்டங்களில் ஈடு பட்டுஅடிவாங்கியவர்களும், அடித் தவர்களும் அவற்றை மறந்து விட்டனர்-என்றார். (ச)

**செட்டிகுளம் பிரதேசசபை**
**அட்டவணைப்படுத்தப்படாத பதவி**
**வெற்றிடங்களை நிரப்புதல் - 2014**

முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தினால் 01.01.2013 செட்டிகுளம் பிரதேச சபைக்கு அனுமதிக்கப் பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாக கீழ்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை உரிய ஆள் சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமை உடையவர் களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொது நிபந்தனைகள்

01. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வுதியம் உரித்துடையதும் ஆகும்.
02. ஊழியர் விதவைகள் தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வுதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத்தகைமைகள்

01. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கும் மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வுதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பாக உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி செட்டிகுளம் பிரதேச சபை எல்லைக்குள் 03 (மூன்று) வருடங்களுக்கு குறையாத நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் பிரதேசசெயலாளர் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)
05. ஏற்கனவே பிரதேச சபையில் ஒப்பந்த,தற்காலிக,அமைய அடிப்படையில் கடமைபுரிபவர்களும் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படும் முறை அரச சேவை மாகாண ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை சபையினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் தகைமைகளும் பரிசீலிக்கப்படும். பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சை ஒழுங்கு விதிக்கமைய ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை

01. செட்டிகுளம் பிரதேசசபையின் பிரதான அலுவலகத்தில் ரூபா 100.00 இனைச்செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப்பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
02. விண்ணப்பப்படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக்கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு செயலாளர், செட்டிகுளம் பிரதேசசபை, செட்டிகுளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் 30.05.2014 இற்கு முன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதிக்கு (30.05.2014) பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
04. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
05. ஆள் சேர்ப்புதிட்ட விதிகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, பின்னரோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத்தெரியவரும் எச்சந்தரப் பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி – 30.05.2014

பதவி வகை: 01

| தொ. இல | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சுகாதாரத்தொழிலாளி | 05 |

கல்வித்தகைமைகள்

கௌரவ ஆளுனரினால் அனுமதியளிக்கப்பட்டபடி தரம் 08 கல்வித்தகைமையாகக் கொள்ளப்படும்.

மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

24.08.2007 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 06 / 2006 (02) (IV) இற்கமைவாக PL - 1 - 2006 - A (11730 – 120 x 10 – 130 x10 145 x 10 – 160 x 12 – 17600

**சுப்பிரமணியம் விஜயதாஸ்,**
**செயலாளர், செட்டிகுளம் பிரதேசசபை,**
**திகதி.12.05.2014**

(C/14266)(5.6)

# டாடா வீடமைப்பு நிறுவனம் முதலிடுகிறது இலங்கையில்

கொழும்பு.மே 14
இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான டாடா வீடமைப்பு நிறுவனம், இலங்கையில் நகர வீடமைப்புத் துறை யில் 400 மில்லியன் டொலரை முதலீடு செய்யவுள்ளது.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வின் கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து இந்த வீடமைப்புத் திட் டம் கொழும்பில் செயற் படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் அடுத்த 8 ஆண்டுகளில் இந்த முதலீடு மேற் கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்துக் கென கொழும்பு நக ரத்தில் எட்டு ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும். இதில் மூன்று ஏக்கர் நிலம்ஏற்கனவே இனங் காணப்பட்டுள்ளது. கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டம் என்ற பெயரில், இலங்கை அரசு பல இடங் களில் இருந்து குடியிருப் பாளர்களை அகற்றவுள்ளது. அவர்களில் ஒருபகுதியின ருக்கு புதிய வீடமைப்புத் திட்டங்களில் குடியிருக்கும்வசதிகள் அளிக்கப்ப வுள்ளது என்று கூறப்படுகிறது. (ச)

**கொள்வனவு**
உங்களிடம் பாவித்த பழைய பத்திரிகைகள், புத்தகங்கள், கொப்பிகள், காட்போட் என்பன உள்ளதா? நாம் கொள்வனவு செய்கின்றோம்.
**அழையுங்கள்:077 418 0185** (48045) (12.1.6)

**யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூ.சங்கங்களின் சமாசம்**
**வாகனங்களும் பாவனைப் பொருள்களும் விற்பனைக்கு**

எமது சமாசத்தில் பின்வரும் விவரப்படி வாகனங்களும், பாவனைப்பொருள்களும் விற்பனைக்குண்டு.

| வாகன வகை | வாகன இல | எண்ணிக்கை |
|---|---|---|
| 01.கன்டர் இசுசு | XXXX | 01 |
| 02.கன்டர் இசுசு | XXXX | 01 |
| 03. கன்டர் இசுசு | XXXX | 01 |

**விற்பனைக்குரிய பொருள்கள்**

01.டிஜிற்றல் தராசு- 300kg-04 தனி
02.மக்பொயில் சீற்-3mm-01 றோல்-45m
03.மக்பொயில் சீற்-8mm-01 றோல்-50m
04.சன்செற் L வாகன வெப்ப உறுஞ்சி-22 தனி
05.சன்செற் S வாகன வெப்ப உறுஞ்சி-20 தனி
06.அதிகுளிரூட்டி(358L X Singer CFC)-01
07.அதிகுளிரூட்டி(Hajer Deep FREZER SD 302)-01

கூறுவிலைகள் சமர்ப்பிக்க விரும்புவோர்:
**“தலைவர், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் இல.111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்”**
எனும் முகவரிக்கு **21.05.2014** இற்கு முன்பு கேள்விகளை பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம். (சி/14285) (3.6.4)
**தலைவர்.**

# வீட்டுத் திட்டத்துக்கான மணலை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி

## முல்லைத்தீவு மக்கள் கவலை

முல்லைத்தீவு,மே 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீட்டுத்திட்டங்களுக்கு தேவையான மணலை பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்திட்ட வேலைகளுக்கு பொது மக்களுக்கு அதிகளவு மணல் தேவைப்படுகிறது. எனினும் அரசு தேவைக்குக் குறைந்த அளவு மணலைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியே வழங்கப்பட்டு வரு கிறது என்று மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெறக்கூடியதாகவுள்ள ஆற்று மணலைக் கொண்டு வருவதற்கான கட்டுப்பாடுகளை அரசு ஓரளவுக்கு தளர்த்துவதன் மூலம் மணலுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும் என்று பொதுமக்கள் நம்புகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து உரிய அனுமதி நடைமுறையின்றி மணல் வேறு மாவட்டங்களில் நடைபெறும் அரசின் அபிவிருத்தி வேலைகளுக்கெனக் கொண்டுசெல்லப்படுகிறது என்று மக்கள் கூறினர்.

எனவே வேறு மாவட்டங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுவதை தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-402)

# மன்னாரில் சட்டவிரோதமாக வெட்டப்படும் பனை மரங்கள்



அழிக்கப்படும் பனை மரங்கள்

மன்னார்,மே 14

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பல இடங்களில் அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் பகுதியில் பனை மரங்கள் வெட்டுவதாயின் பிரதேச செயலகத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விதி நடைமுறையில் உள்ளது.

எனினும் பனை மரங்களை வெட்டி வியாபாரம் செய்யும் பலர் குறித்த நடைமுறையைக் கடைப்பிடிப்பதில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

எவ்வித அனுமதியுமின்றி சட்டவிரோதமாக மன்னார் பகுதியில் பனை மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன என்று அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

தினமும் 15 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு வருகின்றன. தனியாருக்குச் சொந்தமான பனந்தோப்புக்களில் சட்ட விரோதமான முறையில் திருட்டுத்தனமாக பனை மரங்கள் வெட்டப்படுகின்றன என்று பனந்தோப்புக்களின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ச-56)

# பாதீனியத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை வேண்டும்

வவுனியா, மே 14

வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் காணப்படும் பாதீனியச் செடிகள் பெருகுவதைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெளுக்குளம், தாண்டிக்குளம், மதினாநகர், பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பம்பைமடு, கோயில்குளம், ரம்பைக் குளம், பூந்தோட்டம், குட்செட்வீதி, தோணிக்கல், கந்தபுரம், தவசிக்குளம் ஆகிய பகுதிகளில் பாதீனியச் செடிகள் அதிகளவில் காணப்படுகின்றன.

வயல் நிலங்களிலும் பாதீனியச் செடிகளின் பரம்பல் ஏற்பட்டுள்ளது. அதனால் அடிக்கடி பாதீனியச் செடிகளைப் பிடுங்கி அகற்ற வேண்டியுள்ளதால் அதற்கு பெருமளவில் கூலி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கூறியுள்ளனர்.

இவ்வாறு பாதீனியச் செடிகளின் பரம்பலை முற்றாக அழிக்க வேண்டுமானால் அவை களையப்படும் பகுதிகளில் ஒரே வேளையில் அவற்றை அகற்றி அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ச-402)

# புனரமைக்கப்படுகிறது தம்பனைச்சோலை வீதி



புனரமைக்கப்படும் வீதி

வவுனியா, மே 14

வவுனியா, தம்பனைச்சோலை வீதியை புனரமைக்க வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள தம்பனைசோலை வீதி பல ஆண்டுகளாக புனரமைக்கப்படவில்லை. அதனால் மழை காலங்களில் இந்த வீதி ஊடாகப் பயணிப்பதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர்.

இந்த விடயம் குறித்து வவுனியா தெற்கு பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து இந்த வீதி முதற்கட்டமாக மண் வீதியாக அமைக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளை வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ். பிரசாத் மேற்கொண்டு வருகின்றார். இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைவதன் மூலம் நூற்றுக்கணக்கான மக்கள் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-402)

# வெள்ள நீர்வழிந்தோட தடையாகவிருந்த மதில் உடைப்பு

வவுனியா,மே 14

வவுனியாவில் வெள்ளநீர் வழிந்தோடுவதற்குத் தடையாக இருந்த மதில் பொது மக்களால் உடைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் அண்மையில் பெய்த மழையையடுத்து வெள்ளம் வழிந்தோட இயலாது போனமையால் வேப்பங்குளம், 7 ஆம் ஒழுங்கையில் உள்ள மதில் ஒன்றே இவ்வாறு உடைக்கப்பட்டது.


இந்தப் பகுதியில் நீண்டகாலமாக வெள்ள நீர் வழிந்தோடத் தடையாக இருந்த தனியார் ஒருவரின் மதில் குறித்து சுகாதார வைத்திய பரிசோதகர், சிவில் பாதுகாப்புக் குழுக்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது எனினும் குறிப்பிட்ட மதிலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதனையடுத்தே மக்கள் கூட்டாக இணைந்து மதிலை உடைத்துள்ளனர்.

கடும் மழையின் போது வெள்ளநீர் தேங்கி குறித்த மதில் ஊடாக செல்ல முடியாது தடைப்பட்டு அப்பகுதியில் தேங்கி வந்தது. அதனால் மக்களின் வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகும் நிலையும் ஏற்பட்டது. அதனையடுத்தே மக்கள் தாமாக இணைந்து குறிப்பிட்ட மதிலை உடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-402)

# இனம்தெரியாதோரால் குடிசைக்குத் தீ வைப்பு

## ஒட்டுசுட்டான் பகுதியில் சம்பவம்



எரிக்கப்பட்ட குடிசை

ஒட்டுசுட்டான்,மே 14

வீட்டுத்திட்டத்துக்காக தற்காலிகமாக அமைத்த குடிசை இனம் தெரியாத நபர்களால் தீவைத்து கொளுத்தப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு ஒட்டுசுட்டான் தட்டையன்மலை, பகுதியில் இடம் பெற்றுள்ளது.

தனது சொந்த அலுவலாக கொடிகாமம் பிரதேசத்துக்குச் சென்ற போதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது என்று எரிக்கப்பட்ட குடிசையின் உரிமையாளர் கூறினார்.

குடிசை முற்றாக எரிந்து முடிந்த பின்னர் தான் அயலவர்கள் தனக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரியப்படுத்தினார்கள். தான் திரும்பி வந்து பார்த்தபோது குடிசை எரிந்து சாம்பலாகி விட்டது என்று அவர் தெரிவித்தார்.

குடிசைக்குள் இருந்த முக்கியமான ஆவணங்கள் அழிந்துள்ளன என்று அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ச-21)

# கால்வாய் நோயை கட்டுப்படுத்த 4 வாரங்கள் இன்னமும் தேவை

## கால்நடை வைத்தியர்கள் தெரிவிப்பு

மன்னார்,மே 14

மன்னார் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள கால்வாய் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இன்னமும் 4 வார கால அவகாசம் தேவைப்படுவதாக கால்நடை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் பல பாகங்களிலும் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள கால்வாய் நோய்த் தாக்கம், மன்னாரிலும் இனங்காணப்பட்டுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதம் 13ஆம் திகதி மடுப் பிரதேசத்தில் முதலில் கால்வாய் நோய் இனம் காணப்பட்டதையடுத்து, மன்னார் மாவட்டத்தில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கும் மாட்டிறைச்சிப் பயன்பாட்டுக்கும் உடனடியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை இரண்டு மாதங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் இது தொடர்பான கலந்துரையாடலொன்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் எம். வை. எஸ். தேசப்பிரிய தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

> கால்வாய் நோயால் சுமார் 1,000 கால்நடைகள் மன்னாரில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் சில உயிரிழந்துள்ளன.

கால்வாய் நோயால் சுமார் 1,000 கால்நடைகள் மன்னாரில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் சில உயிரிழந்துள்ளன என்றும் கால்நடை வைத்தியர்கள் கூறினர்.

இந்தக் கலந்துரையாடலில் கால்வாய் நோய்த் தாக்கம் தொடர்பில் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் நந்தினி ஸ்ரான்லி டிமெல், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மன்னார் அலுவலக வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், கால்நடை வைத்தியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-56)

# சொந்த நிலங்களே எமக்கு வேண்டும்

## சம்பூர் மக்கள் கூட்டமைப்பிடம் வேண்டுகோள்

திருகோணமலை,மே 14

எமது கஷ்டங்களுக்கு எந்த உதவியும் வேண்டாம். எம்மை எமது சொந்த நிலத்தில் குடிய மர ஆவன செய்யுங்கள் என்று சம்பூர் மக்கள் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பூர் பகுதிக்கு சனிக்கிழமை சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்ட குழுவினர் மணல் சேனை, பட்டிக்குடியிருப்பு ஆகிய முகாம்களுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:- சம்பூர் மக்கள் 4 அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். அவர்கள் கடும்வெயிலின் மத்தியில் தகரங்களுக்கு கீழே இருப்பதால் அந்த முகாமிலுள்ள பலருக்கு அம்மை நோய் ஏற்பட்டுள்ளது. அங்கு குடியிருக்க முடியாமல் மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

சம்பூர் அகதி முகாம்களிலுள்ள பலர் நோய்களுக்கு உள்ளாகி மூதூர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருகின்றனர் என்று வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர். 'எங்களுக்கு எந்தவொரு உதவியும் வேண்டாம். எங்களை எமது சொந்த இடங்களில் குடியேற அனுமதித்தால் எங்களுடைய அரைவாசி நோய் குறைந்து விடும்' என்று மக்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

700 குடும்பங்களைச் சேர்ந்த 3,000 பேர் வரையில் இந்த அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர்.



சம்பூர் மக்களைப் பார்வையிட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள்

இந்த முகாம்களுக்கு எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனமும் உதவி செய்வதற்குச் செல்ல முடியாது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவவோ, பாடசாலை செல்லும் மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கவோ முடியாத நிலை உள்ளது.

அங்குள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்க வந்த நிறுவனம் ஒன்றை இராணுவம் அதற்கு அனுமதி வழங்கமறுத்துத்திருப்பி அனுப்பியுள்ளது.

12 கிலோமீற்றர் தூரம் சைக்கிளில் சென்று மீனவர்கள் மீன்பிடிக்க வேண்டியுள்ளது.

எனவே சம்பூர் மக்களின் சொந்த நிலத்தை அவர்களுக்கு வழங்க வேண்டியது அவசியமாகும் - என்றார். (ச)

# அத்துமீறிய நெற்செய்கையை தடைசெய்யுமாறு போராட்டம்

மட்டக்களப்பு,மே 14

மட்டக்களப்பு உறுகாமம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கை தடைசெய்யப்பட வேண்டும். அவர்களுக்கான நீர் வழங்கல் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி விவசாயிகளும் மீனவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள்

இந்த ஆர்ப்பாட்டம் விவசாய அமைப்புக்களின் ஏற்பாட்டில் செங்கலடியிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உறுகாமம் பிரிவு அலுவலகத்துக்கு முன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் உறுகாமம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் விவசாயத்தில் ஈடுபடும் 13 அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

உறுகாமம் குளத்திலுள்ள நீரைக் கொண்டு 5,240 ஏக்கரில் இந்தமுறை விவசாயம் செய்வதாக சிறுபோகச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டத்தில் 13 விவசாய அமைப்புக்கள் இணைந்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

தற்போது இரண்டு நாள்கள் மழை பெய்தவுடன் எல்லோரும் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

அவர்களின் அத்துமீறிய நடவடிக்கையால் ஏற்கெனவே செய்கை பண்ணப்பட்ட காணிகளுக்கு நீர் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ச)



சிரமத்தில் பயணிக்கும் மக்கள்

# ஆபத்தான நிலையில் இயந்திரப் படகு சேவை

மண்டூர்,மே 14

மண்டூர் -குருமண்வெளி இயந்திரப் படகுச்சேவை மூலம் பயணிப்பது பயங்கரமான பிரயாணம் என்று இந்தப் படகின் மூலம் தினமும் பயணிக்கும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இதனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

மண்டூர் - குருமண்வெளிதுறைக்கான போக்குவரத்துக்கு பயன்படுத்தும் இயந்திரப் படகு நீண்டகாலமாகப் பாவிக்கப்பட்டுவருவதால் துருப்பிடித்து ஓட்டை விழுந்து ஆற்று நீர் படகுக்குள் புகுகின்றது. அதனால் பிரயாணத்தின் போது நீரை வெளியேற்றி பிரயாணம்செய்ய வேண்டியதுர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். (ச)

# கடை தீக்கிரை

அம்பாறை,மே 14

அம்பாறை அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தைக்கா நகரிலுள்ள பலசரக்குக் கடை ஒன்று ஞாயிற்றுக்கிழமை தீக்கிரையாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடையின் உரிமையாளர் வழமைபோன்று தனது கடையைப் பூட்டிவிட்டுவீட்டுக்குச் சென்றுள்ளார். பின்னர், கடை தீப்பற்றி எரிவதைக் கண்ட ஒருவர் கடை உரிமையாளருக்குத் தெரியப்படுத்திய நிலையில், அயலவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது.

எனினும் கடை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

மின்னொழுக்குக் காரணமாக தீ பிடித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் நவரத்தினம் நிருபன்



மண்ணில் 31.03.1991

விண்ணில் 31.03.2014

ஊட்டி வளர்த்து உயர்வுநிலை காணமுன்பு
ஊர்தி வந்துன்னை அழைத்துச் சென்றதுவோ
காய்த்துக் குலுங்கி கலைகக்கும் வேளையில்
காலனவன் உன்னைக் கவர்ந்து சென்றானோ
கற்றுத்தேறி பட்டங்கள் பெறமுன்பு
கருகதி விமானம் வந்து கடிதெனப் பறந்தாயோ
நாற்பத்தைந்து நாளானாலும் உந்தன்
கனி பார்வை பேச்சு மறக்க முடியவில்லையே.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (14.05.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் பங்குகொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(47980)(6.3)

...ட்டி தெற்கு, ...வேலி. குடும்பத்தினர்.

## விணைகள் விற்பனைக்கு

எம்மிடம் புதிய வீணைகள் 2, பாவித்த ஏகாந்த வீணையும் விற்பனைக்குண்டு

தொடர்பு: K.P.பாலகிருஷ்ணன் (48035)(45.6.3)

K.K.S. வீதி, பூநாரிமரத்தடி, கொக்குவில். 021 222 2940

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் சத்திரச்சந்திக்கும் மிட்டாய் சந்திக்கும் இடையில் கடை வாடகைக்கு உள்ளது.

(49028)(3.6.4) தொடர்பு: 077 723 8084

## காணி விற்பனைக்கு

சங்கானை, பிளாக்கர் வீதியில் உள்ள 20 பரப்பு மேட்டுக்காணி பனைமரங்களுடன் விற்பனைக்குண்டு. தோட்டம் செய்வதற்கு, அரிசிமில் போடுவதற்கு உகந்தது.

(48014)(45.6.3) தொடர்பு: 052 225 8433

## வீடு வாடகைக்கு

சங்குவேலி, மானிப்பாய் பேரம்பலம் அவெனியுவில் சகல வசதிகளையும் கொண்ட Annex வாடகைக்கு உண்டு. 3பேருக்கு மேற்படாத குடும்பம் விரும்பத்தக்கது.

(48005)(45.6.3)

தொடர்பு: 075 456 4534/077 911 2840

## வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, புலோலி மேற்கு, தம்பசிட்டியில் வீட்டுடன் 4.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(48015)(45.6.3)

மேலதிக விவரங்களுக்கு: 077 773 9261, 077 362 0979

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 29★06★1986

உதிர்வு 01★04★2014

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வவுனியா கற்பகபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட அமரர் ஸ்ரீ மோகன் நிவேதன் கடந்த 01.04.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (13.05.2014) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (15.05.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனநிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சரவிழிகள் கலங்கி நிற்கும் குடும்பத்தினர். (48039)(6.6.4)

077 578 5912

108, கற்பகபுரம், வவுனியா.

# ஷிராணிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



ஷிராணி பண்டாரநாயக்க

கொழும்பு,மே 14

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் -திகதிக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிடிய இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க நிரபராதியா? குற்றவாளியா? என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற வழக்குவிசாரணைகளின் போது தீர்ப்பு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஷிராணியின் வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த தகவல்கள் அடங்கிய அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனைச் சமர்ப்பிப்பதற்கு பிரதிவாதிகள் இடையூறு விளைவித்தனர் என்று ஷிராணி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி வாதாடினார். அதன் காரணமாக அந்த அறிக்கை நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் வரை வழக்கு மீதான தீர்ப்பை வழங்க வேண்டாம் என்று அவர், நீதிவானிடம் கேட்டுக் கொண்டார்.

அதனையடுத்து ஷிராணியின் குறித்த வங்கித் தகவல்களை எதிர்வரும் 20 ஆம் திகதி முன்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச)



கொழும்பு, கொம்பனித்தெரு புதிய மாடி வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாதுகாப்பு, மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி உட்பட அதிகாரிகள் வீட்டுத்திட்ட மாதிரியைப் பார்வையிடுகின்றனர்.

# அபிவிருத்தித் திட்டங்களை எதிரணியினர் கண்காணிப்பர்

## 25 எம்.பிக்கள் அந்தப் பணியில் என்கிறது ஐ.தே.க.



ஹர்ஷ டி சில்வா

கொழும்பு,மே 14

நாட்டில் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சகல அபிவிருத்தித் திட்டங்களையும் கண்காணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையம், சம்பூர் அனல் நிலையம், திருகோணமலை துறைமுகத்திட்டம் போன்ற அனைத்து அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் ஒரு தடவை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குச் செல்லவுள்ளோம் என்றும் அவர் கூறினார். மக்கள் பணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கண்காணிப்பு மேற்கொள்ளவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்தைப் பார்வையிட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் குழு அது தொடர்பிலான தமது இடைக்கால அறிக்கையை ஏற்கெனவே ஐ.தே.க. தலைமைத்துவக் குழுவின் தலைவர் கருஜயசூரியவிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தேர்தல்கள் குறித்து அரச தரப்பில் ஆய்வு

## இரு குழுக்கள் நியமனம்

கொழும்பு,மே 14

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டுமா? அல்லது பொதுத்தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டுமா? என்பது தொடர்பில் அரசுக்குள் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதற்காக இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டு அந்தக் குழுக்கள் பல்வேறு மட்டங்களில் ஆய்வுகளை நடத்தியுள்ளன.

இவற்றில் முதலாவது குழு ஜனாதிபதி தேர்தல் முதலில் நடத்தப்படுமானால் அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு,கிழக்கு தமிழர்கள் வாக்களிக்காவிட்டாலும் கூட 10 லட்சம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெறுவார் என்று தெரிவித்துள்ளது.

இரண்டாவது குழு, பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் 120 முதல் 125 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெறும் என்றும் தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே ஜனாதிபதி ஆளும் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் அழைத்துக் கூட்டம் ஒன்றை நடத்தவிருந்தார். எனினும் அது திடீரென ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

நீங்கா நினைவலைகளில்

ஆறாம் ஆண்டு

நான்காம் ஆண்டு





துளிராய் 14.02.1986

விதையாய் 14.05.2008

செல்வன் சண்முகநாதன் சஞ்சீவன்

(மாணவன், கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, திருவையாறு மகா வித்தியாலயம்)

துளிராய் 17.01.1989

விதையாய் 27.05.2010

செல்வன் சண்முகநாதன் சுஜீவன்

(பொறியியல் பீட மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகம்)

நேற்று எம்முடன் இருந்து
நெடுந்தூரம் காற்றிடை சென்றீரோ?
ஆற்றிடா துயரத்தால் அரற்றுகிறோம்-எம் செல்வங்களே
வற்றிடா நதியாய் எமக்கு அன்பு காட்டி
விழிநீர் சொரிய விதிவசத்தால் சென்றதெங்கே?
விம்மியழுதபடி விழிகளில் உமை சுமந்தபடி
நாம் .......

முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். 66/2, திருவையாறு, கிளிநொச்சி.

(47767)(10.6)

# வெசாக் பாதுகாப்பில் 30,000 பொலிஸார்

கொழும்பு,மே14

வெசாக் வார பாதுகாப்புச் சேவையில் 30,000 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

போக்குவரத்துப் பாதுகாப்புப் பொலிஸார் 10,000 பேரும், வெசாக் வலயங்களில் 20,000 பேரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இராணுவ அதிகாரிகளின் பிரதானியாக சமரசிங்க



பிரசாத் சமரசிங்க

கொழும்பு,மே 14

இலங்கை இராணுவ அதிகாரிகளின் பிரதானியாக மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை முதல் அவரது நியமனம் நடைமுறைக்கு வரும் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தற்போது இராணுவ அதிகாரிகளின் பிரதானியாக உள்ள மேஜர் ஜெனரல் கிரிஷாந்த சில்வா, எதிர்வரும் 17ஆம் திகதி முதல் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்றுச் செல்லவுள்ளார்.

இந்தநிலையிலேயே, இராணுவ அதிகாரிகளின் பிரதானி வெற்றிடத்துக்கு பிரசாத் சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

33 வருடகால இராணுவ சேவையிலுள்ள சமரசிங்க, போர் இடம்பெற்ற காலத்தின்போது இராணுவப் பேச்சாளராகச் செயற்பட்டார். இவர், பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்கள் உடன் செய்ய வேண்டியது

கிழக்கைப் போன்றே வன்னியின் எல்லையோரங்களிலும் சிங்களக் குடியேற்றங்கள் மீண்டும் உருப்பெறத் தொடங்கிவிட்டன. வடக்கில் ஏற்கனவே குடியிருந்த சிங்களவர்கள்தான் மீளக்குடியமர்த்தப்படுகிறார்கள் என்பது அரசின் வாதம். ஆனால், குடியேற்றப்படுபவர்கள் ஏற்கனவே குடியிருந்தவர்கள் அல்லர் என்றும், முன்னர் குடியிருந்தவர்களின் எண்ணிக்கையிலும் அதிகமானவர்கள் இப்போது குடியேற்றப்படுகிறார்கள் என்றும் உள்ளூர்வாசிகளும் உள்ளூர் அரசியல்வாதிகளும் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

ஒரு விடயம் மட்டும் தெளிவாகிறது. ஓரங்களில் இருந்து கறையான் அரிப்பதைப் போன்று, எல்லையோரக் குடியேற்றங்களைப் போன்றே இன்னும் ஓரிரு சகாப்தங்களில் வடக்கில் இனப்பரம்பல் நிலை, கிழக்கைப் போன்ற பெரும் மாற்றத்துக்கு உட்படும். அதற்கான ஊக்குவிப்புக்கள் மிக நுட்பமாகவும் திடமாகவும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

வடக்கில் மீள்குடியேற்றம் என்பது தமிழ், சிங்கள, முஸ்லிம் என மூவின மக்கள் மத்தியிலும் மேற்கொள்ளப்படவேண்டியது என்பதை எவரும் மறுக்க நியாயமில்லை. ஆனால், மீளக்குடியமர்பவர்கள் போரால் இடம்பெயர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அல்லது அவர்களது பெற்றோர்கள், மூதாதையர்கள் அவ்வாறு இடம்பெயர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் அப்படிப்பட்டவர்கள்கூடத் தாம் இப்போது வசிக்கும் பிரதேசத்தில் இருந்து முற்றுமுழுதாக வெளியேறி தமது சொந்த இடத்துக்கு மீளக்குடியமர வரவேண்டும் என்றும் அதிகாரிகளால் ஒரு வரையறை ஏற்கனவே உருவாக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 5 வருடங்களாக நடைபெற்ற மீள்குடியமர்வின் போது இந்த வரையறைகளே பின்பற்றப்பட்டன. ஆனால், சிங்களவர்களின் குடியேற்றங்களின்போது, ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த நியமங்கள் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்று தமிழ், சிங்கள இரு இனங்களினதும் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டுகிறார்களெனில் இந்தக் குடியேற்றங் களின் பின்னால் அரசியல் காய் நகர்த்தல்கள், நோக்கங்கள் உள்ளன என்பது தெளிவானது.

விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் தோல்வியில் முடிவடைந்த ஒரு நிலையில், இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுக்கும் அதிகாரம் எவையும் தமிழர்களின் வசம் இல்லை என்பது தெளிவு.

அப்படியானால், திட்டமிட்ட சிங்கள அரசியல் குடியேற்றங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பிக் கொண்டிருப்பது மட்டும்தான் தமிழ் அரசியல்வாதிகளின் பணியா? அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அதைத் தாண்டிய நடவடிக்கைகள் எவையும் தேவையில்லையா?

இத்தகைய குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை படையனுப்பும் என்று காத்திருக்கும் யோசனை என்பது இலவு காத்த கிளிக்கு நிகரானது.

அப்படிப்பட்ட ஒரு நிலையில் அரசியல் நோக்கம் கொண்ட, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிரான தமிழ்ச் சமூகத்தின் பதில் நடவடிக்கை என்ன? அது பற்றிச் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. குறிப்பாக வடக்கு மாகாண சபை இது பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

1970களில் வன்னியில் படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் வடக்கில் உள்ள இளைஞர்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. கிளிநொச்சியில் உள்ள வளம்மிக்க பகுதிகள் பலவும் இவ்வாறு படித்த வாலிபர் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டவைதான் என்று இன்றும் அங்கிருக்கக்கூடிய மூத்தவர்கள் சொல்வதைக் காணமுடியும்.

இப்போதும் அவ்வாறான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளித்து அவர்களை விவசாயத்தில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும். அதற்கு முதலில் விவசாயத்தை இலாபகரமான தொழிலாக வடக்கில் மாற்ற வேண்டும். அதன் பின்னர் வேலையற்ற இளைஞர்களை எல்லையில் உள்ள காணிகளை நோக்கி நகர்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். வடக்கு விவசாய அமைச்சு இதற்கான 5 ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டி செயற்படுத்துவது சிறப்பானது. அதுவே தேவையற்ற இன முரண்பாடுகளை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுப்பதற்கான வன்முறையற்ற ஒரே வழியாகவும் இருக்க முடியும்.

விழித்தெழுமா வடக்கு மாகாண சபை? உணர்வார்களா வடக்கு மாகாண இளைஞர்கள்?

# அரசின் 'கசினோ' சூதாட்டம்; போர்க்களத்தில் வீரவன்ச

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

அரசின் சர்ச்சைக்குரிய 'கசினோ' சூதாட்ட நிலையங்களுக்கு அனுமதியளிக்கும் திட்டமானது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் பங்கு வகிக்கும் பல கட்சிகளின் ஆத்திரத்துக்கும் எதிர்ப்புகளுக்கும் உள்ளாகி வருகின்றது. இந்தத் திட்டம் தொடர்பாக கடைசியாக முரண்பாட்டுக்கு உள்ளாகியிருப்பவர் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல்வீரவன்ச ஆவார். பொதுவில் சர்ச்சைக்குரிய விடயங்கள் தலைதூக்கும் போதெல்லாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊதுகுழல் என்று வர்ணிக்கப்பட்டவர் இந்த அமைச்சர். வாராந்த அமைச்சரவைக் கூட்டங்களில் ஜனாதிபதி அவசரமாகத் தலையிட்டு விமர்சனக் கருத்துக்களை வெளியிடச் செய்வதற்காக முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட கேள்விகளை எழுப்புவதிலும் முன்னிலை வகித்தவர் என்று அவருடைய நண்பர்களால் கருதப்படும் மனிதராகவும் இவர் இருந்து வந்துள்ளார்.

அமைச்சர் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் நிகழ்ச்சி கடந்த திங்கட்கிழமையன்று சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. சுமார் 7 ஆயிரம் பேர் பெரும்பாலும் மேல் மாகாணத்திலிருந்து வந்து கலந்து கொண்டார்கள். அந்தக் கட்சியின் தராதரத்தில் வைத்துப் பார்த்தால் அது ஒரு மதிப்புக்குரிய எண்ணிக்கைதான். ஏறத்தாழ அம்பாறையில் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு வந்திருந்த சனத் தொகையுடன் இதனை ஒப்பிடலாம். நாடு முழுவதுமான ஐ.தே.கவின் வாக்கு வங்கியுடன் இதனை ஒப்பிட முடியாதுதான் என்றாலும் அரசுடனுள்ள ஒரு சிறு கட்சிக்கு இவ்வளவு பேர் ஆதரவளித்து வருகை தந்திருந்தமை வீரவன்ச பெருமை பேசிக் கொள்ளக்கூடிய விடயம்தான்.

வீரவன்ச இரண்டு மணி நேரம் நீண்ட உரையொன்றை நிகழ்த்தினார். ஜனாதிபதி ராஜபக்ஷவையும் ஆங்காங்கே சீண்டிப் பேசத் தவறவில்லை. இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் அதிதியாக வருகை தந்திருந்தவர்களில் ஒருவரான அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மெதுவாக வெளியேறிச் செல்வதைக் காண முடிந்தது. கூட்டத்தில் 12 அம்சங்கள் கொண்ட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. பரந்த அளவில் சூதாட்ட நிலையங்கள் ஆரம்பிப்பது நிறுத்தப்பட வேண்டும். கசினோ அல்லது எந்தவித தார்மீகமற்ற செயற்பாடுகளுக்கும் வரிச் சலுகைகள் வழங்கப்படலாகாது என்பவையும் அதில் அடங்குவதாய் இருந்தன. 2009 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்ட வெற்றியின் பின்னர் நாட்டைப் பொருளாதாரத் துறையை முன்னேற்றுவதற்கான பாதையில் கொண்டு செல்வதை விடுத்து மஹிந்த சிந்தனையுடன் ரணில் விக்கிரமசிங்கவின் இலங்கையைப் புனரமைப்பது என்ற கொள்கையை இணைத்துக் கொண்டு செயற்படத் தொடங்கியிருக்கிறது அரசு என்று வீரவன்ச கூறினார். அரசின் கலப்பட நிகழ்ச்சி நிரலில் காணப்படும் பல விடயங்கள் மஹிந்த சிந்தனையில் காணப்படாதவை. அவைகளில் ஒன்றுதான் கசினோ சூதாட்ட நிலையங்களை அமைக்கும் திட்டம் என்று அவர் கூறினார். அரசில் இருக்கும் சிலரின் வேலை கலப்பட நிகழ்ச்சி நிரல்களை உருவாக்குவதுதான்.

விசாரணை எதனையும் எதிர்கொள்ள நான் அச்சம் கொண்டிருக்கவில்லை. இருந்தாலும், அதற்கென பயன்படுத்தப்பட்டுள்ள நேர காலம் மிகவும் சிக்கலான தாகும்.

அந்த வகையில்தான் கசினோக்களுக்கு வரிச்சலுகை அளிக்க முடிவு செய்யப்பட்டது. மஹிந்த சிந்தனையில் இவ்வாறு கலப்படம் செய்வதற்கு காரணமாய் இருந்துள்ளவர் திறைசேரி செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆவார். நாட்டின் பொருளாதாரத்தை இவர் கடத்திவிட்டார் என்று குற்றஞ்சாட்டிய வீரவன்ச மஹிந்த சிந்தனையை செயற்படுத்த நீண்ட காலம் பிடிக்கின்றது. ஆனால் இலங்கையைப் புனரமைப்பது என்ற திட்டம் ஓர் இரவுக்குள் நிறைவேற்றப்படுகின்றது என்றார். மேலும் கூறுகையில் ; வீதிகளைப் புனரமைக்க உள்ளூர் வங்கிகளில் கடன் எடுக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித்தவர்கள் யார் என்று கேட்டார். வீதி அபிவிருத்தி அதிகார சபை (இது ராஜபக்ஷவின் கீழ் உள்ள துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் உள்ளது) ஊடாக வெவ்வேறு உள்ளூர் நிறுவனங்களால் பல மில்லியன் ரூபா பெறுமதியான வீதி அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நாங்கள் வங்கிகளில் கடன் எடுப்பதானால் அது தொழில் மற்றும் விவசாயத்துறை அபிவிருத்திக்காக இருக்கும். அந்த வகையில் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படவும் முடியும். ஆனால் சிறிது சிறிதாக பொருளாதாரம் அழிவை நோக்கி இழுத்துச் செல்லப்படுகின்றது. அதை மீளவும் நிலை நிறுத்த அர்த்தமுள்ள செயற்பாடுகளைக் காணோம். உள்ளூர் தொழில் அதிபர்களுக்கு வரிச்சலுகை கிடையாது. ஆனால் கசினோக்கள் தாராளமாக வரிச்சலுகை பெறுகின்றன. இந்த முறையில் அரசு போய்க் கொண்டிருக்க முடியாது. எதிரிகளுக்குத்தான் இதன் போக்கு பயன்படுவதாய் இருக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தின் சிறப்பு புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குள் நுழைந்திருக்கிறார்கள். இந்தச் சபையானது கட்டுமானம் , பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் வருகின்றது. இந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் வீரவன்ச ஆவார். சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ் அதிபர் திலக் இடமல்கொடவின் தலைமையில் ஜனாதிபதிக்கு வரும் புகார்களை விசாரிப்பதில் ஈடுபடும் பிரிவாகும் அது. இந்தப் புலனாய்வுப் பிரிவுக்கான அதிகாரங்கள் அரசமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களில் இருந்து வருபவையாகும் என்று ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர்கள் புலனாய்வுக் குட்படுத்தவிருந்த விடயங்கள் என்ன என்பது தெளிவாகத் தெரியவரவில்லை. என்றாலும் அது வீரவன்சவின் அமைச்சு சார்ந்த விடயங்களாகவே இருக்க வேண்டும். இதற்கு மிக உயர் மட்டத்திலிருந்து பணிப்புரை வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜயந்த சமரவீர ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு செயற்பட்டதையடுத்து இந்த விசாரணை கைவிடப்பட்டதாகத் தெரிகின்றது. இதுபற்றி வீரவன்ச பின்வருமாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

விசாரணை எதனையும் எதிர்கொள்ள நான் அச்சம் கொண்டிருக்கவில்லை. இருந்தாலும், அதற்கென பயன்படுத்தப்பட்டுள்ள நேர காலம் மிகவும் சிக்கலானதாகும். என் மீதோ எனது அமைச்சு குறித்தோ குற்றச்சாட்டுகள் அல்லது முறைப்பாடுகள் இருக்குமானால் அவை உடனுக்குடன் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டும். தலைமைத்துவத்தில் இருப்பவர்களுக்கு எதிராக நானும் எனது கட்சியினரும் எதிர்க் கருத்துக்களை வெளியிடுகின்ற சமயத்தில் அல்ல என்று வீரவன்ச கூறியுள்ளார். முடிவுகள் எடுப்பதற்கு முன் மக்களைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட வேண்டும் என்று அரசின் உயர்நிலை தலைவர்களிடம் கூறி வந்திருக்கிறேன், ஆனால் ஒரு சிலரின் கருத்துக்கள் தான் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. மாற்றுக் கருத்துக் கூறுபவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையின் கொள்கை முரண்பாடு கொண்டுள்ள பங்காளிக் கட்சிகளில் இரண்டாவது நிலையில் வீரவன்ச இருக்கிறார். முதலில் முரண்பட்டுக் கொண்டவர் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண. அதுரலியே ரத்ன தேரர் ஆவார். ஜனாதிபதியின் பல தொலைபேசி அழைப்புகளைப் புறந்தள்ளிவிட்டு சில நிறுவனங்களுக்கு மிக முக்கிய நிறுவன அந்தஸ்து விதிகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களித்திருந்தார். பல மில்லியன் டொலர் பெறுமதியான விடுதிகள் அமைக்கும் இந்தத் திட்டத்துக்கு பெரும் எடுப்பில் வரிச்சலுகைகளும் வேறு வசதிகளும் அளிக்கப்படுகின்றன. வண. அத்துரலிய தேரர் இந்த விடயம் தொடர்பாக ஐ.தே.கவின் மூத்த தலைவர் ஒருவருடனும் அண்மையில் ஆலோசனை நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பும் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடையிலான உறவுகளைப் பாதித்திருப்பதாகத் தெரிகின்றது. அமைச்சர் வீரவன்ச போலவே தேரரும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் ஜே.எச்.யு. பியின் ஏனையவர்களும் சட்ட விதிகளை ஆதரித்து வாக்களிக்கவில்லை. இந்த விதிகளில் கசினோக்களுக்கு இடமளிக்கும் அம்சங்கள் இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

முன்னர் கொண்டு வரப்பட்ட இரண்டு வர்த்தமானி பத்திரிகை அறிவித்தல்களில் ஏராளமான வரிச் சலுகைகள் வழங்கப்படுவது ஒரு புறமிருக்க கேமிங் (Gaming) சூதாட்டம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட மூன்று வர்த்தமானிப் பத்திரிகை அறிவிப்புகளிலும் அந்தச் சொல் அகற்றப்பட்டுள்ளது. அதே சமயம் அதில் இப்பொழுது உள்ளடக்கப்பட்டுள்ள தொடர்புடைய வசதிகள் (associated facilities) என்ற சொற்பதம் கசினோக்களையும் உள்ளடக்குவதாக உள்ளது என்று எதிர்ப்பவர்கள் தெரிவிக்கிறார்கள்.

கசினோக்களைத் தடை செய்யும் வகையிலான மாற்றம் ஒன்றை அறிவித்தல்களில் கொண்டு வர வேண்டும் என்ற வகையில் ஐ.தே.க. தெரிவித்த கோரிக்கையை அரசு நிராகரித்துவிட்டது. எனவே இதன் மூலம் அரசின் இறுதி நோக்கம் என்ன என்பதில் சந்தேகங்களை கிளப்பியிருக்கின்றது.

ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ புதிதாகக் கொண்டு வரப்படும் திட்டங்களில் எந்த வகையிலும் கசினோக்கள் இருக்காது என்பதை நிலைநாட்ட நாடாளுமன்றத்தில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். ஆனால் கடந்த வியாழக்கிழமை அரசின் அதிகாரபூர்வ பேச்சாளர் ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பொருளாதார அமைச்சர் பஸிலின் கருத்துக்களுக்கு நேர்மாறான கருத்துக்களை வெளியிட்டு அரசைச் சங்கடத்தில் மாட்டிவிட்டுள்ளார். கசினோக்களைத் திறப்பதில் எந்தவிதத் தடையும் இருக்காது என்று அவர் தெரிவித்தார்.

இன்று சித்திரா பூரணை விரத தினம்

# சித்திரைக்குப் பெருமைதரும் சித்திரா பூரணை விரதம்

பூரணன்

இன்று சித்திரா பூரணை விரத தினமாகும். இந்துப் பெருமக்கள் சித்திரை மாதத்தில் வரும் பூரணை தினத்தன்று ஆண்டுதோறும் இந்த விரதத்தை அனுஷ்டித்து வருகின்றனர். இந்த ஆண்டு சித்திரையில் இரண்டு பூரணை தினாங்கள் அமைந்துள்ள போதிலும் இன்றைய தினமே விரதத்துக்கு உகந்த தென சமயப் பெரியவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சித்திரை மாதம் வெப்பம் நிறைந்த காலமாக இருந்த போதிலும் வசந்தத்தை நினைவு கூரும் இளவேனிற் காலமாகவும் காணப்படுகின்றது. மழை பெய்து மரம், செடி, கொடிகள் எல்லாம் புதுப் பொலிவு பெற்று கண்களுக்கு விருந்தளிப்பதும் இந்த மாதத்தில்தான்.

மாதந்தோறும் பூரணை விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் சித்திரா பூரணை விரதத்தை அனுஷ்டிப்பது சிறந்ததாகும். இது பூரணை விரதங்களையெல்லாம் அனுஷ்டித்தமைக்கு ஒப்பான தோடு பூரணமான பயன்களையும் கொடுக்கும்.

எம்மை விட்டுப் பிரிந்த தாய், தந்தை ஆகியோரை நினைவு கூர்ந்து அவர்களின் ஆன்ம ஈடேற்றம் வேண்டி விரதம் அனுஷ்டிப்பதும், பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதும் பிள்ளைகளின் முக்கிய கடமைகளாகும். ஆனால் இன்றுள்ள பலர், உயிர் நீத்த தத்தம் தந்தையர்களுக்குரிய ஆடி அமாவாசை விரதத்தையும், தாய்மாருக்குரிய பூரணை விரதத்தையும் கடைப்பிடிக்கத் தவறிவிடுகின்றனர். பிதிர்க்கடன்களை நிறைவேற்றத் தவறினால் அதனால் வேண்டாத விளைவுகள் ஏற்படுமென்பது இந்து மதத்தவர் மத்தியில் நிலவிவரும் ஒரு நம்பிக்கையாகும். ஆகவே நாம் எம்மை விட்டுப் பிரிந்துவிட்ட எமது தாய், தந்தை யரின் நினைவை எமது உயிருள்ளவரை மறக்காது உரிய பிதிர்க் கடன்களை உகந்தகாலத்தில் நிறை வேற்றியே ஆகவேண்டும்.

இறைவனடி சேர்ந்த தாயாருக்கு வருடந்தோறும் குறிப்பிட்ட மாதத்தில் வரும் உரிய திதியில் சிராத்தம் செய்வது வழக்கமாகும். சிலர் இதனைச் செய்வதற்குத் தவறிவிடுகின்றனர். இத்தகையவர்கள் சித்திரை மாதத்தில் வரும் பூரணைதினத்தன்றுஇதனைநிறைவேற்றிக்கொள்ள முடியும். இந்தவகையில் சித்திராபூரணை தினம் சிறப்புப் பெறுகின்றது.

மனிதர்களின் ஆயுள்காலத்தைச் சிறிதும் பிசகாமல் பதிவு செய்து வருபவர் சித்திர குப்தனார் ஆவார். அவர் நீதி தேவனாகிய யமதர்மராஜாவுடன் இணைந்து பணியாற்றி வருகின்றார். இவர் சித்திரை மாதத்தில் வந்த பூரணை தினமொன்றில் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே இவர் சித்திரபுத்திரன் என்றும் அழைக் கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இதன் காரணமாகவே சித்திரா பூரணை தினத்தில் அவரை வழிபாடு செய்வதும் இந்துக்களின் வழக்கமாக உள்ளது.

இன்றைய தினம் ஆலயங்களில் சித்திரைக் கஞ்சி காய்ச்சிப் படைத்து அடியவர்களுக்கு வழங்குவது ஒரு மரபாகவே பேணப்பட்டு வருகின்றது.

எனவே பல்வேறு வகையிலும் சிறப்புப் பெற்ற இத்தினத்தில் இந்து அடியவர்கள் ஆலயங்களில்வழிபாடு செய்து இறைவனைப் போற்றுவதும். தாயை இழந்தவர்கள் பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவதும் ஒரு மரபாகவே தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது.



# பிரதான வீதியின் அவல நிலை

“தற்போது மோட்டார் சைக்கிள்களிலும், ஓட் டோக்களிலும் செல்வோர் தார் வீதியில் பயணிக்காது வீதியைவிட்டு தரையிறங்கி பாதசாரிகள் செல்லும் கரையோரமாக பயணிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சீ.பத்மநாதன்

சாவகச்சேரி தொகுதியில் அமைந்துள்ள ஏ-9 வீதியில் ஆரம்பிக்கும், நுணாவில் சந்தியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி வரையான 3 கிலோ மீற்றர் தூர வீதி குன்றும் குழியுமாக நீண்ட காலம் எவரும் கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டது. அதனைப் புனரமைக்குமாறு மக்கள் பலமுறை விடுத்த கோரிக்கையின் பேரில் 2012 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் இந்த வீதியில் காணப்பட்ட குழிகளுக்கும் பள்ளங்களுக்கும் கற்கள் பரவப்பட்டு தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டது. ஆனால் ஓர் ஆண்டு முடிவதற்குள்ளேயே மீண்டும் பெரிய குழிகளும், பள்ளங்களும் ஏற்பட்டு இவ்வீதியில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.



பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்கான பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து கனகன்புளியடி ஊடாக கொடிகாமத்துக்கான பஸ், தனியார் பஸ்கள், கனரக வாகனங்கள், படையினரின் வாகனங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பாரவூர்திகள் , கொழும்பு செல்லும் பாரவூர்திகள் ஆகியன அடிக்கடி இந்த வீதி வழியூடாகப் பயணிக்கின்றன.

தற்போது மோட்டார் சைக்கிள்களிலும், ஓட் டோக்களிலும் செல்வோர் தார் வீதியில் பயணிக்காது வீதியைவிட்டு தரையிறங்கி பாதசாரிகள் செல்லும் கரையோரமாக பயணிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விபத்துக்கள் அதிகளவில் ஏற்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த வீதியை மீண்டும் புனரமைக்கும்போது முன்னர் செய்தமை போன்று வீதியில் காணப்படும் கிடங்குகளுக்கும், குழிகளுக்கும் மட்டும் கற்களைப் பரவி தார் ஊற்றாமல் இந்த வீதியை "காப்பெற் வீதி"யாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சாவகச்சேரி நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் வரும் எத்தனையோ உள்வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ள நிலையில் முக்கியமான இந்த வீதி மட்டும் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்த வீதியை "காப்பெற் வீதி"யாக மாற்றியமைத்துத் தருமாறு சாவகச்சேரி நகர சபையைக் கோரியபோது அவர்கள் இந்த வீதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்டதால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளனர். ஆகவே இந்த வீதியின் முக்கியத் துவத்தைக் கருத்தில் கொண்டு 3 கிலோ மீற்றர் மட்டுமே கொண்ட இந்த வீதியை "காப்பெற் வீதி"யாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் அவசியமாகும்.

இந்த வீதி, நுணாவில், மட்டுவில், கல்வயல், சரசாலை, வேம்பிராய் ஆகிய கிராம மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாகவும், ஏனைய பிரதான வீதிகளுடனான இணைப்பு வீதியாகவும் காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் புனரமைக்கப்பட்ட இந்த வீதி 2013 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னரே மீண்டும் பெரிய குழிகளும் கிடங்குகளும் ஏற்பட்டு போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது என்றால் அதற்கான பிரதான காரணம் இந்த வீதியூடாக அதிகளவில் வாகனங்கள் செல்வது என்பதை அனைவரும் அறிவார்கள். எனவே இந்த வீதியைக் "காப்பெற் வீதி"யாக மாற் றாமல் மீண்டும் சிறு திருத்தங்கள் செய்வதில் எவ் வித பிரயோசனமும் இல்லையென்பதுடன், அது அரச பணத்தை வீண் விரய மாக்குவதற்கே வழிவகுக்கும் என்பதே உண்மை நிலை யாகும்.

வீதி அபிவிருத்தித் திணைக் களம் சாவகச்சேரியிலிருந்து 25 கிலோமீற்றர் தூரத்தி லுள்ள பருத்தித்துறையில் அமைந்துள்ளதால் இந்த முக்கியமான வீதியின் அவல நிலையை அவர்கள் அறிந்தி ருக்கவில்லை. மேலும், பொது மக்கள் நீண்ட தூரம் பிரயாணம் செய்து பருத்தித்துறை செல்ல முடியாதுள்ளது. ஆகவே இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுத்து இந்த வீதியைக் "காப்பெற் வீதி"யாக மாற்றியமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேலதிகாரிகள் மூலம் கிடைக்கும். பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும்.



**இடபம்**: உஷ்ண சம்பந்தமான நோய்வரக்கூடும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் அதைத் தடுக்கலாம். வீண் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தாராளமாக பணம் செலவு செய்து தேவையானவற்றை வாங்குவீர்கள்.



**மிதுனம்**: மனதில் உற்சாகம் பிறக்கும். தேவையான உதவிகளும் கிடைக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். செல்வம் சேரும். வெளியூர் பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும்.



**கடகம்**: கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புகளை சமாளிக்கும்போது கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பயன் கிடைக்கும்.



**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலைச் சுமை இருக்கும். எப்படியும் செய்து முடித்து நல்ல பெயர் வாங்கி விடுவீர்கள். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் நீங்கும்.



**கன்னி**: உறவினர்கள் வருகையும் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும் எதிர்பாராத செலவும் உண்டாகும். கவனம் தேவை. முயற்சிகள் தாமதப்படும். விளையாட்டுகளில் கவனம் தேவை.



**துலாம்**: துன்பங்கள் நீங்கி வாழ்க்கையில் இன்பம் உண்டாகும். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். அதே நேரத்தில் எதிர்பாராத செலவும் ஏற்படும். உடமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது.



**விருச்சிகம்**: மறைமுக எதிர்ப்புகள் விலகும். எதிரிகளும் நண்பராவார்கள். வேலையில் முன்னேற்றம் உண்டாகும். உங்களுக்குப் பின்னால் உங்களைப் பற்றிப் புறம் பேசியவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள். எதிலும் எச்சரிக்கை தேவை.



**தனுசு**: எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். உங்களுக்கு வரும் முன்கோபத்தைத் தவிர்ப்பது முன்னேற்றத்துக்கு உதவும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மகரம்**: எதிர்ப்புகள் நீங்கும். போட்டிகள் பற்றிய கவலையை விட்டுவிட்டு தொழில், வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம்.



**கும்பம்**: சக ஊழியர்களிடம் பேசும்போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாக்கம் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும். பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**மீனம்**: கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. உங்களை எல்லோரும் நேசிப்பார்கள். எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.

## நாளை

**வைகாசி-01 வியாழக்கிழமை | 15.05.2014**

திதி: பிரதமை மு.இ.11.49 வரை
நட்சத்திரம்: வைகாசி விசாகம் மு.ப.07.17 வரை

சுபநேரம்: 07.23-08.53 வரை
இராகுகாலம்: 01.23-02.53 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### மரணமிலாப் பெருநிலை

மனித ஆன்மாவின் அழிவற்ற தன்மையைப் பற்றிய கேள்வியைத்தான் பலர் பலமுறை கேட்டிருக்கிறார்கள். பலர் இந்தக் கேள்விக்குப் பதிலை உலகம் முழுவதிலும் தேடியிருக்கிறார்கள். இந்தக் கேள்விக்குப் பதிலைத்தான் மனித மனம் மிகவும் ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறது. இந்தக் கேள்வி ஒன்றுதான் நம் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. வேறு எதற்கும் இவ்வளவு முக்கியத்துவம் இல்லை. கவிகள், ரிஷிகள், புரோகிதர்கள், தீர்க்க தரிசிகள் எல்லோரும் இந்தக் கருத்தையே ஆராய முயன்றிருக்கிறார்கள். முடிசூடிய மன்னர்களும் இதைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள். பிடி சோற்றுக்குக் கையேந்தும் பிச்சைக்காரர்களும் இதைப் பற்றிக் கனவு கண்டிருக்கிறார்கள். மனிதர்களில் சிறந்தவர்கள் இதை நெருங்கியிருக்கிறார்கள்; கேவலமானவர்கள் இதை அடைய முடியும் என்று நம்பியிருக்கிறார்கள். இந்தக் கருத்தின் மேல் உள்ள ஆர்வம் இன்னும் மறையவில்லை. மனித குலம் தன் இயல்பை இழக்காத வரையில், இது மறையாது. இந்தக் கேள்விக்குப் பலர் பலவிதமான பதில்களை அளித்திருக்கிறார்கள்.

சரித்திரத்தின் ஒவ்வொரு முக்கியமான காலத்திலும், ஆயிரக்கணக்கான பேர், இதைப் பற்றிய விவாதத்தையே கைவிட்டு விட்டார்கள். ஆனாலும், இந்தக் கேள்வி எப்போதும் போல் புதியதாகவே இருக்கிறது. நம் வாழ்க்கையின் போராட்டத்திலும் குழப்பத்திலும் நாம் அடிக்கடி இதை மறந்து விடுகிறோம். ஆனால், திடீரென்று, நாம் இதய பூர்வமாக நேசித்து வந்த ஒருவரை மரணம் நம்மிடமிருந்து பிரித்து விடுகிறது. அப்போது, நம்மைச் சுற்றியுள்ள உலகத்தின் குழப்பத்தையும், போராட்டத்தையும் நாம் சற்று நேரம் மறந்து விடுகிறோம். "இதற்குப் பிறகு என்ன? ஆன்மா என்ன ஆகிறது?" என்ற கேள்வி நம் மனத்தில் ஒரு கணம் தோன்றுகிறது.

## அப்பிள் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு 200 கோடியைத் திருப்பி வழங்குகிறது



உலகப் புகழ்பெற்ற அப்பிள் நிறுவனம் தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு 200 கோடி ரூபாயைத் திருப்பி வழங்குகிறது. அப்பிள் நிறுவன மொபைல் போன்களை பயன்படுத்தும் குழந்தைகள் தங்களுக்குத் தேவையான மென்பொருள்களை அதன் ஒப் ஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்கின்றனர். இதற்காக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு கட்டணம் வசூலிப்பதை ஆட்சேபித்து வாடிக்கையாளர்கள் அமெரிக்காவின் மத்திய வர்த்தக ஆணையத்திடம் முறைப்பாடு செய்தனர்.

இந்த மொபைல் போன்களில் வாடிக்கையாளர்கள் தங்களுடைய கடவுச்சொல்லைப் பதிவு செய்தபின் 15 நிமிடங்களுக்கு யார் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும். அந்தச் சமயத்தில் குழந்தைகள் வரம்பின்றி தங்களுக்குத் தேவையான அப்ளிகேஷன்களை வாங்க முடியும். இது குறித்து வாடிக்கையாளர்களுக்கு நிறுவனம் தெரிவிக்கவில்லை. போனைப் பயன்படுத்தும் குழந்தைகள் கிட்ஸ் ஸ்டோரில் இருந்து 30 ஆயிரம் முதல் 1.60 லட்சம் ரூபா வரையுள்ள அப்ளிகேஷன்களை வாங்கியுள்ளனர். மத்திய வர்த்தக ஆணையத்திடம் முறைப்பாடு செய்துள்ள ஒரு பெண்மணி அவரது மகள் வாங்கிய விளையாட்டு அப்ளிகேஷனுக்காக 1.60 லட்சம் ரூபா செலவிட்டதாகக் கூறியுள்ளார். கடந்த ஆண்டு முதல் வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தொகை திருப்பி வழங்கப்பட்டு வருகிறது. ஒப் ஸ்டோருக்காக ஏறக்குறைய மூன்று கோடி வாடிக்கையாளர்களுக்கு ஈமெயில் மற்றும் கடிதம் மூலம் தகவல் அனுப்பியுள்ளோம் என்று அப்பிள் நிறுவனத்தின் அதிகாரிடம் குக் தெரிவித்துள்ளார்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | 2 | 4 | 3 | 1 | |
| 1 | | 5 | | | 3 | | | |
| 3 | | | | | 8 | 6 | 2 | |
| | | 1 | | 5 | | | 3 | 2 |
| | 3 | | 4 | | 9 | | 8 | |
| 7 | 6 | | | 3 | | 1 | | |
| | 5 | 7 | 2 | | | | | 3 |
| | | | 6 | | | 2 | | 8 |
| | 4 | 6 | 3 | 8 | | 5 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 8 | 9 | 7 | 6 | 1 | 4 | 3 |
| 9 | 4 | 3 | 8 | 1 | 2 | 5 | 6 | 7 |
| 1 | 7 | 6 | 5 | 3 | 4 | 2 | 9 | 8 |
| 8 | 3 | 4 | 6 | 5 | 1 | 9 | 7 | 2 |
| 2 | 1 | 9 | 3 | 8 | 7 | 4 | 5 | 6 |
| 7 | 6 | 5 | 2 | 4 | 9 | 3 | 8 | 1 |
| 6 | 8 | 2 | 4 | 9 | 3 | 7 | 1 | 5 |
| 3 | 9 | 1 | 7 | 6 | 5 | 8 | 2 | 4 |
| 4 | 5 | 7 | 1 | 2 | 8 | 6 | 3 | 9 |

# தேள் கடித்தால் இதய நோய் வராது



தேள்களில் கருந்தேள் உள்ளிட்ட பல வகைகள் உள்ளன. இதன் உடல் கணுக்களால் ஆனது. இது ஆறு கால்களும் இரண்டு முன் பக்கக் கொடுக்குகளும் கொண்டிருக்கும். இதன் வால் கணுக்களாகவும் நுனியில் ஒரு நச்சுத்தன்மையுள்ள கூர்மையான கொடுக்கும் கொண்டிருக்கும். முன்பக்கக் கொடுக்குகள் இரையைக் கவ்விப் பிடிப்பதற்கும் பின்பக்கக் கொடுக்கு இரை அல்லது எதிரிகள் மீது நஞ்சைப் பாய்ச்சிக் கொல்வதற்கும் உதவுகின்றன.

தேள் கடித்தால் ஆயுள் முழுவதும் இதயத்தில் அடைப்பு, இதயச் செயலிழப்பால் இறப்பு நேரிடும் வாய்ப்பைத் தடுக்கிறது. இதை இங்கிலாந்தைச் சேர்ந்த லீட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

இதயத்தின் இரத்த தமனிகளில் நியோயின்டிமல் ஹைபர்பிளேசியா என்ற பிரச்சினை ஏற்படும் வாய்ப்புள்ளது. இந்தப் பிரச்சினை உள்ளவர்களின் இதய இரத்த தமனிகளில் இரத்த செல்கள் புதிதாக வளரும். தமனியில் இரத்த ஓட்டத்தை அவை தடுக்கும். அதனால், இதயக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு, இதயம் செயலிழக்கும் அபாயம் ஏற்படலாம்.

உயிருக்கு ஆபத்தான இந்த பிரச்சினையைச் சரி செய்ய, இதய அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால், இந்த பிரச்சினையே வாழ்நாளில் ஏற்படாமல் இருக்க தேள் உதவுகிறது. தேள் கொட்டும்போது அதன் கொடுக்கில் இருந்து விஷம் வெளியாகிறது. அந்த விஷத்தில் மார்கடாக்சின் என்ற பொருள் இருக்கிறது.



அது இதயத் தமனியில் நியோயின்டிமல் ஹைபர்பிளேசியா உருவாவதைத் தடுக்கிறது. அதன் மூலம், புதிய செல்கள் உருவாவது தடுக்கப்பட்டு, இதயத்தில் அடைப்பு, செயலிழப்பு தவிர்க்கப்படும். ஒரு முறை தேள் கொட்டு வாங்கியவர்கள் ஆயுள் முழுக்க இதய நோயில் இருந்து தப்ப முடியும் என்கிறது ஆராய்ச்சி முடிவு.

**தேள் கடிக்கு முதலுதவி**

கொடிய வகைத் தேள்கள் கடித்தால் உயிருக்கே ஆபத்து ஏற்படும். எனவே தேள் கடிக்கான முதலுதவி சிகிச்சை முறைகளை அனைவரும் அறிந்துகொள்வது நல்லது. தேள் கடித்தவுடன் அதன் கடிவாய்க்கு சுமார் 15 சென்ரிமீற்றர் மேல் பகுதியில் கயிறு அல்லது துணியால் இறுக்கிக் கட்டவேண்டும். இதன் மூலம் தேளின் விஷம் உடலில் பரவுவதைத் தடுக்க முடியும்.

இதன் பின்னர் தேள் கடித்த இடத்தில் சுமார் அரை மணி நேரம் ஐஸ்கட்டி அல்லது குளிர்ந்த நீரில் நனைத்த துணியால் ஒத்தடம் கொடுக்க வேண்டும். அந்த துணியால் கடிவாய் பகுதியில் கட்டும் போடலாம். இதன் மூலம் தேள் கடித்த வலி ஓரளவு குறையும். கடித்த இடத்தில் தேளின் கொடுக்கு பதிந்திருந்தால் அதை உடனடியாக அகற்ற வேண்டும். தேள் கடித்த பகுதியை உதறவோ, மேல் நோக்கி தூக்கவோ கூடாது. கீழ்நோக்கி தொங்கப்போடலாம்.

முதலுதவி செய்ததும் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று முறையான மருத்துவச் சிகிச்சை பெறுவது அவசியம். தேள் விஷம் சிறந்த வலி நிவாரணி. தேளின் விஷம் மிகக் கொடியதாக இருக்கலாம். ஆனால் அதைச் சிறந்த வலி நிவாரணியாகப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறார் இஸ்ரேல் ஆய்வாளர் மைக்கேல் குர்விட்ஸ்.



# வியாதிகளை தீர்க்கும் இஞ்சிப் பொங்கல்

பொங்கல் என்றாலே அனைவரின் ஞாபகத்துக்கும் வருவது சர்க்கரைப் பொங்கலின் தித்திப்பான சுவைதான். சர்க்கரைப் பொங்கலைத் தாண்டி அடுத்தபடியாக வெண் பொங்கல், இதனுடன் சாம்பார், வடை என்று சேர்த்து சாப்பிடுவார்கள்.

இந்த இரண்டு பொங்கலையும் விட, இஞ்சிப் பொங்கல் சுவையில் மிகவும் சிறந்தது.

பெரியவர்கள் முதல் சிறியவர்கள்வரை ஏற்படும் உபாதைகள் வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, அஜீரணக் கோளாறு போன்ற அனைத்து வியாதிகளையும் தீர்க்கும் மருத்துவர் தான் இஞ்சிப் பொங்கல்.

# மலச்சிக்கலைப் போக்க புதிய மருந்து

மலச்சிக்கலை இலகுவாக போக்கும் பொருட்டு அதிர்வை ஏற்படுத்தக்கூடிய புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தில் உள்ளெடுக்கப்பட்டு 6 அல்லது 8 மணித்தியாலங்களின் பின்னர் அதிர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் மெல்லிய மோட்டர் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

26 பேரில் இந்த மருந்து பரிசோதிக்கப்பட்டிருந்த நிலையில் அது வெற்றிகரமான முடிவைக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மின்சாரத்தால் இயங்கும் விமானம்



19 அடி நீளம் கொண்ட இந்த விமானத்தில் இருந்து வெளிவரும் சத்தமானது தலை முடியை உலர வைக்கும் ஹேர் டிரையர் கருவியின் அளவுக்கே இருக்கும் என்பது மற்றொரு ஆச்சரியமான செய்தி.

உலகிலேயே முதன்முறையாக மின்சாரத்தால் மட்டுமே இயங்கக்கூடிய விமானம் வெற்றிகரமாக வானில் பறக்க விடப்பட்டது.

இஃபேன் என்றழைக்கப்படும் இந்த சிறிய ரக விமானத்தை ஏர்பஸ் விமான நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த விமானம் முதன்முறையாக பிரான்ஸின் பார்டெக்ஸ் விமான நிலையத்தில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அதில், இஃபேன் எந்தவித பிரச்சினையும் இன்றி வானில் வெற்றிகரமாக பறந்து சாதனை படைத்துள்ளது.

19 அடி நீளம் கொண்ட இந்த விமானத்தில் இருந்து வெளிவரும் சத்தமானது தலைமுடியை உலர வைக்கும் ஹேர் டிரையர் கருவியின் அளவுக்கே இருக்கும் என்பது மற்றொரு ஆச்சரியமான செய்தி.

120 லித்தியம் அயன் பாலிமர் பற்றரிகளால் இயங்கும் இந்த விமானம் கடந்த மாதம் நடத்தப்பட்ட சோதனை ஓட்டத்தில் 10 நிமிடங்கள் வரை வானில் பறந்தது.

எனினும், பற்றரிகளை முழுமையாக ரீசார்ஜ் செய்தால் ஒரு மணி நேரம் வரை பறக்கக்கூடும் என்று ஏர்பஸ் தெரிவித்துள்ளது.

இதே அளவுள்ள பெற்றோலால் இயங்கும் விமானத்தில் ஒரு மணி நேரம் பறப்பதற்கு 55 அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன. ஆனால் இ-ஃபேனில் பறக்க 16 டொலர்களே செலவாகின்றன. சுற்றுச்சூழலுக்கும் எந்தவித பாதிப்பும் இருக்காது என்று தெரிவித்துள்ளது.

## பாடத்தெரிவு தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 14

க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்கான பாடத்தெரிவு தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

பின்வரும் திகதிகளில் காலை 9.30 மணியளவில் கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் செயலமர்வு ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

16.05.2014 - புனித பத்திரிசியார் கல்லூரி, 19.05.2014 - கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், 20.05.2014 - கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம், 22.05.2014 - உரும்பிராய் இந்துக் கல்லூரி, 23.05.2014 - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, 26.05.2014 - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, 27.05.2014 - கொக்குவில் இந்துக் கல்லூரி, 29.05.2014 - இடைக்காடு மகா வித்தியாலயம் (க)


# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



Happy 1st birthday செல்வன்

## சாஹித்தியன்

மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த
நேசன் செல்வகுமாரி
தம்பதியரின் செல்வப் புதல்வன் சாஹித்தியன் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (14.05.2014) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவர் கடவுள் அருளால் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, பெரியப்பாமார் பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார்.




## கருத்தரங்குகள்

வலி. வடக்கு, மே 14

யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலாக் கருத்தரங்குத் தொடர்-4 இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.குடாநாட்டு நீர் மாசடைதலும் அதன் தாக்கங்களும் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறைத் தலைவர் மருத்துவ நிபுணர் இராசேந்திரா சுரேந்திரகுமார் விளக்கவுரை ஆற்றவுள்ளார்.

இதில் ஆர்வமுடைய அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பழைய மாணவர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (வ-86)

◆◆◆

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள திருக்குறள் கருத்தரங்கு இன்று புதன் காலை 9 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்புக்கு அருகில் உள்ள யுரோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் 'திருக்குறள் கூறும் அறிவியல் பார்வை' என்ற பொருளில் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனின் நெறிப்படுத்தலில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. 'திருக்குறளில் பொறியியல்' என்ற பொருளில் எந்திரி மு.தில்லைநாதனும், 'திருக்குறளில் பொருளியல்' என்ற பொருளில் யாழ். தமிழ்ச் சங்க உபதலைவரும் கல்வியியற் பேராசிரியருமாகிய மா.சின்னத்தம்பியும் 'திருக்குறளில் மருத்துவம்' என்ற பொருளில் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட பேராசிரியர் க.சிவபாலனும், திருக்குறளில் முகாமைத்துவம் என்ற பொருளில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தலைவரும், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதியுமாகிய பேராசிரியர் தி.வேல்நம்பியும் 'திருக்குறளில் சட்டம்' என்ற பொருளில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசுவும், கருத்துரைகளை வழங்கவுள்ளனர். யாழ். தமிழ்ச் சங்கத்தின் பொருளாளரும், விரிவுரையாளருமான ச.லலீசன் நிறைவுரையையும் நன்றியுரையையும் நிகழ்த்துவார். (வ)

## வருடாந்த பரிசளிப்பு விழா

சுன்னாகம், மே 14

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி பிரதா கிரிதரன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் கலந்து கொள்வதுடன் ஆசியுரையை சிவஸ்ரீ.வ.உமாசுதக்குருக்கள் வழங்கவுள்ளார். (க)

## நல்லூர் உற்சவம்; ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் 16 இல்

யாழ்ப்பாணம், மே 14

எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நல்லூர் கந்தசுவாமி கோவிலின் இவ்வாண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு, யாழ். மாநகர சபை முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


### வளவு விற்பனைக்கு

அராலி தெற்கு ஆகாய குளப்பிள்ளையார் கோயிலுக்கும் ஆலடிச்சந்திக்கும் இடையில் பிரதான வீதிக்கு 100மீற்றர் தொலைவிலுள்ள 8பரப்பு பனைகளுடனும் கிணற்றுடனும் கூடிய வளவு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
G.ஆனந்தன், 021 205 1404 (43043) (12.3.6)

### நிரந்தர தொழில் வாய்ப்பு

இலங்கையில் முகாமைத்துவ பயிற்சியிலும், சந்தைப்படுத்தல் துறையிலும் சிறந்து விளங்கும் எமது வவுனியா S.D.Mகிளைக் காரியாலயத்தை நாடளாவிய ரீதியாக விஸ்தரிப்பதனால் க.பொ.த.சா.தரம் கற்ற இருபாலாருக்கும் அவர்களின் தகுதிக்கேற்ப பயிற்சியளிக்கப்பட்டு பயிற்சியின் போது சம்பளம், பயிற்சி முடிவில் 45,000/= சம்பளத்துடன் அவர்கள் விரும்பும் மாவட்டத்தில் முகாமைத்துவ டிப்ளோமா சான்றிதழுடன் எமது காரியாலயத்தில் நிரந்தர வேலை வாய்ப்பு. நேர்முகத் தேர்விற்கு சகல ஆவணங்களுடன் நேரில் வரவும். (43301) (12.3.6)

தொடர்பு:
077 367 8472/071 495 7582

# இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல், இசை, நாடக விழா - 2014

63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.



இன்று (14.05.2014)
இரண்டாம் நாள்
நேரம்: பி.ப 4.00 மணி

பிரதம விருந்தினர்
பேராசிரியர்
சி.சிவலிங்கராஜா அவர்கள்
(முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர், யா/பல்கலைக்கழகம்)

★ நாச்சிமார் கோயிலடி "சபேசன்" குழுவினர் வழங்கும் மங்கல இசை
நாதஸ்வரம்: திரு மாணிக்கம் சபேசன், திரு முருகையா ரமேஸ்
தவில்: திரு நடராஜா வினோதன், திரு கண்ணன் முரளி
★ மங்கல விளக்கேற்றல்
★ தேவாரம் : செல்வன் ஜெகதீஸ்வரன் மதுஷிகன்
★ ஆசியுரை : மௌலவி அப்துல் அசீஸ் (காசிமி)
[தலைவர், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா, யாழ்/கிளிநொச்சி மாவட்டம்]
★ வாழ்த்துரை : திரு L.இளங்கோவன் [செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர் செயலகம்]
★ "சைவச் சிறுவர் இல்ல மாணவர்கள்" வழங்கும் காவடி
★ G.நக்கீரன் குழுவினர் வழங்கும் வேணுகான இசை
புல்லாங்குழல் : திரு G. நக்கீரன்
வயலின் : திரு. அ. ஜெயராமன்
மிருதங்கம் : திரு K. அனந்தகோபன்
முகர்சிங் : திரு.க. நந்தகுமார்
தபேலா : திரு. பிரபாகர சர்மா
★ "புஷ்பாலய" நடன சபா மாணவிகள் வழங்கும் அபிநய சதங்கை
நட்டுவாங்கம் : செல்வி ரஜிதா சின்னத்துரை   பாட்டு : திரு. S.அமிர்தசிந்துஜன்
வயலின் : திரு. அ. ஜெயராமன்   மிருதங்கம் : திரு. க. நந்தகுமார்
★ பட்டிமன்றம்: பாரம்பரிய கலைகளின் இருப்பிற்கு நவீனத்துவம் சாதகமானதா? பாதகமானதா?
தலைவர் : பேராசிரியர் T.வேல்நம்பி அவர்கள்
[தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்]
★ கலைஞர்கள் கௌரவிப்பு
★ பிரதம விருந்தினர் உரை
★ பாசையூர் சென் அன்ரனிஸ் கலைக்கழகம் வழங்கும் வீரபாண்டிய கட்டப்பொம்மன் தென்மோடி நாட்டுக்கூத்து
★ நன்றியுரை

(48046)(10.6)

அனுசரணை: கிருபா லேணர்ஸ்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200
Proprietor: A. Kirubaharan
0777 225 292


## நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழு 22 ஆவது நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

ஆக்கங்கள் யாவும் ஜூன் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதம பதிப்பாசிரியர் (நல்லைக்குமரன் மலர் 22) இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கோப்பாயில் வங்கிக் கிளை புதிய இடத்தில்

இலங்கை வங்கியின் கோப்பாய் கிளை இடமாற்றப்பட்டு கோப்பாய் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் இயங்கிவருகிறது. இந்தவங்கிக்கிளைமுன்னர் கோப்பாய் சந்திக்கு அருகில்கைதடி-மானிப்பாய் வீதியில் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-17)


### பெயர் மாற்றம்

கெங்காதரன் கிராமம், அக்கராயனில் வசித்து வரும்
கஜேந்திரன் வில்லியம் மோசஸ்
ஆகிய நான் இன்று தொடக்கம் (14.05.2014) எனது பெயரை
கஜேந்திரன் ரூபன்
என மாற்றம் செய்கின்றேன் என்பதை அறியத்தருகின்றேன். (41296) (12.3.6)

### மக்கள் தொண்டனை மனதார வாழ்த்துகின்றோம்




மக்கள் நலன்காக்கும் பிரிவின்
போஷகராகப் பதவிவகிக்கும்
லயன் டாக்டர் வை.தியாகராஜா
அவர்கள் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நூறாவது ஆண்டுக் காலப்பகுதியில் (2016/2017) சர்வதேச லயன்ஸ்கழக 306B1 மவாட்ட ஆளுநராக பதவிவகிக்க 2 ஆவது உப ஆளுநராக பெரும்பான்மை வாக்குகளால் கடந்த சனிக்கிழமை (10.05.2014) கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தெரிவுசெய்யப்பட்டதையிட்டு பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், மக்கள் நலன் காக்கும் பிரிவு, கோப்பாய்.

### கணக்காளர் (Accountant) தேவை

தகைமைகள்:
1) வயது 30-45 இற்கு இடைப்பட்டவர்கள் (ஆண்கள்)
2) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் கணக்காளருக்கான பட்டம் பெற்றவர்.
3) முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக்கோவையை பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அன்னை நாகா பூட்சிற்றி
இல.175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி:annainagaa@yahoo.com

✱தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
✱சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். (அ/14259) (3.6.4)

### வாழ்க வளமுடன்

திருவருளும், குருவருளும் பொலிய இன்று சஷ்டியப்த பூர்த்தி விழாவை நிறைவுடன் கொண்டாடும் பிரம்மஸ்ரீ-சே-சிவபாலசர்மா தம்பதிகள் சீரும் திருவும் வலிவும் பொலிவும் பெற்று சிவாகம சாதக சங்கிரகராக வாழ்ந்து சைவசமயத்துக்கும் சமூகத்துக்கும் சேவையாற்றி தீர்க்காயுளுடனும் இல்லறத்தில் நல்லறமாற்றி வாழ்ந்திட இறையருளைச் சிந்தித்து வந்தித்து என்றென்றும் வாழ்கவென பார்வதி பரமேஸ்வரன் திருவடிகளை வழுத்துகின்றோம்.
சிவஸ்ரீ-சோ.இ. பிரணதார்த்திஹரகுருக்கள் குடும்பத்தினர்.
(18002)(5.6.4) வீரபத்திரர் கோயில், கோப்பாய்.

### தேவை

கடை கட்டுவதற்குப் பொருத்தமான காணி ஒன்று உடன் தேவை.
(யாழ்,திருநெல்வேலி, கோண்டாவில் விரும்பத்தக்கது). (43047) (12.3.6)
தொடர்பு:
077 416 3146/021 320 5939

### Personal Class

இரசாயனவியல்
சி.அனோஜன் BSc (Chem.Sp)
35 வருட வினாத்தாள்
கற்பிக்கப்படும்
தொடர்பு: 077 078 1451 (47403) (46.6.3)

# பிச்சைப் பாத்திர ஊர்வலம் நாளை

கொழும்பு,மே 14
பொலநறுவையில் நாளை வியாழக்கிழமை தேரர்களின் பிச்சைப்பாத்திர ஊர்வலம் நடைபெறவுள்ளது.
பொலநறுவையில் நடைபெறவுள்ள தேசிய வெசாக் உற்சவ கொண்டாட்டங்களின் ஒரு சமய ஞாபகார்த்த நிகழ்வாக பிச்சைப் பாத்திர ஊர்வலம் நடைபெறவுள்ளது.
பொலநறுவை மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் பிச்சைப்பாத்திர ஊர்வலம் அந்த மாவட்டத்தின் சிறி ஜயந்தி விகாரையிலிருந்து ஆரம்பமாகவுள்ளது. (ச)



வெசாக் உற்சவத்தை முன்னிட்டு தபால் திணைக்களத்தின் முத்திரை பணியகத்தால் நான்கு புதிய முத்திரைகள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. இந்த ஞாபகார்த்த முத்திரைகள் தபால் மாஅதிபர் டி.எல்.பீ.ரோஹன அபேரத்னவால் பிரதமர் தி.மு. ஜயரத்னவிடம் கையளிக்கப்பட்டன. (ச)

# கணித பாடத்தில் சித்தி குறைவு ஆராய ஆணைக்குழு நியமனம்

கொழும்பு,மே 14
கடைசியாக இடம்பெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணித பாடத்தில் பெருமளவு மாணவர்கள் சித்தி எய்தாமை குறித்து ஆராய்வதற்கு பத்து பேர் அடங்கிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளது.
சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் லட்சக் கணக்கான மாணவர்கள் சித்தியடையவில்லை.
மாணவர்கள் கணித பாடத்தில் பின்னடைவை எதிர்நோக்குவதற்கான காரணங்களைக் கண்டறிந்து 60 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். ஊவா, வெல்லஸ்ஸ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் இந்த ஆணைக் குழுவின் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 2013 ஆம் ஆண்டில் 1,12,000 மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடையவில்லை. அதனால் அவர்களால் உயர்கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ச)

# பாடசாலைகளுக்கு அருகில் போதைப் பொருள் விற்பனை

## நடவடிக்கை எடுக்க அறிவுறுத்து

கொழும்பு,மே 14
பாடசாலைகளுக்கு அருகில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்கான விசேட சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.
பாடசாலைகளுக்கு அருகில் போதைப் பொருள் விற்பனை செய்தல் மற்றும் கப்பம் பெறுதல் குறித்து பொதுமக்களிடம் இருந்துகிடைக்கப்பெற்றமுறைப்பாடுகளைத் தொடர்ந்து ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

**போதைப் பொருள்கள் நகர்ப்புற பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனை செய்யப்படு கின்றன**

பல்வேறுபட்ட போதைப்பொருள்கள் நகர்ப்புற பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனை செய்யப்படுகின்றன என்று ஜனாதிபதிக்கு முறையிடப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ச-22)

# தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் ஆசிரியர்கள்

## தொழிற்சங்க பேச்சாளர் மஹிந்த ஜயசிங்க எச்சரிக்கை



மஹிந்த ஜயசிங்க

கொழும்பு,மே 14
ஆசிரியர்களும்,அதிபர்களும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அதிபர், ஆசிரியர் கூட்டு தொழிற்சங்கத்தின் பேச்சாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.
எமது பிரச்சினைகள் குறித்து பல தடவைகள் எடுத்துக் கூறியும் கல்வி அமைச்சு மெத்தனப் போக்கைப் பின்பற்றி வருகின்றது என்று ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.
பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்களை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இது வரையில் அதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. 70,000 ஆசிரியர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக பதவி உயர்வுகளுக்காக காத்திருக் கின்றனர். அதிபர், ஆசிரியர்களுக்கு இடையிலான சம்பளமுரண்பாடுகளைக் களைவதற்கான யோசனைகளையும் இதுவரை நடைமுறைப்படுத்த வில்லை என்று மஹிந்த ஜயசிங்க கூறினார்.
தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக முன்னர் அறிவித்த போது தீர்வு வழங்குவதாக அறிவித்த கல்வி அமைச்சு பின்னர் தமது பிரச்சினைகளை மறந்து விட்டது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# 4,000 கிராம சேவையாளர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை

## பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தகவல்

கொழும்பு,மே 14
நாட்டில் சுமார் 4,000 கிராம சேவையாளர்களை விரைவில் புதிதாக இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.
நாடு முழுவதும் 4,400 கிராம உத்தியோகத்தர்களுக்கு பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.
அண்மையில் வழங்கிய நியமனத்தில் சுமார் 500 உத்தியோகத்தர்கள் இதுவரை தமது நியமனங்களைப் பொறுப் பேற்கவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.
இதற்கமைய, பரீட்சையின் புள்ளிகளுக்கு அமைய, ஏனையவர்களை பதவிக்கு இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)



டபிள்யூ. ஜே. செனவிரத்ன

# வெசாக்கை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

வெசாக் தின நிகழ்வுகளைப் பார்வையிட வருகைதரும் பொதுமக்களின் வசதி கருதி விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.
வெசாக் தினத்தில் இருந்து ஒருவார காலத்துக்கு இந்த விசேட பஸ் சேவைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதம நடவடிக்கை அத்தியட்சகர் எச்.எம்.எ.சந்திரசிறி தெரிவித்தார்.
வெசாக் பௌர்ணமி தினத்தில் இருந்து விகாரைகளுக்கு வழிபாடுகளுக்குச் செல்லும் பக்தர்கள் மற்றும் வெசாக் அலங்கார பந்தல் உள்ளிட்ட வெளிச்சக்கூடுகளை பார்வையிடச் செல்லும் மக்களுக்காக விசேட பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன.
இந்த விசேட பஸ் சேவைகள் நாளாந்தம் மாலை ஆரம்பிக்கப்பட்டு நள்ளிரவு வரை முன்னெடுக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.(ச)

# 25,000 கிலோ கழிவு தேயிலை சிக்கியது

கொழும்பு,மே 14
ஏற்றுமதி செய்யும் நோக்கில் 25 ஆயிரம் கிலோ கழிவுத் தேயிலை அடங்கிய கொள்கலன் ஒன்றை கிரிபத்கொடை பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.
கழிவுத் தேயிலை அடங்கிய 40 அடி நீளமான கொள்கலனை எடுத்துவந்த மூன்று சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையின் ஊடக பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து குருநாகல் பிரதேசத்திலிருந்து வந்துகொண்டிருந்த கொள்கலன் ஒன்றை கொழும்பு - கண்டி பிரதான வீதி, தளுகம பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழிமறித்து சோதனைக்குட் படுத்தியுள்ளனர்.
கொள்கலனில் இருந்து கழிவுத் தேயிலை மூட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறையில் இருந்து கைதி தப்பியோட்டம்

கொழும்பு,மே14
பொலநறுவை சிறைச்சாலையில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதியொருவர் தப்பிச் சென்றுள்ளார்.
வெசாக் தயார்படுத்தல்களில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தக் கைதி தப்பிச்சென்றுள்ளார் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய கூறினார்.
திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைதாகி, தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.
இதேவேளை, அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கடந்த 9 ஆம் திகதி இரண்டு கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.
அவர்களைச் கைதுசெய்வதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# மதுப் போத்தல்களுடன் இருவர் சிக்கினர்



மதுபானப் போத்தல்களை பரிசீலிக்கின்றனர் பொலிஸார்.

கொழும்பு,மே 14
மதுபானப் போத்தல்களை சட்ட விரோதமாக தோட்டப் பகுதிகளில் விற்பனை செய்ய முயற்சித்த இருவர், நேற்று செவ்வாய்க்கிழமை ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஹற்றன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கு அமைய விரைந்து செயற்பட்ட பொலிஸார் ஓட்டோவொன்றைச் சுற்றி வளைத்து விசாரணை மேற்கொண்டபோதே இவ்வாறு மதுபானப் போத்தல்கள் கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.
இதனையடுத்து ஓட்டோவில் பயணித்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட நபர்கள் ஹற்றனிலிருந்து வெலிஓயா பிரதேசத்துக்கு குறிப்பிட்ட ஓட்டோவில் 30 மதுபான போத்தல்களை எடுத்துச் சென்றனர் என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கைதடி சாந்தி நிலையத்தில் அன்னையர் தின நிகழ்வு

தென்மராட்சி, மே 14

சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு கைதடி சாந்தி நிலையத்தில் அன்னையர் தின விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாந்தி நிலைய மண்டபத்தில் நிலைய அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இல்லத்தில் தங்கியுள்ள அன்னையர்கள் "மனித வாழ்வில் அன்னையின் பங்கு" என்னும் தலைப்பிலும், ஆண் முதியோர்களால் "குடும்பப் பொறுப்பில் அன்னையர்களின் பங்களிப்பு" என்னும் தலைப்பிலும் உரைகள் ஆற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9-17)

## பாடசாலையில் திருட்டு

வவுனியா, மே 14

வவுனியா மதினா நகர் பாடசாலையில் திருட்டுச் சம்பவமொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் 4 அறைகளின் கதவுகள் மற்றும் கூரைகள் ஊடாக இந்தத் திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுக் குறித்து வவுனியா பொலிஸாருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை பாடசாலை நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்திருந்தனர்.

சம்பவ இடத்தை வவுனியா பொலிஸார் மற்றும் வவுனியா நகர கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா ஆகியோர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

ஏற்கெனவே இந்தப் பாடசாலையில் இரு தடவைகள் உலக உணவுத் திட்ட உணவுப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு திருட்டுச் சம்பவங்கள் குறிப்பிட்ட பாடசாலையில் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் உரிய பாதுகாப்பை பொலிஸார் வழங்க வேண்டும் என்று பாடசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-402)

## வெவ்வேறு இடங்களில் சங்கிலி அறுப்பு

வவுனியா, மே 14

வவுனியாவில் இரு வேறு இடங்களில் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வவுனியா, உக்கிளாங்குளத்திலும், செட்டிகுளப் பகுதியிலும் இடம்பெற்றுள்ளன.

உக்கிளாங்குளம் பகுதியில் சகோதரிகள் இருவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் பின்னால் 'ஹெல்மட், ஜக்கட்' அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சகோதரிகளில் ஒருவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்தெடுத்துச் சென்றுள்ளனர். எனினும் அந்தச் சங்கிலி 'றோல் கோட்' என்று அவர்கள் தெரிவித்தனர்.

செட்டிக்குளப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் சங்கிலி அறுத்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளது. முதலில் இடம்பெற்ற பாணியில் ஹெல்மட், ஜக்கட் அணிந்த இருவராலேயே இரண்டாவது சம்பவத்திலும் இரண்டு பவுண் சங்கிலி அறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-402)

## முழுநிலா கருத்தாடல் நிகழ்வு

வவுனியா, மே 14

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் ந.பார்த்தீபன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு "திறனாய்வுக்கலை" என்னும் தலைப்பில் இடம்பெறும் இந்தக் கருத்தாடல் நிகழ்வில் சிறப்புரையை எழுத்தாளர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தவுள்ளார். வித்தியா ரத்னா இ.எஸ்.வரதராஜன் கருத்தாடல் நிகழ்வைத் தொடக்கி வைப்பார். நன்றியுரையை கவிஞர் த.தனசீலன் நிகழ்த்துவார். இந்தக் கருத்தாடல் நிகழ்வில் கல்விமான்கள் மற்றும் எழுத்தாளர்கள் தமது கருத்துக்களை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## இலவச மருத்துவ முகாம்

மன்னார் வீதியிலுள்ள கணேச புரம் கிராமத்தில் இலவச சித்த ஆயுர்வேத மருத்துவ முகாம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை இடம்பெற வுள்ளது.

இந்த மருத்துவ முகாம் வவு னியா மாவட்ட சித்த ஆயுர் வேத பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள தாக அதன் செயலாளர் ப.சத்தியநாதன் அறிவித்துள்ளார். (க-422)

## கலாபூஷண விருதுக்காக விண்ணப்பங்கள்

"கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் கலாபூஷண விருதுக்காக இந்த வருடமும் சிற்பம், ஓவியம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற கலைத் துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு அமைவாக தெல்லிப்பழைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட விருதை பெறத் தகுதியுடைய கலைஞர்கள் இதற்குரிய விண்ணப்பப் படிவத்தை தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க)

## புதிய கட்டடத் திறப்பு விழா

காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச் சந்தியில் அமைந்துள்ள கலாஜோதி இளைஞர் ஒன்றியத்தின் நூல் நிலையம், சனசமூக நிலையம், பாலர் பாடசாலை ஆகியவற்றின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. செ.சி. பூலோக சிங்கம் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தி னராக மருத்துவர் இ.மோகன், நல்லூர் பிரதேச சபை செயலாளர் பா.செந்தில்நந்தனன், மூத்த உறுப்பினரான பொ.மகேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து நன்றியுரையுடன் விழா நிறைவுறும். (க)

## கட்டடக்கலை தொடர்பான உரை

யாழ்ப்பாணம், மே 14

பேராசிரியர் அனோமா பீரிஸ் கட்டடக் கலை தொடர்பான உரையொன்றை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தவுள்ளார்.

கட்டடக்கலை வரலாற்று ஆசிரியரான பேராசி ரியர் அனோமா பீரிஸ், ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலை, கட்டடம் மற்றும் திட்டமிடல் பீடத்தின் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

இவரது உரை நாளை வியாழக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை இலக்கம் 199, கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## பெருந் திருவிழா

வடமராட்சி, மே 14

பிரசித்தி பெற்ற கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் தேவாலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் மாலை 5.30 மணிக்கு நவநாள் வழிபாடுகள் இடம்பெறும். எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெறும். மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தாளையடி பங்குத்தந்தை அருட்திரு எம்.யேசுரத்தினம் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியுடன் திருவிழா நிறைவுபெறும்.

இந்தத் திருவிழாவையொட்டி யாத்திரிகர்களின் வசதிக்காக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (வ-173)

## 45ஆம் நாள் நினைவு கூரல்



மண்ணில் 31.03.1991

விண்ணில் 31.03.2014

செல்வன்

### நவரத்தினம் நிரூபன்

பும்பிட்டியெனும் சிறுப்பிட்டியில் பூத்தவனே
அம்மா அப்பா தம்பியின் அன்பில் கலந்தவனே
குற்றம் இல்லா குழந்தைமனம் பெற்றவனே- நிருபனே
உற்றார் உறவினர் தம் மனதைக் கவர்ந்தவனே மறைந்தனையோ

அன்பும் பண்பும் அமைதிக்கும் உடையவனே
கல்விப்பணி பொதுப்பணி எங்கும் உன் பணி தந்தவனே
ஊருக்கு நல்லது அதுவே உனக்கென புரிந்தவனே -நிருபனே
நமக்கு நீ வேண்டும் என புரியாமல் போனாயோ மறந்தாயோ

பிறந்தாய் வளர்ந்தாய் நல்லவனாய் நல்லதென நாமிருந்தோம்
எங்கும் எதிலும் வல்லவனாய் நல்லதென நாமிருந்தோம்
சுயமாக மாண்டுவிட்டாய் என்னவென்று தவிக்கின்றோம்- மனிதம்
மரணத்தை மறுக்கையில் நீயோ அகாலமரணத்தை தழுவினையோ

வையத்தில் மாந்தற்கு மரணம் புதிதல்ல - ஆனால்
சாயும் வயதில் நீயில்லை ஆதலினால் தவிக்கின்றோம்
சோகம் உனக்கென்றாய் நம் சோகம் மறந்தனையோ
விதியென கதைமுடிக்கும் தெய்வத்திருவடிக்கே சென்றனையோ

அமரனே நிருபனே எப்படியும் வாழலாம் என்பதை வெறுத்தவனே
இப்படித்தான் என்கதையென எழுதி முடித்தவனே மாண்டனையோ
தாமோதர மண்ணில் நீ தரம்மிக்க தனையனன்றோ- ஆதலினால்
காணாமல் தவிக்கின்றோம் கண்ணீரில் துடிக்கின்றோம்.

ஆற்றொணாத் துயரத்துடன் பரிதவித்து
நிற்கும் அனைவருக்கும்
'மரணித்தவர்களைப் பார்த்து
மரணிக்கப்போகின்றவர்கள்
அழுகின்றார்'
என்ற பட்டினத்தாரின் வரிகளை நினைவு
கூர்ந்து அனைவரும் இணைந்து
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
வேண்டிப் பிரார்த்திப்போமாக.


எல்லாம் வல்ல செல்லப்பிள்ளையாரை
வேண்டி எமது ஆழ்ந்த இரங்கலைப்
பதிவு செய்கின்றோம்.

(C/14260)(5.6.3.)

சிறுப்பிட்டி ஒன்றியம் – சுவிஸ்
சி.வை.தா.ஒன்றியம் – சுவிஸ்கிளை
சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை பழைய மாணவர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

14.05.2014



அமரர்

### சின்னப்பு தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்)

நெற்றியில் நிறைந்த நீறும்
நித்தமும் புன்சிரிப்பும்
பற்றுடன் பூசை செய்தே
பணிகளைத் தொடரும் ஆசான்
முற்றிய ஞானியைப் போல்
பற்றற வாழ்ந்த போதும்
பெற்றிட்ட பிள்ளைகள்,
சுற்றம் போற்றிட வாழ்ந்தீர் ஐயா,
மூபத்தொடு ஒரு நாளும்
இத்தரை நீத்து இன்று
ஓடியே கழிந்ததன்றோ
செப்பிட வார்த்தையின்றித்
திக்கற்று நிற்கும் எமக்கு
வானத்தில் நின்றேனும் நீர் எமை
வாழ்த்தியே அருள்க ஐயா!

கடந்த 14.04.2014 ஆம் திகதியன்று எமது அன்புத் தெய்வம் காலமான செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் தேறுதல் கூறியோருக்கும், அன்னாரது ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டு, பல வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை வழங்கியோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

## இமையாணனில் நாளை பட்டிமன்றம்

வடமராட்சி, மே 14

இமையாணன், துவாளி கண்ணகை அம்மன் கோவிலில் நாளை வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு "மகிழ்ச்சியான வாழ்வுக்கு பெரிதும் துணை நிற்பது பணமா குணமா" என்ற தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் இடம்பெறும் இப் பட்டிமன்றத்தில், யாழ். பட்டிமன்றக் குழுவைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டு வாதிடுவார்கள்.

(ஓ-173)

## கனிஷ்ட தர அலுவலர்கள் 20 பேருக்கு தரமுயர்வு

### கைதடி சாந்தி நிலையத்தில் கடமையாற்றுவோர்

தென்மராட்சி, மே 14

கைதடி சாந்தி நிலையத்தில் கடமையாற்றும் 20 கனிஷ்ட தர உத்தியோகத்தர்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாந்தி நிலையத்தில் கடமையாற்றும் கனிஷ்ட தர உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் கிடைத்த காலம் தொடக்கம் ஒரே தரத்தில் பணி புரிவதை சுட்டிக்காட்டி இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளருடன் கலந்துரையாடி இருந்தார்.

அதை அடுத்து இந்த உத்தியோகத்தர்கள் வகிக்கும் பதவிகளில் அவர்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக முதலமைச்சரின் செயலாளர் த.திருவாகரன் அறிவித்துள்ளார்.

இவ்விதம் தரமுயர்த்தப்பட்டவர்களில் இல்லத்தில் பணி புரியும் ஆண், பெண் பரிசாரகர்கள், சமையலாளர்கள், சாதாரண தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

(வ-9)



அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்துக்கு சரஸ்வதி சிலை அமைக்கப் படவுள்ளது. சிலை அமைப்பதற்கான நிதியை சுவிஸ் நாட்டில் வதியும் வேல்நாதன் குடும்பத்தினர் வழங்கி யுள்ளனர். சரஸ்வதி சிலை அமைப் பதற்கான அடிக்கல் நடப்படுவதைக் காணலாம். (வ-9)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 100 ஆவது ஆண்டு
ஆளுநர் லயன் வைத்திய கலாநிதி
வ.தியாகராசா MJF,JP
அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்



கடந்த 10 ஆம் திகதி கொழும்பு, பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்தில் மாவட்ட 306 B1 இரண்டாவது உபஆளுநர் தெரிவில் இவருடன் போட்டியிட்ட வேட்பாளரைவிட 56 அறுதிப்பெரும்பான்மையான வாக்குகளால், 82 கழகங்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஏழைகளின் தோழன், சேவையின் திலகம், பாசத்தின் உறைவிடம், சைவத்திலகம், வள்ளல் திலகம் லயன் Dr.V. தியாகராசா அவர்தம் குடும்பம் பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறு ஆயிரம் ஆண்டுகள் சகல வளங்களும் பெற்று, மக்களுக்கு தனது சேவையை தொடர்ந்து ஆற்றுமாறு அவரை வாழ்த்துவதில் அவரின் நண்பன் என்ற முறையில் பெருமிதம் அடைகின்றேன்.

(48032)

லயன் Dr.K.M. பத்மநாதன் குடும்பத்தினர்
Wesco (யாழ்மருந்தகம்) யாழ்ப்பாணம், லயன்ஸ் கழகம், கொக்குவில்.

## மின் தடை அறிவிப்பு

வடமராட்சி, மே 14

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை மற்றும் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்பன் ஆகிய இடங்களிலும் - 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டை தீவு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## காசநோயாளியை அடித்து கொலை செய்த எயிட்ஸ் நோயாளி

மும்பை பொது மருத்துவமனையில் காசநோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நோயாளியொருவரை, அவரது அருகிலுள்ள படுக்கையில் சிகிச்சை பெற்று வந்த எயிட்ஸ் நோயாளி இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்துள்ளார்.

இதன்போது நோயாளிகள் சிலர் படுகாயம் அடைந்துள்ளதுடன் நோயாளிகளுடன் இருந்த உறவினர்களும் காயம் அடைந்துள்ளனர்.

மும்பை மருத்துவமனையில் எயிட்ஸ் நோய்க்காக சிகிச்சை பெற்று வந்த 42 வயது குறித்த நபர், குளுக்கோஸ் ஏற்ற பயன்படுத்தப்படும் இரும்புத் தாங்கியை எடுத்து அருகில் இருந்த நோயாளிகளைத் திடீரெனத் தாக்கியுள்ளார்.

இதில் காசநோய் குணமடைந்ததனால் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்ப இருந்தவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கான காரணம் தெரியவரவில்லை. (வ)

## புரட்சிகள் புதைவதில்லை

'மாவீரர் நாள் முடியும் வரை பல்கலைக்கழகத்தைப் பூட்டு' என்று அதிகாரம் உத்தரவிட்டதுமே, விழுந்தடித்துக் கொண்டு, சேவகம் புரிந்தது பல்கலை நிர்வாகம். எள் என்று சொன்னவுடனேயே எண்ணெயாகி இழுத்து மூடியது, பல்கலைக்கழக வாசலை. அப்படி அதிகாரம் காலால் சொன்னதை தலையால் பல்கலை நிர்வாகம் செய்து முடித்தமைக்காக இரண்டாவது தடவையாகவும் எலும்புத்துண்டு வீசப்பட்டு, ஆட்சிக்கதிரையில் ஏறி அதை உண்ணவும் அதிகாரம் வசதிசெய்து கொடுத்தது. எலும்பின் சுவையைக் கைவிட அவர்களுக்கு மனமில்லை.

இன்னும் ஏதாவது எலும்புகள் கிடைக்கலாம் என்ற நப்பாசையில் அதிகாரம் ஆணையிட முன்னரேயே தாமே சில காரியங்களைச் செய்து 'ஐஸ்' வைக்க எலும்புதின்னிகள் தங்கள் விசுவாசத்தைக் காட்ட முற்படுகின்றனர். அதன் ஒரு வெளிப்பாடாகவே எந்தவிதக் காரணங்களுமின்றி யாழ்.பல்கலைக் கழகத்தை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலப் பகுதியில் மே 16 முதல் 22 வரை இழுத்து மூடப்பட்டது. விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களும் குறித்த ஒருவார காலப்பகுதியில் அங்கே தங்கியிருக்கக்கூடாது.........




இந்த வார இதழில்

எப்படி மறப்போம் முள்ளிவாய்க்கால் ஊழியை?

## கைதடி முதியோர் இல்லத்துக்கு தியான மண்டபம்

யாழ்ப்பாணம், மே 14

கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியோர்களின் வசதி கருதி தியான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. முதியோருக்கான தேசிய செயலகத்தின் உதவியுடன் குறித்த தியான மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. குறித்த மண்டபத்தின் முதற் கட்டநிர்மாணப் பணிகள் நிறைவுற்ற நிலையில் அடுத்த கட்ட நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இல்ல முதியோர்கள் ஆன்மிக வழிபாட்டில் ஈடுபடும் நோக்கில் குறித்த தியான மண்டபம் அமைக்கப்படுகிறது. (வ-17)

KINGS ELECTRONICS
11A, Stanley Road, Jaffna.
T.P: 021 222 3857
LED Bulbs
SALES SALES
ஒரே தடவையில் ஒரே விதமான LED மின்குமிழ் 10 இனை கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு மின்குமிழ் இலவசமாக வழங்கப்படும்:



| for PLASTiC | METRAL |
|---|---|
| 5 W 230 /= | 5 W 300 /= |
| 7 W 280 /= | 7 W 400 /= |
| 9 W 360 /= | 9 W 600 /= |

4′ LED Tube Light
16W 1300 /=
(48149)(10.6)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை ஜோசப் அருளானந்தம்

(சின்னமணி)

(முன்னாள் கொள்வனவு முகாமையாளர் அன்ரிஸ் நிறுவனம், நாவற்குழி)

இல. 18, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், காந்தி ஆச்சிரமம் உடுவில், கவுடானா வீதி, தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஜோசப் அருளானந்தம் 11.05.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஜெயானந்ததேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னத்துரை, இராசம்மா சின்னத்துரை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வில்லியம் செல்லத்துரை, மேரி ஸ்டேலா ஆகியோரின் மருமகனும், பிரெடி, டயானா, சாரா ஆகியோரின் அன்புத் தந்தையும், வித்யஸ்ரீயின் அன்பு மாமனும், அருமைநாயகம், டாக்டர். தருமநாயகம் (செபரட்ணம்), காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், பிரான்சிஸ், ஜீவமணி மற்றும் திருமதி ரூபாவதி கனகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி செல்வானந்தம் (Edwards), திருமதி ராகினி சந்திரராஜா, தேவதயாளன் (Earnest), தேவரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை (17.05.2014) சனிக்கிழமை காந்தி ஆச்சிரமம் உடுவில் சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று, நல்லடக்கத்துக்காக முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள புனித யோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/14322) (10.6)


# குற்றவாளியை கைது செய்யக்கோரி இலங்கை அகதிகள் போராட்டம்

ஈரோடு, மே 14

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் பகுதியில் மூதாட்டியொருவரைக் கொலை செய்தவர்களை கைது செய்யக் கோரி இலங்கை அகதிகள் திடீரென வீதி மறியலில் ஈடுபட்டனர். இலங்கை அகதி முகாமில் இருந்த 62 வயதான பெலி சிட்டா குரூஸ் என்ற மூதாட்டி ஞாயிற்றுக்கிழமை அதே பகுதி யில் முட்புதரில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். பொலிஸார் அவரது சடலத்தை கோவை மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மூதாட்டியைக் கொன்றவர்களை கைது செய்யக் கோரி இலங்கை அகதிகள் வீதி மறியலில் ஈடுபட்டனர். அப்போது மறியலில் ஈடுபட்டவர்களை பொலிஸார் அப்புறப்படுத்த முயன்றதால் ஆத்திர மடைந்த சிலர், பொலிஸாரின் வாகனத்தின் மீது கற்களை வீசினர். இதனிடையே உடற் கூற்றுப் பரிசோதனை முடிந்து சடலம் எடுத்து வரப்பட்ட நிலையில், அதை வீதியில் வைத்து போராட்டத்தை தொடர்ந்தனர். உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர், மூதாட்டியின் கொலை வழக்குத் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் உறுதியளித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் சுமார் 4 மணி நேரத்துக்கும் மேலாக போக்கு வரத்து பாதிக்கப்பட்டது. (வ)

## அந்தியேட்டி ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பு



பாலபண்டிதர், பௌராணிகர், சிவனருள், கலாபூஷணம், திருமுறை பாராயணச் செம்மல், சிவ நெறிச் செல்வர்

அமரர்

### சிவரத்தினம் சண்முகவடிவேல்

22.04.2014 பரமன்பதம் அடைந்த சிவசண்முகவடிவேல் அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் இன்று (14.05.2014) புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 15.05.2014 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் ஏழாலை முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெறும் பஜனை நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்கு பற்றி, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட ரீதியில் அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்களும் தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தேவி அகம்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(சி-14272)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி பெர்ணடேத் பிரான்ஸிஸ்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கண்டியில் நீண்ட காலம் ஆசிரியராக கடமையாற்றியவரும் ஏஜக்ஸ் கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி பெர்ணடேத் பிரான்ஸிஸ் (பேர்ணி ரீச்சர் தங்கமுத்து) நேற்றுமுன்தினம் (12.05.2014) திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்திரேஸ்பிள்ளை - எலிசபேத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிம்சன் பிரான்ஸிஸ் - றோஸ்மேரி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற லெஸ்லி பிரான்ஸின் பாசமிகு மனைவியும், ஜெராட் (ஜெரி- கனடா), காலஞ்சென்ற மோகன் ஆகியோரின் அருமைத் தாயும் நொறீனின் அன்பு மாமியும்,

காலஞ்சென்ற ஜேர்மைன் மற்றும் கிளாறம்மா ராசாத்தி (சில்லாலை), காலஞ்சென்ற இம்மானுவேல் மற்றும் அருட்தந்தை அ.கிறிஸ்தோபர் (யாழ். மறை மாவட்டம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான டோமினிக், றெஜினா, பேபியன் பிரான்ஸிஸ், புளோரன்ஸ் மற்றும் எலிசபேத் (கனடா) கிரேஸியன் (கொழும்பு) ஜூலியட் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும், ஜெரமி,ஜோசுவா, ஜோர்டன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை கனடா நேரப்படி முற்பகல் 10.30 மணிக்கு கனடா, ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
அருட் தந்தை அ.கிறிஸ்தோப்பர்
தொலைபேசிஇலக்கம் 0091056193412

(c\14273)

## மரண அறிவித்தல்



### சவரிமுத்து இராஜசிங்கம்

குளமங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, சவரிமுத்து இராஜசிங்கம் நேற்று ( 12.05. 2014) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து - லூர்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், சந்திராவின் அன்புக் கணவரும், றெஜினோல்ட், பிரசாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரட்ணசிங்கம், மேரிசெலின், லில்லிமலர், இராசமலர், இரஞ்சிதமலர், கரிஸ்டா மலர், ஞானதாசசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித சவேரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(c\14257)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கராணி அமிர்தநாதன்



பழைய பொலிஸ் நிலையவீதி, ஆணைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராணி அமிர்தநாதன் நேற்று (13.05.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமிர்தநாதனின் அன்பு மனைவியும், முருகர் -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், மார்க்கண்டு முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமிர்ஜா, தனுஜா, தனுஜன் (Singer நெல்லியடி), சரண்ஜா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2014) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(48054) (10)

தகவல் :
குடும்பத்தினர்.
T.P: 077 1946 360

## வீடு வாடகைக்கு

வவுனியா வைரவப் புளியங்குளம் 10 ம் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு
0773665922

## காணிகள் விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கில் பிரதான வீதியில் நல்ல சூழலில் சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய 2,3,4 பரப்புடைய காணிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு
0777037058

## தேவை (LAMBIRITTA)

இத்தாலி வகை லம்பிரிட்டா மோட்டார் சைக்கிள் தேவை

(48059) (10)

தொடர்பு: 077 172 7241, 077 466 0277

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

புத்தூர் சிவன் கோயிலடியில் 04 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு

(48061) (10)

தொடர்பு: 077 044 9266

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

German Shepherd நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

(45541) (10)

தொடர்பு: 077 8185 543

## உடன் தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய கொப்பி, புத்தகங்கள், பத்திரிகைகள், காட்போட் மற்றும் பழைய பிளாஸ்ரிக் வகைகள் உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக் கொள்கின்றோம்.

(48051) (10)

தொடர்புகளுக்கு: 077 078 9476

## நிரந்தர வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளிலுள்ள Tea, கோழி, டின், Paint போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல், பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வரையான ஆண்,பெண் இருபாலாருக்கும் 18,000-26,000/= வரையிலான ஊதியம்.

(43303) (10)

தொடர்புகளுக்கு: 076 699 1993

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லத்துரை சண்முகராசா



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28-03-1941 | 25 -04-2013 |

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குமர கோட்டம்,
கோண்டாவில்.

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(சி-14270)

## ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதியபோசன அழைப்பும்

### அமரர் திருமதி ஜெயலட்சுமி (ஜெயா) தவலிங்கம்

(ஆசிரியை யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03.04.1967 | 13.04.2014 |

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (14.05.2014) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பன்னாலை வறுத்தலைப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி ஜெயலட்சுமி அவர்களின் மரணச் செய்தி அறிந்தவுடன் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், யா/யூனியன் கல்லூரி, யா/மகா ஜனக் கல்லூரி, யாழ் போதனா வைத்தியசாலை, வலி வடக்கு பிரதேச சபை சமூகத்தினர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சடச்சப்பை வித்தகபுரம்,
கொல்லங்கலட்டி.

தவலிங்கம் குடும்பத்தினர்.
செல்வி மு.ஜெயகௌரி
முன்னாள் விரிவுரையாளர் (B.A.Hons) fine Arts
யா/யூனியன் கல்லூரி } இசையாசிரியர்
யா/மகாஜனக்கல்லூரி }

(48056)(10)

# மன்னிப்புக் கோரிய பின்னரே பாப்பரசர் இலங்கை வரலாம்

## பொதுபல சேனா தெரிவிப்பு

கொழும்பு, மே 14
இலங்கையில் மத நல்லிணக்கம் இல்லையென பாப்பரசர் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோர வேண்டும். அதன் பின்னரே பாப்பரசர் புனித பிரான்ஸிஸ் இலங்கைக்கு வரவேண்டும் என்று கூறியுள்ளது பௌத்த தீவிரவாத அமைப்பான பொதுபல சேனா.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்,
"இலங்கையில் மத நல்லிணக்கம் இல்லையென பாப்பரசர் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்புக் கோர வேண்டும். அதன் பின்னர்தான் இங்கு வரவேண்டும். எமது நாட்டில் மதங்களுக்கிடையே மோதல்கள் கிடையாது.
பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என அனைத்து மதத்தினரும் இங்கு நல்லிணக்கத்துடனேயே வாழ்கின்றனர். மதங்களிடையே மோதல்கள் கிடையாது. ஒரு சில அடிப்படைவாத மதச் சக்திகளின் நடவடிக்கைகள் காரணமாகவே சிறு சிறு பிரச்சினைகள் தலைதூக்குகின்றனவே தவிர, முழு நாட்டிலும் மத நல்லிணக்கம் காணப்படுகிறது.
எனவே, இங்கு மத நல்லிணக்கம் இல்லையென்று கூறிய கருத்துக்களுக்கு பாப்பரசர் மன்னிப்புக் கேட்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இன அழிப்பு

காக இலங்கையில் ஆட்சியாளர்களை தமது கைகளுக்குள் போட்டுக் கொள்வதற்கு வசதியாக இலங்கையில் ஓர் அதிகார மையம் மட்டும் இருப்பதனையே விரும்பினர். அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட இன அழிப்புப் போரை அமைதியாகவிருந்து அனுமதித்தனர்.
பயங்கரவாதத்தை அழித்தல் என்ற போர்வையில் 21ஆம் நூற்றாண்டில் மனித குலத்துக்கு எதிரான சகல குற்றங்களையும் புரிந்தவாறு இந்த உலகின் கண்களின் முன்னால் இலங்கை அரசு மாபெரும் இனப் படுகொலையை வாகரையிலும், வன்னிமண்ணிலும் நிகழ்த்திக் கொண்டிருந்தது.
[illegible]க்கப் போகும் பேரனர்த்தத்தை புரிந்துகொண்டு உலகம் முழுவதும் வாழ்ந்த புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், தமிழக உறவுகளும், மொறீசியஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்களும் தமது நாடுகளிலும் பல மாதங்களாக வன்னியில் அரங்கேறிக் கொண்டிருந்த இன அழிப்பை தடுத்து நிறுத்துமாறு கோரித் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். போர் நிறுத்தம் கோரி பலர் தமக்குத் தாமே தீமூட்டித் தம்முயிரைத் தியாகம் செய்திருந்தனர். எனினும் தமது பூகோள அரசியல் நலன்களுக்காக வலிமைமிக்க நாடுகள் மௌனமாக இருந்தன.
போர் சூனியப் பிரதேசங்களை [illegible]சே அறிவித்து அதற்குள் மக்களை வரவழைத்தது. நம்பி வந்த மக்கள் மீது எறிகணைகளை வீசி மக்களைக் கொன்று குவித்தது. கர்ப்பிணித் தாய்மார்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோயாளர்கள் என எந்த வேறுபாடுகளுமின்றி அப்பாவி மக்கள் கொன்றழிக்கப்பட்டனர். அனைத்தும் நடந்து முடிந்த பின்னர் வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரில் 40 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. அறிக்கையிட்டுள்ளது. ஆனாலும் 1 லட்சத்து 46 ஆயிரம் பேருக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை தெரியாதுள்ளது.
தமிழ் மக்கள் மீது புரியப்பட்டது வெறுமனே மனித உரிமை மீறலோ, மனிதத்துவத்துக்கு எதிரான குற்றமோ, போர்க்குற்றமோ மட்டுமல்ல அது திட்டமிட்ட இனப்படுகொலையாகும். அதற்கு நீதி கிடைக்க வேண்டும். கூட்டுப் படுகொலை மூலம் எமது உறவுகளைக் கொன்றொழித்தது மட்டுமல்லாமல் தம்மால் கொன்றொழிக்கப்பட்டவர்களை நினைவு கூரவும் கூடாதென இலங்கை அரசும் அதன் இராணுவ இயந்திரமும் தடைவிதிக்கின்றன. நினைவு கூரலைத் தடுப்பதன் மூலம் தமிழ் மக்கள் மீது தாம் புரிந்த இன வழிப்பை மூடிமறைத்துவிட முடியுமென அரசு எண்ணுகிறது.
எம் உறவுகளை அழித்து எமது இனத்தை அடிமைப்படுத்திய நாளை இலங்கையின் தேசிய வெற்றி விழாவாகவும் கொண்டாடுகின்றது.
இன அழிப்பு ஒன்றின் மூலம் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறை படிந்த நாளாகும். அந்த நாள் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட நாளாகும். அந்த நாளை இனவழிப்பு நாளாகவே நாம் பிரகடனம் செய்கின்றோம்.
கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை எமக்குள்ளது. இறந்தவர்களது ஆத்ம சாந்திக்காக முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த எம் உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியான வழியில் அனைவரையும் கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம்"- என்று கூறப்பட்டுள்ளது. (ற-104)

### முள்ளிவாய்க்கால்

மேற்கொள்ளப்படுகின்றன என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தகைய செயற்பாடுகளால் அங்கு இயல்புநிலை குழப்பமடைந்து, மக்கள் பெரும் பீதியுடன் உள்ளனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.
எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வை மக்கள் நடத்தி விடக்கூடும் என்ற முன்னெச்சரிக்கையாகவே படைப்பிரிவினர் இவ்வாறு செயற்படுகின்றனர் என்றும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர்.
அதேவேளை, தமிழ்க் கூட்டமைப்பின் இந்தக் குற்றச்சாட்டை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மறுத்துள்ளார்.
இறுதிப் போரில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை நினைவுகூர்ந்து அஞ்சலிப்பதற்கு வடபகுதியில் பாதுகாப்புத் தரப்பினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ற-சி)

### உறவுகளை

துயரை நினைவு கூர்வதற்கு கூட அனுமதி தராத - காட்டாட்சித் தேசத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.
உயிரிழந்தவர்களின் நினைவாக திவசம் அனுஷ்டிப்பது என்பது எமது ஆன்மிக வழிபாடு. அந்த ஆன்மிக ரீதியிலான வழிபாட்டுக்கு உரிய உரிமை கூட மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் பௌத்தர்களே இல்லாத எமது தாயக தேசத்தில் வெசாக் அலங்காரங்களைச் செய்து வைத்திருக்கின்றனர் படையினர். அதைப்போலத்தான், உயிரிழந்த எமது மக்களுக்காக எம்மை அஞ்சலிக்க விடாது தடுக்கும் படையினர், உயிரிழந்த படையினர் நினைவாக மட்டும் போர் வெற்றி விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.
இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுகின்றது என்று சர்வதேசத்துக்கு இந்த அரசு சொல்கின்றது. ஆனால் நடைமுறையில் நல்லிணக்கத்தைச் சிதைக்கும் வகையிலேயே செயற்படுகின்றது. தமிழர்களின் உரிமைகளை மிதிக்கும் அதே வேளை, தமிழர்களின் மனதை நோகடித்து வெற்றி விழாக் கொண்டாடுகின்றார்கள். இவ்வாறானதொரு நிலைமை தொடருமானால் நாட்டில் நல்லிணக்கம் என்பது எட்டாக் கனியாகவே இருக்கும். எந்தவிதமான தடைகள் விதிக்கப்பட்டாலும், நாம் எமது உறவுகளை நினைவு கூருவோம்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-5)

### நினைவேந்தலு

கைய முரண்பட்ட போக்கு இந்த நாடு அரசியல் ரீதியாக எதிர்கொண்டுள்ள அவலத்தையே எடுத்துக்காட்டுகிறது.
மக்கள் அனைவரையும் அரசியல் ரீதியாக ஒன்றிணைப்பதற்குப் பதிலாக இலங்கையின் சமூகங்களுக்கு இடையில் தொடர்ந்து நிலவும் பிரிவு குறித்து தேசிய சமாதானப் பேரவை கவலை கொள்கிறது. வடக்கில் உள்ள மக்கள் தமது பிரச்சினைகளையும் சோகங்களையும் தீர்த்துக் கொள்வதற்கான கட்டமைப்பைத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தத்தை எமது நாடு வழங்கியிருப்பது கவலையளிக்கிறது. இது பிரிவினைச் சிந்தனை தொடர்வதற்குப் பங்களிப்புச் செய்யும்.
ஒரே விடயத்தில் வெற்றிபெற்ற தரப்பும் தோல்வியடைந்த தரப்பும் ஒன்றாக இல்லையென்றால் அமைதி ஏற்படாது. தாக்குதல்கள், குண்டு வெடிப்புக்கள், படுகொலைகள் மூலம் இலங்கை முழுவதும் கடந்த 30 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இத்தகைய இரத்தக்களரியான ஒரு போர் மீண்டும் ஏற்படக் கூடாது என்று விரும்பிய அனைவருமே நினைவுகூரப்பட வேண்டும். இது தொடர்பான பரிந்துரை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
எந்தவொரு நாடும் தனது உள்நாட்டுப் போரில் ஈட்டிய வெற்றியைக் கொண்டாடியதில்லை. அமெரிக்காவின் தென்பகுதிக்கும் வடபகுதிக்கும் இடையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் 6 லட்சம் மக்கள் உயிரிழந்தார்கள். வடக்கு வெற்றி பெற்ற பின்னர் வெற்றிக் கொண்டாட்டங்கள் எவையும் நடத்தப்பட்டதில்லை. அந்த வெற்றி அனைவருக்குமானது என்பதைக் காட்ட அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன் அனைத்தையும் கடந்து சிந்தித்தார் செயற்பட்டார்.
துரதிர்ஷ்டவசமாக இலங்கையின் அரசியல்வாதிகள் அப்படி நடந்துகொள்ளவில்லை. போர் வெற்றியைக் கொண்டாடுகின்றனர்.
போரில் உயிரிழந்த அனைவருக்காகவும் மே 18ஆம் நாள் மதப் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு இலங்கை முழுவதும் உள்ள மக்களுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம். எல்லாச் சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தை இலங்கையின் எல்லா மக்களும் அரசியல்வாதிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். (உ)

### இலங்கைத்

இந்திய மத்திய அரசு பணிப்புரை விடுத்துள்ளது"- என்று தெரிவித்துள்ளன.
அண்மையில் படகு மூலம் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த 10 இலங்கைத் தமிழ் அகதிகள், வெளிநாட்டவர்கள் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையிலேயே, இந்திய மத்திய அரசின் இந்த உத்தரவு வெளிச்சத்துக்கு வந்துள்ளது.
(ற)

### ஜெயகுமாரி

ராக அறிவிக்கப்பட்ட கஜீபன், கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஜெயக்குமாரி வீட்டுக்குச் சென்ற பொலிஸ் அதிகாரி மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றார் என்று தெரிவித்தே பயங்கரவாத தடுப்புப் பிரிவினர், ஜெயக்குமாரியையும் அவரது 13 வயதான மகள் விபூசிகாவையும் கைது செய்திருந்தனர். ஜெயக்குமாரி தற்போது பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், விபூசிகா கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் காணாமற்போனோர் தொடர்பிலான போராட்டங்களில் தொடர்ச்சியாகப் பங்கெடுத்திருந்ததுடன் சர்வதேச ஊடகங்களின் கவனங்களையும் ஈர்த்திருந்தனர்.
இந்த நிலையில் இவர்கள் இருவர் சார்பிலும் கொழும்பிலுள்ள சட்டத்தரணிகள் உச்ச நீதிமன்றத்தில் தனித்தனியாக, நேற்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். சிறுமியை தாயிடமிருந்து பிரித்து வைத்துள்ளமை மற்றும் பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி ஜெயக்குமாரியை தடுத்து வைத்துள்ளமை ஆகியவற்றை முன்வைத்தே அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
(ற-5)

### விசாரணை

மேற்படி சந்திப்பு பிரான்ஸில் நடைபெற்றுள்ளது. அதிகாரிகள் மட்டத்திலான பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர் என்றும் கூறப்படுகின்றது. ஆயினும் இந்தச் சந்திப்பு தொடர்பிலான உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தால் சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஐ.நா. விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என்றும், சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் இடமில்லை என்றும் இலங்கை அரசு திட்டவட்டமாக கூறிவருகின்றது. இந்நிலையிலேயே, அடுத்தக்கட்ட நகர்வுகள் பற்றி ஐரோப்பிய பிரதிநிதிகள் கலந்துரையாடியுள்ளனர் என்றும், இதன்போது, தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.
இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜீஎஸ்பி. வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தியதால் இலங்கையின் ஆடைக் கைத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் ஒத்து ழைத்து செயற்படுவதற்கு இலங்கை தொடர்ந்தும் முரண்டுபிடிக்குமானால், ஐரோப்பிய ஒன்றியம் மேலும் சில தடைகளை விதிக்கலாம் என அரசியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ற-சி)

### இலங்கையின்

சுதந்திரத்தைத் தடுக்கும் அல்லது தடுமாற வைக்கும் எத்தனமாக - அதுவும் இலங்கையின் மனித உரிமைகள் பேணும் போக்கு சர்வதேச பரிசீலனைக்கு உட்பட்டிருக்கும் சமயத்தில் - பயன்படுத்தப்படக்கூடாது என்பதை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் இலங்கை அரசுக்குத் தெளிவுபட எடுத்துரைத்திருக்கின்றார் என்றும் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-
இத்தகைய போக்குகள் மீள்நல்லிணக்க முயற்சிகளை வெற்றிகரமாக்குவதற்கு உகந்தவையல்ல என்று நாம் கருதுவதுடன், இந்த விடயத்தை தொடர்ந்து ஊன்றிக் கவனிக்கவும் உள்ளோம். இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுகின்ற போக்குக் குறித்து - குறிப்பாக மனித உரிமைகளுக்காகப் போராடுவோரும் செயற்பாட்டாளர்களும் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு, தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலைமை குறித்து - பிரிட்டன் தொடர்ந்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.
கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது மற்றும் மனித உரிமைகளுக்காகப் போராடுவோரைப் பாதுகாப்பது ஆகிய விடயங்களின் முக்கியத்துவத்தை இலங்கை அரசுக்கு விடாது தெளிவுபடுத்தி வரும்பிரிட்டன், இலங்கை அதன் சர்வதேச ரீதியிலான மனித உரிமைக் கடப்பாட்டைப் பேணி, சிவில் சமூகத்தினர், மனித உரிமைகளுக்காகப் போராடுவோர் மற்றும் செயற்பாட்டாளர்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதை தொடர்ந்தும் அந்த அரசிடம் வலியுறுத்தி வருகின்றது.
மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான ருக்கி பெர்னாண்டோ மற்றும் வணபிதா. பிரவீண் ஆகியோர் கைது செய்யப்பட்டமையை அடுத்து - (அவர்கள் இப்போது விடுவிக்கப்பட்டுவிட்டார்கள்) - மனித உரிமைகளுக்காகப் போராடுவோர் அச்சுறுத்தப்படக்கூடாது. அவர்களுக்குக் கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் உண்டு என்பதை இலங்கை அரசுக்கு நான் தெளிவாக எடுத்துரைத்தேன்.
திருமதி ஜெயக்குமாரி பாலேந்திரா மற்றும் ஏனையோர் கைது செய்யப்பட்டமையும் எங்களுக்குத் தெரியும். குறிப்பாக சந்தேக நபர்களுக்கு எதிராக சாட்சியங்கள் மற்றும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் உள்ள தெளிவின்மை குறித்து கொழும்பில் உள்ள எமது தூதரகத்தின் அதிகாரிகள் இலங்கை அரசிடம் கவலை எழுப்பியுள்ளனர்.
குற்றம் ஏதும் சுமத்தப்படாமலேயே தனியாள்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படக்கூடிய கால அளவு குறித்து இலங்கை அரசிடம் பிரிட்டன் ஏற்கனவே கவலை வெளியிட்டிருக்கின்றது. மனித உரிமைகள் பேணும் விடயத்தில் முன்னேற்றத்தைக் காட்டும்படியும், தடுப்புக் காவலில் ஆள்களைத் தடுத்து வைக்கின்றமை தொடர்பான கொள்கைகளை மறுபரிசீலனைசெய்ய வேண்டும் என்பது உட்பட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும்படியும் கோரி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மார்ச் 27 ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை நாம் சுட்டிக் காட்டுகின்றோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### கமலுக்கு

உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி செல்வநாயகம் லெனின் குமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.
குறித்த வழக்கு விசாரணைக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.
நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளரான தானியல் றெக்ஷயன் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை பொலிஸாரும் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரும் இந்தக் கொலை தொடர்பில் அப்போது வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான கமலேந்திரனை கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் வைத்து கைதுசெய்திருந்தனர். அத்துடன் றெக்ஷயனின் மனைவி மற்றும் முச்சக்கரவண்டியின் சாரதி ஆகியோரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற-4-104)

# மாகாண மட்ட உதைபந்தாட்டத்தில் இரு பிரிவிலும் யாழ்ப்பாணம் சம்பியன்



வெற்றி பெற்ற யாழ். மாவட்ட அணியினர்

யாழ்ப்பாணம். மே 14

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களுக்கு இடையே நடத்திய ஆண். பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இரு பிரிவிலும் யாழ். மாவட்ட அணி வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் தாழ்வுபாடு ஆயர் ஜோசப் ஆண்டகை விளையாட்டு அரங்கில் காலை இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்குக் கடுமையாகப் போராடிய போதும் முதற்பாதி ஆட்டத்தில் இரு அணியினராலும் கோல்களைப் பெற முடியவில்லை.

இதனால் முதற்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் எப்படியாவது தமது அணிக்கான கோல்களைப் பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்துடன் களம் இறங்கியதால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

ஆட்ட நேரத்தின் கடைசி நிமிடத்திலாவது தமது அணிக்கான கோலைப் பெற்றிட வேண்டும் என்று இரண்டு அணிகளும் எதிரணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தன.

ஆட்டத்தின் முடிவில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமல் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் இரண்டு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்றன. இதனால் சமநிலை தவிர்ப்பு உதையும் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டு அணியினருக்கும் மேலதிகமாக ஒரு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அணி வீராங்கனைகள் தமக்கு வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையைக் கோலாக்கினர்.

வவுனியா மாவட்ட அணி வீராங்கனைகள் தமக்கு வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையைத் கோலாக்கத் தவறினர்.

இதனால் ஆட்ட நேர முடிவில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

பிற்பகல் 2 மணிக்கு இடம் பெற்ற ஆண்களுக்கான உதை பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது.

பெருந்திரளான உதைபந்தாட்ட ரசிகர்கள் மைதானத்தில் நிறைந்திருக்க இறுதியாட்டம் ஆரம்பமானது. இதனால் முதற்பாதி ஆட்டம் ஆரம்பத்திலேயே சூடு பிடிக்கத் தொடங்கியது.

இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் பெற எதிரணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இதன் பயனாக ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் யாழ். மாவட்ட அணியின் முன்கள வீரன் பிறேம்குமார் (பீமா) தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் அடித்து தனது அணிக்கான முதல் கோலைப் போட்டு எதிர் அணியினருக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்.

மன்னார் மாவட்ட அணி தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்து கோல் பெறும் முயற்சியில் ஈடுபட்டது.

யாழ்.மாவட்ட அணியின் பின்கள வீரர்களினால் அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

தனது ஆட்டத்தின் வியூகத்தை மாற்றிய மன்னார் மாவட்ட அணி ஆட்டத்தின் 37 ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி முதல் கோலைப் போட்டனர்.

முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது 1:1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணியினரும் உத்வேகம் அடைந்தனர்.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் யாழ்.மாவட்ட அணி 6:5 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணியை வெற்றி கொண்டு சம்பியன் ஆனது. (த-23-422)

# வளர்மதிகளின் பெரும்போர்



மட்டுவில் வளர்மதி



கைதடி வளர்மதி

கைதடி. மே 14

கைதடி குமரநகர் சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்திவரும் 11 பேர் கொண்டதும் 16 சுற்றுக்களையுடையதுமான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குமரநகர் மைதானத்தில் நடைபெற இருக்கின்றது.

இன்றைய இறுதிப் போட்டியில் தென்மராட்சியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த கழகங்களான கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்.சயந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்தப் போட்டி துடுப்பாட்ட ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு தீனி போடும் போட்டியாக அமையும் எனப் பலராலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (288)



யாழ்.பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.
இதில் பெண்களுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்ட நிகழ்வின் ஒரு காட்சி. (த-23)

# இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம்.மே 14

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

அதில் 'பி' அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரவு 6.30 மணிக்கு மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்காந்த விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், மே 14

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகம், அராலி ஏ.எல்.இளைஞர் கழகம் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.எல்.விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

அதில் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பிறைட் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மாதகல் சென்.தோமஸ் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து அராலி ஜேர்மன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)



# ஆண்கள் உதைபந்தாட்டத்தில் வசீகரிக்கும் பெண் நடுவர்

சமீப காலமாகவே ஆண்கள் உதைபந்து விளையாட்டில் பயிற்சியாளராக வரும் பெண்கள் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்குகிறது.
சமீபத்தில் தான் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த ஹெலீனா கோஸ்டா என்ற பெண் பிரான்ஸ் நாட்டின் கிளர்மான்ட் பூட் உதைபந்து அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டு அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தார்.
இந்நிலையில் பெர்னான்டா கொலம்போ உலியானா என்ற பிரேஸிலைச் சேர்ந்த 25 வயதான இளம் பெண் உதவி நடுவராக இருந்து வருகிறார்.
பல போட்டிகளில் இவர் சிறிது காலம் உதவி நடுவராக இருந்து வந்ததாலும், பிரபலமான கோபாடோ பிரேசில் போட்டித் தொடரில் பங்கேற்றதன் மூலமாகவும் இணையத்தளங்களில் இவரின் புகழ் ரசிகர்களின் மத்தியில் பரவ ஆரம்பித்து விட்டது.
பிரேஸிலில் உலகக்கிண்ண உதைபந்துப் போட்டிகள் அடுத்த மாதம் தொடங்கவுள்ளது இந்நிலையில், இப்போது இணையத்தளத்தில் உலியானா குறித்த பேச்சுக்களும், பாராட்டுகளும், வாழ்த்துகளும் குவிய ஆரம்பித்துள்ளன.
உலியானாவின் திறமைகள், அவரது அழகு மற்றும் உதைபந்து மீதான அவரது காதல் என இணையத் தளங்களில் அவரைப் பற்றி உதைபந்து ரசிகர்கள் எழுதி வரும் நிலையில், இதை விட பெரிய அளவுக்குப் போகவேண்டும் என்பதே தனது லட்சியம் என்றும் உலியானா கூறியுள்ளார். (கு)

# டிராவிட் மிரட்டல்

ஐ.பி.எல். சூதாட்டத்தில் யாரும் சிக்காமல் இருக்க, விளையாடும் வீரர்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென முன்னாள் வீரர் ராகுல் டிராவிட் அறிவுரை வழங்கியுள்ளார்.
ஐ.பி.எல் 7ஆவது தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் ஆலோசகராக இந்திய அணியின் முன்னாள் வீரர் ராகுல் டிராவிட் உள்ளார்.
அகமதாபாத்தில் வீரர்களைச் சந்தித்து பேசிய டிராவிட் சூதாட்டப் பிரச்சினை பற்றி கூறுகையில், இந்த ஐ.பி.எல். தொடரில் இதுவரை எந்த சூதாட்டச் சர்ச்சையும் எழவில்லை. ஆனாலும், வீரர்கள் விழிப்புடன் இருக்க


டிராவிட்

வேண்டும்.
சூதாட்டக்காரர்களின் சதியில் வீரர்கள் சிக்கிக் கொள்ளாமல் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். ஏனென்றால், கிரிக்கெட் விளையாட்டை சீர்கெட வைக்கச் சிலர் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.
ராஜஸ்தான் அணியில் உள்ள மும்பையைச் சேர்ந்த தம்பே 20 ஆண்டுகளாக போராடிய பிறகு இவரது திறமை வெளிப்பட்டுள்ளது. இதுபோல, பல திறமைசாலிகள் இந்தியாவில் கவனிக்கப்படாமலேயே இருக்கிறார்கள் என்று கூறியுள்ளார். (கு)

# ஐ.பி.எல் நடுவர் அதிரடி நீக்கம்


ஐ.பி.எல். போட்டிகளின் நடுவரான இந்தியாவைச் சேர்ந்த சஞ்சய் ஹசாரே அதிரடியாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
ராஜஸ்தான் றோயல்ஸ், டெல்லி டேர் டெவில்ஸ் அணிகளின் ஆட்டத்தின் போது டெல்லி அணித் தலைவர் கெவின் பீற்றர்சனுக்கு ஆட்டமிழப்புக் கேட்டு நடுவரான சஞ்சய் ஹசாரே விடம், ராஜஸ்தான் வீரர்கள் சார்பில் முறையீடு செய்யப்பட்டது.
ஆனால் மூன்றாவது நடுவரின் ஆலோசனையைப் பெறாமலேயே வீரர்களின் அந்த முறையீட்டை நடுவர் சஞ்சய் ஹசாரே நிராகரித்துள்ளார்.
ஆனால் திரையில் பதிவான ரீப்ளேயில் பீற்றர்சன் ஆட்டமிழப்பு என்பது தெளிவாகத் தெரிந்தது. இந்த தவறுக்காக சஞ்சய் ஹசாரே நடுவர் குழுவில் இருந்தும், எஞ்சிய போட்டிகளின் நடுவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார். (கு)

# இந்திய கிரிக்கெட் சபைக்கு எதிராக மும்பை போர்க்கொடி

ஐ.பி.எல். இறுதிப்போட்டி மும்பையில் இருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்டமைக்கு மும்பை கிரிக்கெட் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
ஐ.பி.எல். 7ஆவது தொடரின் முதல் கட்டப்போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சிலும், இரண்டாவது கட்டப்போட்டிகள் இந்தியாவிலும் நடந்து வருகின்றன.
இந்நிலையில் அறிவிக்கப்பட்ட ஐ.பி.எல். அட்டவணையில் தொடர் மாற்றங்கள் நடந்து கொண்டே உள்ளது. சில தினங்களுக்கு முன்பாக சென்னையில் நடக்கவிருந்த சென்னை அணியின் போட்டிகள் மாற்றம் செய்யப்பட்டன.
இதைத் தொடர்ந்து ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் இருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்டது. எதற்காக மாற்றப்பட்டது என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

**"இந்திய கிரிக்கெட் வாரியத்தின் இந்த திடீர் முடிவுக்கு சரத் பவார் தலைமையிலான மும்பை கிரிக்கெட் சங்கம் பகிரங்க எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், திடீரென இந்த முடிவு மேற்கொண்டதன் காரணம் என்ன?**

இந்திய கிரிக்கெட் சபையின் இந்த திடீர் முடிவுக்கு சரத் பவார் தலைமையிலான மும்பை கிரிக்கெட் சங்கம் பகிரங்க எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், திடீரென இந்த முடிவு மேற்கொண்டதன் காரணம் என்ன? என்பது குறித்து விளக்கம் கேட்டும் மும்பை கிரிக்கெட் சங்கம் சார்பில் ஐ.பி.எல். அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
இந்த விவகாரம் குறித்து மும்பை கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகக் குழு இன்று அவசரமாக கூடி ஆலோசனை நடத்தவுள்ளது. (கு)



# ரொனால்டோவான ஜடேஜா

நாங்கள் உதைபந்து விளையாடும்போது ஜடேஜா, அவரை கிறிஸ்ரியானோ ரொனால்டோவாக நினைத்துக் கொள்வார் என விராட் கோஹ்லி கிண்டல் செய்துள்ளார்.
பிரேசிலில் அடுத்த மாதம் உலகக்கிண்ண உதைபந்துத் தொடர் தொடங்கவுள்ளது. இதற்கு இன்னும் ஒரு மாத காலமே உள்ள நிலையில், ரசிகர்களும் உலகக் கிண்ண உதைபந்துத் தொடரை எதிர் நோக்கிக் காத்துள்ளனர்.
இந்தத் தொடர் குறித்து பெங்களூர் அணியின் அணித்தலைவர் விராட் கோஹ்லி கூறுகையில், நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் ஜேர்மனி தான் அபாயகரமான அணி எனவே அந்த அணி தான் கிண்ணத்தை வெல்லும்.
அது மட்டுமல்லாது இந்த அணியின் வீரரான பிலிப் லாம்ப், மற்ற வீரர்களுக்கு கோல் போடும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதில் வல்லவர்.
மற்றப்படி, போர்த்துக்கலின் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சியை அதிகம் பிடிக்கும்.
நாங்கள் பயிற்சியின்போது விளையாடும் உதைபந்து போட்டிகளில், இந்திய வீரர் ரவிந்திர ஜடேஜா சிறப்பாக விளையாடுவார்.
தன்னை கிறிஸ்டியானோ ரொனால்டோவாக நினைத்துக் கொள்வார். இவர் உதைபந்து விளையாடுவதைப் பார்த்தால், மிகவும் வேடிக்கையாக இருக்கும் என்று கூறியுள்ளார். (கு)




# போராடி வென்றது சென்னை சுப்பர் கிங்ஸ்

ராஜஸ்தான் றோயல் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இறுதி வரை போராடி வென்றது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

ஏழாவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று இடம்பெற்ற 37 ஆவது ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல் அணியும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அவ் வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய அஞ்கித் சர்மா வோட்சன் ஜோடி ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். மோகித் சர்மா வீதி நான்காவது பந்துப் பரிமாற்றத்தில் தொடர்ந்து 2 நான்கு ஓட்டங்களை அடித்து அசத்தினார். அங்கித் சர்மா ஆட்டத்தின் 8 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அணி 60 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அங்கித் சர்மா 30 ஓட்டங்களுடன் அஸ்வினின் சுழலில் சிக்கி ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ராகனே 4 ஓட்டங்களிலும் அதிரடியாக ஆடிய வோட்சன் 36 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், மூன்று நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். அடுத்து வந்த வீரர்களில் ஸ்ருவட் பின்னி (22) தவிர ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்து வெளியேற ராஜஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் மோகித் சர்மா 3 இலக்குகளையும் ரவீந்திர ஜடேஜா 2 இலக்குளையும் ரவிச்சந்திரன் அஸ்வின், சமுல் பட்றி தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

வெற்றிக்கு 149 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கைத் துரத்தத் தொடங்கிய சென்னை அணி டுவயன் சிமித்தும், பிரண்டம் மக்குலமும் ஆரம்ப ஜோடியாக களமிறங்கினர். ஆட்டத்தின் 3 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் மக்குலம் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க களமிறங்கிய சுரேஸ் ரெய்னா 2 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.


இச் சூழ்நிலையில் அதிரடியாக ஆடி வந்த சிமித்தும் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து களமிறங்கிய டுபிளெசஸ் ஓட்டங்களைச் சேர்த்தார் எனி னும் இவருடன் ஜோடி சேர்ந்த அஸ்வின் 14 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, பிளெசஸ்ும் 38 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த ரவீந்திர ஜடேஜா, அணித் தலைவர் டோனி ஆகியோர் மேலதிக இலக்குகள் எவையும் இழக்காமல் பலத்த போராட்டத்தின் மத்தியில் 19.4 பந்துகளில் 5 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்றது சென்னை அணி. டோனி 26 ஓட்டங்களுடனும், ஜடேஜா 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பந்து வீச்சில் அங்கித் சர்மா 2 இலக்குகளை பள்கிணர், கெவின் கூப்பர், ராஜற் பற்ரியா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக ரவீந்திர ஜடேஜா தெரிவு செய்யப்பட்டார். (400)

# யுவராஜ் சிங் அதிரடி வென்றது பெங்களூர்



யுவராஜ் சிங்கின் இறுதி நேர அதிரடியான சிக்ஸர் மழை கை கொடுக்க 16 ஓட்டங்களால் டெல்லி டேர்டெவில்ஸ் அணியைத் தோற்கடித்தது பெங்களூர் றோயல் சலஞ்சர் அணி.

ஏழாவது ஐ.பி.எல் கிரிக்கட் சுற்றுப் போட்டி தென் இந்தியாவில் இடம் பெற்று வருகிறது. இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியும், பெங்களூர் றோயல்சலஞ்சர்ஸ்அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்தது.

இதனை அடுத்து பெங்களூர் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கிறிஸ் கெய்ல் - பாத்திவ் பட்டேல் ஆகியோர் களமிங்கினர். ஆரம்பத்தில் நிதானமாகவும் அதே நேரம் நேரடியாகவும் துடுப்பெடுத்தாடிய கெய்ல் இன்று ஓட்ட மழை பொழிவார் என எதிர்பார்க்கப் பட்டது. அந்தோ பரிதாபம் அணி 8.1 பந்துப்பரிமாற்றங்கள் அணி 33 ஓட்டங்கள் பெற்றிருந்த போது 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து களம் புகுந்த விராட் ஹோக்லியும் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து பட்டேலுடன் இணைந்தார் டி வில்லியர்ஸ். இவர் ஆரம்பத்திலிருந்தே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி எதிரணிப் பந்து வீச்சாளர்களை அச்சுறுத்தினார். இச் சூழ்நிலையில் 29 ஓட்டங்களுடன் பட்டேல் பவிலியன் திரும்பினர். இவரது இடத்தை நிரப்பிய யுவராஜ் சிங் களம் புகுந்து சில நிமிடங்களில் அதிரடி காட்ட, டி.வில்லியர்ஸ் 38 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். அபபோது பெங்களூர் அணி 14.2 பந்துப்பரிமாற்றங்களில் 107 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அடுத்து யுவராஜுடன் இணைந்தார். சச்சின் ராணா. ஆரம்பத்தில் ஓட்டங்கள் எடுக்க தடுமாறிய யுவராஜ் பின்னர் தனத பழைய பாணியினை அதிரடிக்கு மாற்றினார். இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களிலும் தலா 2 சிக்ஸர்கள் அடித்து பார்வையாளர்களை பரவசப்படுத்தினார். இவரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் பெங்களூர் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது. 29 பந்துகளைச் சந்தித்த யுவராஜ் சிங் 9 ஆறு ஓட்டங்கள் ஒரு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.

பந்துவீச்சில் மொகமட் சமி, ராகுல் அகிலா, மற்றும் கெனல் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 187 என்ற இமாலய வெற்றி இலக்குடன் களமிறங்கிய முரளி விஜய் டி - கொக் ஆகியோர் முறையே ஒரு ஓட்டம், 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் நிலை பரிதாபமானதாக இருந்தபோதும் அடுத்து இணைந்த மயங் அகர்வலர், கெவின் பீற்றர்சன் ஆகியோர் அணியின் நிலையுணர்ந்து பொறுமையாகவும் அதிரடியாகவும் விளையாட்டு அணியின் வெற்றிக்காகவும் கடுமையாகப் போராடினர்.

அடுத்து அகர்வாலால் 31 ஓட்டங்களுடனும், பீற்றர்சன் 23 பந்துகளில் ஒரு நான்கு ஓட்டம், ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 33 ஓட்டங்களையும் டினேஸ் கார்த்திக் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். இதனை ஒரு புறம் இலக்குகள் வீழ்த்தப்பட்டாலும் அணியை வெற்றி வரை அழைத்துச் செல்வதற்காக டுமினி கடுமையாகப் போராடினார். அவருக்கு கேதர் ஜாதவ் நல்ல ஒத்துழைப்பு வழங்கினார். டுமினியும் 30 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 48 ஓட்டங்களைப் பெற்று அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்து வெளியேறினார்.

இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கேதர் ஜாதவ் இறுதிபந்துப்பரிமாற்றத்தில் 38 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார். இதனால் 16 ஓட்டங்களால் பெங்களூர் வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் முத்தையா முரளிதரன், மிக்ஷல்ஸ்ராக் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஷஹால், அஹமட் ஆகியோர் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக யுவராஜ்சிங் தெரிவானார். (400)

NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

**இலவச சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள்**
**புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.**

O/L, A/L பரீட்சை முடித்தவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச தனியார் ஊழியர்கள், அரசமொழி சிங்கள பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
மூன்றே மாதங்களில் மொழியை இலகுவாக பேச, எழுத, வாசிக்க ஆரம்பத்தில் இருந்து அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
பரீட்சை முடிவின்பின் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
ஒரு பிரிவில் 20மாணவர்களே அனுமதிக்கப்படுவர் பதிவுகளுக்கு முந்துங்கள்
No: 328 Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 021-222 4459, 0774192275, Fax: 021-222 4460

**யாழ்ப்பாணத்து மகளிர் பாதுகாப்பாக, கௌரவமாக,தனித்துவமாக மாதம் அறுபதாயிரம் உழைக்க - படிக்க வெறும் 5 லட்சங்கள் போதும்**

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் பெண்கள் படிக்க - உழைக்க எமது நிறுவனம் அவர்களின் பாதுகாப்புக்கு முழு உத்தரவாதம் அளிக்கின்றது.

**விரைந்து வாருங்கள்**

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
**175, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.**
**0212219016, 0215689090**



ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
A1 B1
பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழி மூலம் பட்டக்கல்வியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு 50 % கட்டணக்கழிவு
மேலதிக விபரங்களுக்கு 0777240707
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 0212224403 | நெல்லியடி 0212262470 | சாவகச்சேரி 0212270775 | சுன்னாகம் 0212241970

**கணினி மலிவு விற்பனை**



HP COMPUTER
19,750/ (FULL SET)
FREE - NK PHONE



ஒரு வருட உத்தரவாதம்
ST.ANTONY'S
187,K.K.S ROAD
JAFFNA TOWN.
021-222-4865
0750698608

**வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2014**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/ யூனியன் கல்லூரி**
**தெல்லிப்பழை**

எமது பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25.05.2014 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப. 10.00 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிதாக அங்கத்தவராக இணைய விரும்பும் பழைய மாணவர்கள், செயலாளர் / பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பிரேரணைகள் ஏதேனும் சமர்ப்பிக்க விரும்புவோர் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி.

தொடர்பு :- 0775890019

சோ. இராமநாதன்
(செயலாளர்)

(c\48050)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆழமாக அன்பு காட்டத் தெரிந்தவர்களுக்கு என்றுமே வயதாவதில்லை. முதுமை காரணமாக அவர்கள் இறக்கலாம். ஆனால் இளமையாகத்தான் இறக்கிறார்கள்
*விங் பியர்ரே.*

# புதன் பொய்கை A

உதயன் | மே 14 2014 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

ராஜராஜன்



# இறுதிக்காலத்தை இனிமையாக்குவோம்

வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ? இது மறைந்த கவியரசர் கண்ணதாசனின் பாடல் வரிகள். எமது உடலை விட்டு உயிர் பிரிந்த பின்னர் என்ன நடக்கப் போகின்றது என்பதை கவியரசர் தமது பாடல் வரிகள் மூலமாக அற்புதமாக எடுத்துக் கூறுகின்றார்.

மனிதனின் இறுதிக்காலம் துயரம் நிறைந்தது. என்னதான் பணத்தோடும், செல்வாக்கோடும் வாழ்ந்தாலும் அந்த இறுதிக் கணங்கள் எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே கழிகின்றன. ஏனென்றால் இறப்பதற்கும், இந்த உலகை விட்டுப் பிரிவதற்கும் எவருமே விரும்புவதில்லை.

அதுவும் வயோதிபத்தின் விளிம்பில் இருப்பவர்களின் வேதனையும், மன ஆதங்கமும் தமது இறுதிப் பயணத்தை நோக்கியதாகவே அமைந்து விடுகின்றன.

எமது குழந்தைப் பருவத்தை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போம். சரியாக உடை கூட அணியாத நிலையில் வெட்கம் என்பதையே அறியாது மனதில் வேதனையோ, களங்கமோ இல்லாது உலவிய அந்த நாள்கள் இன்றும் மனதில் பசுமையாக நிழலாடுகின்றன. வீட்டில் கிடைக்கும் உணவுகளை வயிறார உண்போம். உடைகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாது, இருப்பதை அணிந்து கொள்வோம். வாகனங்களின் பயம் இல்லாது வீதிகளில் சுதந்திரமாக உலவுவோம். மாற்றாரின் மாமரங்கள் எமக்குத் தேவையான கனிகளையும், காய்களையும் அள்ளித் தர அவற்றையும் ஒரு கை பார்ப்போம். கண்ணில் தெரியும் நீர் நிலைகளில் எமது உடம்புச் சூடுமறையும் அளவுக்கு நீச்சலடிப்போம். ஆஹா! எவ்வளவு இனிமையான காலம் அது. அந்தக் காலம் மீண்டும் திரும்பி வருமா என்ற நப்பாசை கூட இன்று அடிக்கடி ஏற்படுகின்றது. அது முடியாது என்று தெரிந்தும் அவ்வாறு எமது மனம் எண்ணுகின்றது.

குழந்தைப் பருவம் மறைந்து பெரியவர்களாகும்போது உலகின் போக்குக்கு ஏற்ப நாம் எம்மை மாற்றிக் கொள்கின்றோம். பிறரிடம் அன்பு செலுத்துகின்றோம். கோபப்படுகின்றோம். ஆத்திரப்படுகின்றோம். மற்றவர்களைக் கடிந்து கொள்கின்றோம்.

குழந்தைப் பருவம் மறைந்து பெரியவர்களாகும்போது உலகின் போக்குக்கு ஏற்ப நாம் எம்மை மாற்றிக் கொள்கின்றோம். பிறரிடம் அன்பு செலுத்துகின்றோம். கோபப்படுகின்றோம். ஆத்திரப்படுகின்றோம். மற்றவர்களைக் கடிந்து கொள்கின்றோம்.

எம்மிடம் வசதிகள் காணப்பட்டால் கட்டிய மனைவி எள் என்றால் எண்ணெய்யைக் கொண்டு வருவாள். பிள்ளைகள் அதிக பாசத்தைக் காண்பிப்பதுடன் எம்மைச் சுற்றிச் சுற்றியே வருவார்கள். உறவினர்கள் எழுந்து நின்று மரியாதை செய்வார்கள். இவையெல் லாம் எமக்குக் காட்டும் மரியாதைகள் அல்ல. எம்மிடம் ஒட்டிக்கொண்டிருக்கும் வசதி என்கின்ற பசைக்கே இவையெல்லாம் கிடைக்கின்றன. இந்தப் பசை அழிந்து விட்டால் மரியாதைகளும் மறைந்து விடும். இதனால்தான் இல்லாதானை இல்லாளும் மதியாள் என்று கூறி வைத்தார்கள்.

இந்த உலகிலே கோடிக்கணக்கான மனிதர்கள் வாழ்கின்ற போதிலும் ஒருவரின் முகம் வேறொருவருக்கு அமைவதில்லை. ஏழு பேர் ஒரே மாதிரியாக இருப்பார்களெனக் கூறப்பட்டாலும் அது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. மனிதர்கள் உடல் ரீதியில் மட்டுமல்ல மனதளவிலும் வேறுபட்டே நிற்கின்றனர். ஒருவரின் மனதில் உள்ளதை வேறொருவரால் புரிந்து கொள்ள முடியாது.

இதேவேளை மனிதர்களின் ஆயுட்காலம் நூறு வருடங்கள் எனக் கூறப்படுகின்றது. ஆனால் இங்கு பிறக்கும் அனைவரும் இதனைப் பூர்த்தி செய்வதில்லை. துடுப்பாட்டப் போட்டியொன்றின்போது வெவ்வேறு எண்ணிக்கையில் ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து மைதானத்தை விட்டு வெளியேறும் வீரர்களைப் போன்று மனிதர்களும் வேறுபட்ட வயதுகளில் உலகை விட்டு நீங்குகின்றனர்.

உலகே மாயம் வாழ்வே மாயம் என்பது எம்மைப் பொறுத்தவரை உண்மையான வார்த்தைகள். பிறவிகளிலே உயர்ந்தது மனிதப் பிறவி என்று கூறப்பட்டாலும் மனிதர்களின் ஆயுள் ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் நிறைவு பெறுகின்றது. எமது பரம்பரையைச் சேர்ந்த அனைவரையும் எமக்குத் தெரியாது. எமக்கு முந்திய மூன்றாவது தலைமுறையைச் சில வேளைகளில் அறிந்து வைத்திருக்கின்றோம். நினைவில் கொண்டுள்ளோம். அதற்கு முந்தியவர்களை நாம் பார்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. இந்த நிலை நாளைக்கு எமக்கும் ஏற்படலாம். ஒரு மூன்று தலைமுறைக்குப் பின்னர் நாமும் மறக்கப்பட்டு விடுவோம். இதுதான் உலக வாழ்க்கை.

பெரும் பணக்காரர்கள் இரவில் தூங்குவதில்லையெனக் கூறுவார்கள். தமது பணத்தைப் பாதுகாப்பது தொடர்பான கவலைகள் அவர்களது தூக்கத்தை விரட்டியடித்து விடுகின்றன. ஆனால் அன்றாட உணவுக்கே அல்லாடும் ஏழையொருவன் வயிறார உணவு கிடைத்துவிட்டால் மேலும் தன்னை மறந்து தூக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றான். விழந்த பின்னர்தான் அன்றைய பொழுதைப் பற்றிய கவலை அவனிடம் எழுகின்றது. மேலும் சிலர் எந்த நேரமும், எதற்காகவும் பரபரத்துக் கொண்டிருப்பார்கள். நிதானமும், அமைதியும் இவர்களை விட்டு எப்போதோ விடைபெற்றுப் போயுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கும். இவர்களின் இறுதிக் காலமும் அந்தரமான நிலையிலேயே அவலமாக முடிந்து விடும். நாம் என்று பிறந்தோமோ அன்றே எமது இறுதிப் பயணத்துக்கான திகதியும் குறிக்கப்பட்டுவிடும். ஆனால் இறப்புப்பற்றிய பயம் அப்போது பெரிதாகத் தெரிவதில்லை. ஒருவாறு காலத்தைக் கழித்து வயோதிபத்தை நாம் எட்டும்போது மரணத்தின் நிழல்கள் எம்மைச் சூழ ஆரம்பிக்கின்றன. நாம் இதனை மறந்துவிட்டாலும் மற்றவர்கள் இதை எமக்கு நினைவு படுத்துகின்றனர். வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் தமது வசதிக்கு ஏற்றாற் போன்று எமது இறப்பு நிகழ்ந்து விடாதா என எண்ணிக் கவலைப்படுகின்றனர். நோய் எம்மை மோசமாய் பாதித்து ஏனையவர்களுக்கு எம்மால் சிரமங்கள் ஏற்படும் போது எம்மைப் பிரிவதில் அவர்கள் அவசரம் காட்டுகின்றனர். இதுநாள்வரை எமக்கூடாக அவர்கள் அனுபவித்த நன்மைகள் யாவும் அந்த வேளைகளில் செல்லாக்காசாக மாறி விடுகின்றன.

உயிரற்ற எமது உடல் நெருப்புக்கு இரையாகின்றது அல்லது ஆறு அடிநீளம்கொண்ட குழிக்குள் நிரந்தரமாக ஓய்வெடுக்கின்றது. காலப் போக்கில் எமது நினைவுகள் மெல்ல மெல்ல மறைய ஆரம்பிக்கின்றன.

எனவேதான் மனிதர்களாகிய நாம் எமது இறுதிக் காலத்தை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் வாழ்வின் உண்மைகள் எமக்குப் புரிய வரும். நிலையற்ற உலகில் நிலையில்லாத வாழ்வு வாழும் நாம் இங்கு வாழுகின்ற காலத்திலாவது எம்மால் இயன்ற உதவிகளை மற்றவர்களுக்குப் புரிவதில் ஆனந்தம் காண்போம். தனித்துத் தனிவழி செல்லப்போகும் எம்முடன் இவையாவது இணைந்து கொள்ளட்டும்.







# அழகாக மெட்டெடுக்கும் நைட்டிங்கேல் பறவை

நைட்டிங்கேல் பறவை, பாடும் பறவையினங்களிலேயே மிகவும் சிறந்தது என்று அமெரிக்க விஞ்ஞானிகளின் கண்டுபிடித்துள்ளனர்.

பாடும் பறவை இனத்தைச் சேர்ந்த வகையிலேயே மிகவும் புத்திசாலியான, நேர்த்தியான பறவை நைட்டிங்கேல் பறவைதான் என்பதை விஞ்ஞானிகள் 49வகையான பாடும் பறவைகளை நெடுங்காலம் ஆராய்ச்சியின் பயனாகக் கண்டு பிடித்துள்ளனர்.

ஏனெனில் இந்த நைட்டிங்கேல் பறவையின் மூளையின் பெரும்பாலான பகுதிகளில் இசைக்கு ஏற்ப, தாளத்துக்கு ஏற்றபடியாக, மெட்டெடுக்கக் கூடிய அரியவகை சங்கீத ஞானம் உள்ளது, அந்தப் பறவைகள் எப்படிப்பட்ட கடினமான இசையையும், ஒரு நொடிப் பொழுதில் மனப் பாடம் செய்யக் கூடிய அரிய திறன் கொண்டவை.

அறிவியல் விஞ்ஞானிகள், மற்றும் பறவையின ஆராய்ச் சியாளர்களின் கருத்தின்படி, கறுப்பு குயிலினத்தைச் சேர்ந்த பறவைகள் 108 இசைகளின் தாளங்களையும், யூரெசிய வானம்பாடி பறவைகள் 341 மெட்டுக்களையும் மனப்பாடம் செய்து பாடும் திறன் படைத்தவை.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், நைட்டிங்கேல் பறவைகள் 1,160 மெட்டுக்களை மனப்பாடம் செய்து, அதை அப்படியே பாடக்கூடிய திறன்படைத்த பெருமைக்குரியவை என்று ஆராய்ச்சியாளர் கள் கண்டுபிடித்துள்ளனர். எனவேதான் இந்த நைட்டிங்கேல் பறவைக்கு பாடும் பறவை என்று பெயரிட்டுள்ளனர்.

மற்றொரு பாடும் பறவை YELLOW HAMMER என்று அழைக் கப்படும் மஞ்சள்நிறப் பாடும் பறவையாகும்.

இந்த வகைப் பறவைகள் பாடும் பாட்டுக்கள் சிறிய மெட்டுக்களாகவும், (SIMPLE) சாதாரண மெட்டுக்களாகவும், நைட்டிங்கேல் பாடும் பறவையினத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில் தோன்றும். பாடும் பறவைகளின் மூளை வளர்ச்சியே இந்த அற்புதத்துக்குக் காரணம்.

# கடவுள் உலகத்தை படைக்கவில்லை

பிரிட்டன் பௌதிக விஞ்ஞானியும், கணித நிபுணருமான ஸ்டீஃபன் ஹாக்கிங் சமீபத்தில் எழுதி, இன்னும் வெளியில் வராத நூலில் கடவுள் இந்த உலகத்தைப் படைக்கவில்லை என்று கூறியுள்ளார். கருத்துளைப் பற்றிய தனது சிந்தனைகளால் விஞ்ஞான உலகை உலுக்கிய ஸ்டீபன் ஹாக்கிங் தி கிராண்ட் டிசைன் என்று தலைப்பிடப்பட்ட இந்த புதிய நூலை தன் சக விஞ்ஞானி யான லியனார்ட் மிலோடினோவ் என்ப வருடன் சேர்ந்து எழுதியுள்ளார்.

இந்தப்பூமிஎன்பதுஏதோமனிதனைமகிழ்ச் சிப்படுத்த அக்கறையுடன் கவனமாக வடிவமைக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்று கூறுகிறார் ஸ்டீபன் ஹாக்கிங். ஏனெனில் இன்னொரு நட்சத்திரத்தை இன்னொரு கோள் சுற்றிக் கொண்டிருக்கிறது என்று கண்டு பிடிக்கப் பட்ட பிறகே நாம் எதையும் உத்தரவாத மாக எடுத்துக்கொள்ள முடியாது என்பது தான் இவரது வாதம். சுமார் 10 ஆண்டுக ளுக்குப் பிறகு ஸ்டீபன் ஹாகிங் எழுதும் பெரிய புத்தகம் இது என்று கூறப்படுகிறது. அவர் 1988ஆம் ஆண்டு எழுதி வெளி யிட்டு மிகப் பிரபலமடைந்த காலம் பற் றிய ஒரு சுருக்கமான வரலாறு என்பதில் உலகை படைத்தவர் என்று ஒருவர் இருந் திருக்க வேண்டும் என்று கருதினார். அதாவது உலகத் தோற்றம் பற்றிய முழு கோட்பாடு என்பது மனித அறிவின் உச்ச கட்ட சாத னையாகும், பிறகு தான் நாம் கடவுளின் மனம் என்ன என்பதை அறிய முடி யும் என்று அந்த நூலில் அவர் கூறியிருந்தார்.

ஆனால் தற்போது 'தி கிரா ண்ட் டிசைன்' என்ற நூலில் அந்த நிலைப்பாட்டிலிருந்து அவர் விலகியதாகவே தெரி கிறது. புவியீர்ப்பு விசை என்ற விதி இருக்கும் போது பிரபஞ்சம் ஒன்றுமில்லாததிலிருந்து தானே உருவாக முடியும், என்று கூறும் ஸ்டீபன் ஹாக்கிங் கடவுள் ஒருவர் உலக சிருஷ்டியின் பின்னணியில் இருந்தார் என்பதை மறுக்கிறார்.

திடீரென உருவாகும் படைப்பு என்பது தான் இன்மை அல்ல ஏதோ ஒன்று உள்ளது என்பதையும், ஏன் பிரபஞ் சம் உள்ளது, ஏன் நாம் இருக்கிறோம் என்ப தையும் உறுதி செய்கிறது. பிரபஞ் சத்தை இயக்க வைக்கும் சக்தியாக கடவுள் என்ற ஒருவரை வரவழைக்க வேண்டிய தில்லை என்கிறார் ஹாக்கிங். இந்த நூலில் ஹாக் கிங், இந்தப் பிரபஞ்சம் உண்டானதில் கடவுளின்பங்குஇருக்கலாம்என்றநியூட்டனின் கோட்பாட்டை விமர்சனம் செய்துள்ளார்.

ஆனால் ஹாக்கிங் எதையும் உறுதியாகக் கூறமுடியாது என்றுதான் கூறுகிறார். இதெல்லாம் எளிமையான விடயம் அல்ல என்கிறார். பிரபஞ்சம்எப்படி இயங்குகிறது என் பதை அறிய அது ஏன் இவ்வாறு உள்ளது ஏன் வேறுமாதிரியாக இல்லை என்பதை அறிவது அவசியம் என்கிறார். இதுதான் வாழ்க்கை, பிரபஞ்சம் ஏன் அனைத்தைப் பற்றியுமான தலையாய கேள்வி என்று கூறுகிறார் ஹாக்கிங்.




விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங்





# கடற்கரையில் 3 டி ஓவியங்கள்

நியூஸிலாந்தைச் சேர்ந்த நான்கு ஓவியர்கள் கடற்கரை மணலில் 3டி வடிவமைப்பில் அசத்தலான ஓவியங்களை வரைந்துள்ளனர். நியூஸிலாந்தில் உள்ள Mount Maunganui எனும் கடற்கரையில் படைப்பாற்றல் திறனுடன் விளையாட்டுத்தனமும் சேர்ந்த இவர்களது ஒவ்வொரு ஓவியங்களும் மிகப்பெரிய அளவில் காட்சி தருவதோடு கடற்கரையிலே கடலை கொண்டு வந்துள்ளனர். இதுவரை கடற்கரை மணலில் வரையப்பட்ட ஓவியங்கள் பெரும்பாலும் தட்டை வடிவிலோ அல்லது சிற்பமாகவே வரையப்பட்டன. அதனால்தான் இதுபோல் 3டி வடிவில் ஓவியங்களை வரைய முயற்சித்தோம் என நால்வரில் ஒருவரான Jamie Harkins என்பவர் கூறியிருக்கிறார். இந்த ஓவியப் புகைப்படங்கள் தற்போது இணையத்தில் பிரபலமாகி வருகிறது. இதோ அதில் சில படங்களை கீழே காணலாம்.....











# மவுஸ் பயன்படுத்துவதால் ஏற்படும் வலியைத் தடுப்பதற்கான வழிகள்...

மிது

கணினியுடன் சேர்ந்து எமது அன்றாட வாழ்வில் எம்முடன் கலந்ததாக மவுஸ் மாறி விட்டது. நாம் அறியாமலேயே நம் கைகளில் ஏற்படும் பலவிதமான பிரச்சினைகளுக்குக் காரணமாகவும் மவுஸ் அமைந்துவிட்டதாகப் பல மருத்துவர்கள் கூறுகின்றனர். கைகளில், குறிப்பாக மணிக்கட்டைச் சுற்றி ஏற்படும் வலி மற்றும் எலும்பு தேய்மானத்துக்கு மவுஸ் காரணமாய் அமைகிறது என்கிறார்கள். இதனை ஆங்கிலத்தில் musculoskeletal injury என்று அழைக்கின்றனர். இதற்குக் காரணம் அதனைப் பிடித்துப் பயன்படுத்தும் விதத்தில் நாம் சரியாக அக்கறை காட்டாத துதான்.

இங்கு மவுஸைப் பிடித்துப் பயன் படுத்தும் வழிகளில் பின்பற்ற வேண்டிய சில மருத்துவ அறிவுரைகளை இங்கு காணலாம்.

முதலாவதாக மவுஸ் பிடித்திருக்கும் முறையில் அவ்வப்போது மாற்றத்தை ஏற்படுத்திக் கொள் ளுங்கள். மாற்றத்தை ஏற் படுத்தினாலும் சிறப்பாகப் பயன் படுத்திக் கொள்ளும் வகையில் தான், மவுஸ் வடிவமைக்கப்பட் டுள்ளது.

மவுஸ் பிடித்திருக்கையில் அதனை இறுக்கிப் பிடிக்க வேண்டாம். மிக மெதுவாகப் பட்டும் படாமல் எம் கரத்தை அதன் மீது வைத்து இயக்கலாம்.

மவுஸ் இயக்கப்படுகையில் உங்களுடைய மணிக்கட்டு தசை அதிகம் இயங்கக் கூடாது. முழங்கை தசைதான் அதனை இயக்கும் செயற்பாட்டின் மையமாக இருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் மணிக்கட்டை நேராக வும் நடுவாகவும் வைக்கவும்.

உங்களுடைய நாற்காலியில் நன்கு சாய்ந்து அமர்ந்து கொள்ளுங்கள். கரங்களைத் தளர் வாக வைத்துக் கொள் ளுங்கள். அதன்பின் மவுஸ் பிடிக்கும் உங்கள் கரத்தை, பெரும்பாலும் வலது கரம், சற்றுத் தூக்குங்கள். உங்கள் கை முழங்கைக்குச் சற்று மேலாக இருக்கும் வகையில் தூக்குங்கள். மவுஸை கீ போர்டு இருக்கும் இடத்திற்கும் அருகே அதே தளத்தில் வைத்துப் பயன்படுத்த வேண் டாம். கீ போர் டுக்கு ஒரு அல்லது 2 அங்குலம் மேலாக இருக்கும்படி மவுஸ் இடம் பெற வேண்டும். இந்த மவுஸ் அமரும் இடம் சற்றுக் கீழாக சரிவாக இருக்கும் படியாகவும் அமைக்கலாம்.

நீங்கள் மணிக்கட்டின் அமைப்பைச் சற்று சிரத்தையுடன் கவனித்தால் ஒன்று புரியும். இது இயற்கையாகவே சற்று வளைந்த நிலையில் உள்ளது. தட்டையான ஒரு தளத்தில் மணிக் கட்டை வைத்துப் பாருங்கள். வளைவான மணிக்கட்டின் கீழாக ஒரு சிறிய பேனாவை நுழைத்து எடுக்கும் அளவுக்கு, அது வளைவாக இருக்கும்.

இதனுடன் எந்த தள அழுத்தமும் இருக்கக் கூடாது என்ற வகையில்தான் முன் கரம் மணிக் கட்டுடன் அமைக்கப்பட்டுள்ளது. எனவே மவுஸ் பயன்படுத்துவதற்காக மணிக்கட்டைத் தளத் தோடு அழுத்து வது இயற்கைக்கு முரணா னது.

எம்மில் பெரும்பாலானவர்களுக்கு மணிக் கட் டின் தோலுக்குச் சற்று அடியிலேயே குருதி நாளங்கள் செல்லும். அதனால் தான் நாடித் துடிப்பினை இங்கு பார்க்கிறோம். எனவே இந்த இடத்தில் அழுத்தம் கொடுத் தால் அது இரத்த ஓட்டத்தில் சிறிதளவேனும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் இங்கு காயம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

ஒரு சிலர் மணிக்கட்டுப் பகுதிக்கென தனியே ஒரு சப்போர்ட் அமைத்து இயக்குவார்கள். கைக்குட்டையைக் கூட மடித்து வைத்துப் பயன்படுத்துவார்கள். இது பிரச்சினையை மேலும் பெரிதாக மாற்றி, ஏற்கனவே நாம் கணினியில் மலரில் எழுதிய கார்பல் டனல் பிரச்சினையை உருவாக்கும்.

ஒரு சிலர் கரங்களுக்கு மெதுவாக இருப் பதற்கென மென்மையான சப்போர்ட் ஒன்றை நாற்காலியின் கரங்களில் வைத்துப் பயன் படுத்துவார்கள். இவ்வாறு பயன் படுத்துகையில் கரங்களை அதிலிருந்து எடுக்கமாட்டார்கள். ஒரு வகையில் கரங்கள் கட்டிப் போட்டது போல மாறுகிறது. இதனால் மணிக் கட்டுக்கு அதிக வேலை கிடைக்கிறது. இது மிகவும் பிரச்சினையைத் தரும்.

ஒரு சம தளத்தில் கையை வைத்து இயக் குகையில், நம் உள்ளங்கையின் அடிப் பாகத்தில் அதனை அமர்த்தி இயக்க வேண்டும். கீ போர்டை இயக்குகையில் இது மிகவும் உதவி யாக இருக்கும். ஆனால் மவுஸ் பயன்பாடு கீ போர்டு பயன் பாட்டிலிருந்து மாறுபட்டது. கீ போர்டில் கரங்களை உள்ளங்கை சப்போர்ட்டில் வைத்துப் பின் விரல்களை மட்டுமோ, கரங்களையோ இயக்கிப் பின் அவ்வப்போது உள்ளங்கை அடிப் பகுதியில் வைத்து ஓய்வளிக்கலாம். ஆனால் மவுஸ் இயக்கம் அப்படிப் பட்டதல்ல. இங்கு ஒரு தளத்தின் மீது முழு மவுஸ் சாதனமும் நகர்த்தி இயக்கப் படுகிறது. மவுஸ் நகர்த்தல் முழுமையும் முழங்கையை இயக்கத்தின் நடுப் புள்ளியாக வைத்து இயக்கப்பட வேண்டும். மணிக்கட்டு நடு இயக்கப் புள்ளியாக அமையக் கூடாது. முன்கை, கை மற்றும் மவுஸ் இயங்கு வதைத் தடுக்கும் வகையில் செயற்பாடு எது இருந்தாலும், அது பிரச்சினையைக் கொடுக்கும்.

இப்போது 'ஸ்டைல்' என்ற பெயரில் பல வடிவங்களில், பெரும்பாலும் தேவையற்ற வளைவுகளில் மவுஸ் சாதனங்கள் வடிவமைக்கப்பட்டு கிடைக்கின்றன. இது போன்ற வளைவான மவுஸ் பயன் பாட்டுக்குச் சரியானதல்ல. இரு புறமும் இணையாகச் சீரான அமைப்புள்ள மவுஸ் தான் சரியான ஒன்று. சில நிறுவனங்கள் இது குறித்து மருத்துவ ரீதியாக ஆய்வுகளை மேற்கொண்டு, சற்றுப் பெரிய அளவில் மவுஸ்களைத் தருகின்றன. இவை மணிக்கட்டுக்கு வேலையைக் குறைத்து கரங்கள் வழி மவுஸ் பயன்பாட்டுக்கு வழி வகுக்கின்றன. மவுஸை இடது கரத்திலும் பயன்படுத்தும் வகையிலும் செட் செய்திட விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் வகை செய் யப்பட்டுள்ளது.

# நல்ல நினைவுகள்

## விரைவில் மங்குவதில்லை

வாழ்க்கையில் நாம் சில விடயங்களை நீண்ட நாள்களுக்கு நினைவு கொள்கிறோம். அதே நேரம் சிலவற்றை குறுகிய காலத்தில் மறந்து விடுகிறோம்.

இது எப்படி நடைபெறுகிறது என்பதை விஞ் ஞானிகள் இப்போது கண்டறிந்துள்ளார்கள். மனித குலத்தை மகிழ்ச்சியாக வைத்திருக் கவும், எதையும் தாங்கும் வல்லமை கொண்டவர்களாக மனிதர்கள் வாழ்வ தற்காகவும் நல்ல நினைவுகள் நீண்டகாலம் நீடித்திருக்கின்றன என்று உளவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தீய நினைவுகளை விட்டொழித்து நல்ல நினைவுகளை தக்க வைத்துக் கொள்வது, வாழ்க்கையில் கசப்பான உணர்வுகள் மற்றும் நிலைமைகளைச் சமாளித்துச் சாதகமான அம்சங்களை முன்னெடுக்க உதவுகிறது என்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தீய நினைவுகள் விரைவாக மங்கு கின்றன எனும் ஒரு கோட்பாடு 80 வரு டங்களுக்கு முன்னர் முதல் முறை யாக முன்வைக்கப்பட்டது. பின்னர் 1970 ஆம் ஆண்டுகள் தொடக்கம் இதுகுறித்து பல்லின மக்களிடம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக சுற்றுலாப் பயணம் தொடர்பான நினைவுகள் குறித்து ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அதில் தாங்கள் அதில் கழித்த உல்லாசமான நாள்கள், சந்தித்த மக்கள் ஆகியவை குறித்து உடனடியாக நினைவு கூர்ந்தனர். அதேநேரம் தாமதமான விமானப் பயணம் போன்றவற்றை அவர்கள் நினைவு கூரவில்லை.

அதையடுத்து இந்த ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ள உளவியல் விஞ்ஞானிகள், மனிதர்களிடையே விரும்பத்தகாத நினைவுகள் மற்றும் கசப்புணர்வுகள் வேகமாக மங்கி வருகின்றன என்று தெரிவித்துள்ளனர்.

ஆகவே இயற்கையாகவே தீய நினைவுகள் விரைவாக மங்கத் தொடங்குகின்றன என்பது நாடுகளையும் கலாசாரங்களை கடந்த ஒன்றாக உள்ளது என்று ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன என்று விஞ்ஞானிகள் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளனர்.






# அதி சிறந்த விலைத்தள்ளுபடி

விரையுங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே

24" LED தொலைக்காட்சி





24P600
- HD
- PC இன்புட்
- 3W + 3W ஸ்பீக்கர்
- HDMI x 2

ரூ.32,990/-

32" LED தொலைக்காட்சி





Haier
Inspired Living

32V600
- முழு HD
- USB (Movie)
- PC இன்புட்
- HDMI x 2
- 5W + 5W ஸ்பீக்கர்

ரூ.39,990/-

கம்பஹா – லக்சல ட்ரேட் சென்டர்: 011 2914925 • கண்டி = திஸபால தனியார் நிறுவனம்: 081 2232104 • களுத்துறை = ப்ரடயிஸ் மார்க்கட்டிங்செண்டர்: 038 2297972 • அம்பாந்தோட்டை = தம்மிக தனியார் நிறுவனம்: 077 3788668 • கம்பஹா = டிஜிடல் இலக்ரோனிக்ஸ் • குருணாகலை = ஷாந்த ஸ்டோர்ஸ்: 037 2281176 | 077 3111103 • கண்டி = சீதா ட்ரேட் சென்டர்: 081 2575753 • கண்டி = R.A.N தனியார் ஒடிங்ஸ் நிறுவனம்: 081 2219224 • களுத்துறை = வெல்கம் ட்ரேடர்ஸ்: 077 7761724 • கம்பஹா = சேனாதீர மல்டி ட்ரேடர்ஸ்: 033 2225014 • கொழும்பு = நெல்சன் ட்ரேடிங், கொழும்பு 11 : 011 2423170 • கொழும்பு = நெல்சன் தர்மசேன கம்பனி: 011 2324920 • கொழும்பு - லக்ஷித ஸ்டோர்ஸ்: 011 2327260 | 077 3511441 • அம்பாந்தோட்டை = T.G [illegible] 047 2247220 • களுத்துறை = வெல்கம் மார்க்கட்டிங் சேர்விசஸ் நிறுவனம்: 038 2240016, 038 2240017 • புத்தளம் = தில்ஷான் ட்ரேட் சென்டர் தனியார் நிறுவனம்: 032 2254366 • புத்தளம் - விஜேதுங்க இலக்ரோனிக்ஸ், கொச்சிகடை: 031 2278274, 0777 112734 • நுவரெலியா = கன்டுலை 052 2287439 • கொழும்பு - ஆதில் என்டர்பிரைசஸ்: 011 2342306 • இரத்தினபுரி - ஹேஷா இலக்ரோனிக்ஸ்: 047 2261222 • கண்டி = யுனிவசல் லங்கா மார்க்கட்டிங்: 081 4926358 • குருணாகலை = சிங்க காட்சியறை: 037 2225687 071 4837337 • கம்பஹா – க்ரிஸ்டோ இலக்ரோனிக்ஸ்: 071 8525646 • கொழும்பு - மங்கல ஸ்ரீ ட்ரேடர்ஸ்: 0777 794545 • கொழும்பு - NTS இலக்ரோனிக்ஸ்: 011 2337547 0777 302445

Abans


# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

அமரர்

## திருமதி.சிவகலாபன் மதுரா

மலர்வு :- 20.11.1989 உதிர்வு :- 13.04.2014

ஓயாத சாரல் பேச்சுக்கள்
உன் அடையாளம் – அது
ஓய்ந்ததில் தானே மௌனித்தது
எம் உணர்வுகள்
விதியவள் கடன்காரியானாள் எம்
செல்வம் உன்னைத் தனதாக்கி..
எங்கள் உயிர்த் தாகம் வற்றாது ஏங்கும்
பூவே மீண்டும் உன் வரவிற்காய்..
பாதைகள் தொலைவான போதும்
உனக்கான எம் துதிகள் உன் செவி வந்து சேரும்
நெடுந்தொலைவில் உன் சிரிப்பலைகள் எம் கண்ணீரை ஆற்றும்
ஓம் சாந்தி . . . சாந்தி . . . சாந்தி . . .



கடந்த 13.04.2014 அன்று சிவபதமடைந்த எங்கள் வீட்டுச் சுடர் சிவகலாபன் மதுரா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 15.05.2014 வியாழக்கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று 6.00 மணியளவில் அஸ்தி கீரிமலைத் தீர்த்தக்கரைக்கு எடுத்துச் செல்லப்படும். அதே தினம் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாய் வேண்டிக்கொள்கிறோம்)

தகவல்
குடும்பத்தினர்.
சமரபாகு, தேவன்குறிச்சி, உடுப்பிட்டி.
வைகுந்தன் - 0777714179, கலாபன் - 0778524958

புதன்பொய்கை

# மாவீரன் நெப்போலியன்



பிரான்ஸ் நாட்டின் சக்கரவர்த்தியாக திகழ்ந்தவர் மாவீரன் நெப்போலியன். போரின் மூலம் உலக நாடுகளை வென்ற இவர், வாட்டர்லு போரில் தோல்வி அடைந்தார். அதைத்தொடர்ந்து கடந்த 1816-ஆம் ஆண்டு பெலன்தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். அப்போது அவர் ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதினார். அப்போது அவர் ஆங்கிலம் படித்துக் கொண்டிருந்ததால் அக்கடிதத்தில் பல பிழைகள் இருந்தன. அக்கடிதம் சமீபத்தில் லண்டனில் ஏலம் விடப்பட்டது. அதை பிரான்ஸ் அரசு நிறுவனம் ரூ. 2 1/2 கோடிக்கு அதாவது 4 லட்சம் டொலருக்கு ஏலத்தில் எடுத்தது. இது நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட 5 மடங்கு கூடுதல் தொகையாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்கம் தந்த மாவீரன் அலெக்ஸாண்டர். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்ஸ் தந்த மாவீரன் நெப்போலியன் பொனபார்ட். அலெக்ஸாண்டர் ஒரு கிரேக்கப் புயல் என்றால், நெப்போலியன் ஒரு பிரெஞ்சு பிரளயம். இருவருக்குமிடையே பல ஒற்றுமைகள் இருந்தாலும் ஒரு முக்கியமான வேற்றுமை இருந்தது. ஒரு மன்னனுக்கு மகனாக பிறந்ததால் கிரேக்கத்தை ஆண்டான் அலெக்ஸாண்டர். ஆனால் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து மன்னனானான் நெப்போலியன். விதியை வென்றவன் என்ற அடைமொழியும் நெப்போலியனுக்கு உண்டு.

நெப்போலியனின் வாழ்க்கை.

1769 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி பிரான்ஸின் கோர்சிக்காவில் ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார் நெப்போலியன். 13 பிள்ளைகளில் ஒருவர். சிறு வயதிலேயே பயம் என்றால் என்னவென்று அறியாதவனாக வளர்ந்தார் நெப்போலியன். அரசின் சலுகை பெற்று வியட்நாமிலும் பாரிஸிலும் உள்ள இராணுவப் பள்ளியில் கல்வி பயின்றார். கணிதம், வரலாறு, புவியியல் ஆகியவை அவருக்குப் பிடித்த பாடங்கள். பள்ளியில் தனிமையை விரும்பிய நெப்போலியன் பொறுப்புணர்ச்சி மிக்கவராக இருந்தார். 16 வயதில் பள்ளிப் படிப்பை முடித்து பிரெஞ்சு இராணுவத்தின் பீரங்கிப் படைப் பிரிவில் சேர்ந்தார். டுலால் நகரில் நடைபெற்ற போரில் மிகச் சிறப்பாக செயற்பட்டதால் நெப்போலியன் படைத்தளபதியாக பதவி உயர்வு பெற்றார்.

1796ல் இத்தாலியில் ஆஸ்திரிய சாடினியப் படைகளை வெற்றிகரமாக முறியடித்த பிறகு நெப்போலியனுக்கு தேசிய அளவில் புகழ் கிடைத்தது. பின்னர் பாரி ஸில் ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டு வேறு இருவருடன் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றினார்.

1804 ஆம் ஆண்டு தனது 35 ஆவது வயதில் தன்னை பிரான்ஸின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டார் நெப்போலியன். அதற்குப் பிரெஞ்சு மக்களின் பேராதரவு இருந்தது. நெப்போலியன் அடுத்தடுத்தத் தொடுத்தப் போர்களால் இங்கிலாந்தைத் தவிர்த்து ஒட்டுமொத்த ஐரோப்பாவும் நெப்போலியனின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது இங்கிலாந்து நெப்போலியனின் கட்டுப்பாட்டுக்குள் வர மறுக்கவே பிரான்ஸின் கட்டுப்பாட்டில் இருந்த எந்த நாடும் இங்கிலாந்துடன் எந்த வர்த்தகமும் நடத்தக் கூடாது என்று கட்டளையிட்டார் நெப்போலியன். ஆனால் ரஷ்யா அந்தக் கட்டளையை மீறி இங்கிலாந்துடன் வர்த்தகம் புரிந்ததால் சினம்கொண்டெழுந்த நெப்போலியன் 1812 ஆம் ஆண்டு ரஷ்யா மீது படையெடுத்தார்.

நெப்போலியனின் படையெடுப்பை முன்கூட்டியே அறிந்தோ என்னவோ அவர் ரஷ்யாவுக்குள் அடியெடுத்து வைத்தபோது மாஸ்கோ வெறிச்சோடி கிடந்தது. சுமார் இரண்டரை லட்சம் ரஷ்யர்கள் வீடுகளை விட்டு வெளியேறியிருந்தனர். ரஷ்யாவின் ஷா மன்னன் தன்னிடம் வந்து சரண் அடைவான் என்று சுமார் ஒரு மாதம் அங்கயே முகாமிட்டிருந்தார் நெப்போலியன். ஆனால் மன்னன் வருவதற்குப் பதில் பனிக்காலமும், கடுங்குளிரும்தான் வந்தன. நெப்போலியன் சுதாகரித்துக்கொள்ளும் முன் பசிக்கும், குளிருக்கும் பல்லாயிரம் பிரெஞ்சு வீரர்கள் பலியாகினர். வேறுவழியின்றி மிஞ்சியிருந்த வீரர்களை பாரிஸ் திரும்ப கட்டளையிட்டார் நெப்போலியன். ஆறு லட்சம் வீரர்களுடன் சென்றவர் வெறும் இருபதாயிரம் வீரர்களுடன் திரும்பியதாக ஒரு வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது. பிரெஞ்சு இராணுவம் நிலைகுலைந்து போயிருந்த அந்த தருணத்தைப் பயன்படுத்திய பிரிட்டன், ரஷ்யா, ஆஸ்திரியா, சுவீடன் ஆகியவற்றின் கூட்டுப்படைகள் பிரான்ஸைத் தாக்கின. போரில் தனது முதல் தோல்வியைச் சந்தித்தார் நெப்போலியன்.

கூட்டுப்படையால் நெப்போலியன் எல்பா என்ற தீவில் சிறை வைக்கப்பட்டார்.

ஆனால் ஓராண்டுக்குள் சிறையிலிருந்த தப்பி வந்த நெப்போலியனை பிரெஞ்சு மக்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ள மீண்டும் பிரான்ஸின் சக்ரவர்த்தியானார் நெப்போலியன். புதிய படையை உருவாக்கினார். இரண்டே ஆண்டுகளில் பிரிட்டனும், அதன் நட்பு நாடுகளும் நெப்போலியனுக்கு எதிராக அணி திரண்டன.

பெல்ஜியத்தின் வார்ட்டலு என்ற இடத்தில் நடந்த போரில் இரண்டாவது முறையாக தோல்வியைத் தழுவினார் நெப்போலியன். அவரைச் சிறைப்பிடித்த பிரிட்டிஷ் இராணுவம் இம்முறை ஆப்பிரிக்காவுக்கு பக்கத்திலுள்ள தீவில் சிறை வைத்தனர். அந்தத் தீவில் தனிமையில் வாடிய நெப்போலியனுக்கு வயிற்று புற்றுநோய் ஏற்பட்டது. ஆறு ஆண்டுகளில் அதாவது 1821 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி நெப்போலியன் என்ற வீரசகாப்தம் முடிவுக்கு வந்தது.

## பொது அறிவு

- உலகின் மிக நீளமான பெருந்தெரு எது?
  **ரான்ஸ் கனடா**
- ஒட்சிசன் உதவியின்றி முதலில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர் யார்?
  **பூடோர்ஜி**
- நவீன இத்தாலியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
  **கரிபால்டி**
- வெள்ளை யானைகளின் நாடு என அழைக்கப்படும் நாடு எது?
  **தாய்லாந்து**
- உலகின் மிகப் பெரிய நூலகம் எங்கு உள்ளது?
  **வொஷிங்டன்**


*செ. விதுஷிகா, தரம்-9சி.*

---

- உலகில் உயரமான பாலம் எங்கு உள்ளது?
  **மலேசியா**
- வான்வெளிப் பகுதியில் காணப்படும் மிகச் சிறிய கிரகம் எது?
  **புதன் கிரகம்**
- இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்டு தற்போது எத்தனை ஆண்டுகள் நிறைவடைகின்றன.?
  **72 ஆண்டுகள்**
- இலங்கையின் நாணய அலகு எது?
  **ரூபா, சதம்**
- உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரி யார்?
  **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க**

*சி. ஹெஜினா, தரம்-3*
*பாடசாலை*

## கற்றிடுவோம்



தலைவாரிப் பூச்சூடி
உன்னைப்
பாடசாலைக்குப் போ என்று
சொன்னாள் உன் அன்னை
சிலைபோல ஏனங்கு
நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன்
சிந்துகின்றாய் ?

விலைபோட்டு வாங்கவா
முடியும்? - கல்வி
வேளைதோறும் கற்று
வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ
கல்வி? - நீ
வாயார உண்ணுவாய் போ
என் புதல்வி!

படியாத பெண்ணாய்
இருந்தால், - கேலி
பண்ணுவார் என்னை
இவ்வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன்
ஓடு! - என்
கண்ணல்ல, அண்டை
வீட்டுப் பெண்களோடு!

கடிதாய் இருக்கும்
இப்போது - கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியும்
அப்போது!

## உலக நாடுகளின் தலை நகரங்கள்

ஆஸ்திரேலியா - கன்பரா
கனடா - மொன்றியல்
சீனா - பீஜிங்
இந்தோனேஷியா - ஜகார்த்தா
பிரான்ஸ் - பரிஸ்
இந்தியா - புதுடில்லி
ஜப்பான் - டோக்கியோ
சுவீடன் - ஸ்டொக்ஹோம்
ஐக்கிய அமெரிக்கா - வொஷிங்டன்
இங்கிலாந்து - லண்டன்

*சோ. மைத்திரி,*
*சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*

# கோடை காலத்தில் வீட்டில் குளிர்மையாக இருப்பதற்கு.....



கோடை காலம் ஆரம்பித்து விட்டதால் வெயிலில் சென்றால் வெயில் நம்மை வாட்டுகிறது. வீட்டுக்கு வந்தாவது நிம்மதியாகக் களைப்பாறலாம் என்று பார்த்தால் வீட்டிலும் அனல் பறக்கிறது. எனவே கோடை காலங்களில் வீட்டைக் குளிர்மையாக வைத்துக்கொள்வதற்கு என்ன செய்யலாம் என்று பார்ப்போம்.

### காற்றோட்டமாக வைத்திருங்கள்

ஒரு பக்கம் வீட்டுக்குள் காற்று வந்தால், அது வேறொரு பக்கம் கண்டிப்பாக வெளியேற வேண்டும். அப்போது தான் வீட்டுக்குள் காற்றோட்டம் சீராக இருக்கும். காலை நேரங்களில் கதவு, ஜன்னல்களை நன்றாகத் திறந்து வையுங்கள். ஆனால், உச்சி வெயிலடிக்கும் போது, அவற்றை மூடிவிடுங்கள். இதனால் வெப்பமானது வீட்டில் இறங்காமல் இருக்கும்.



### மெல்லிய திரைகளை உபயோகியுங்கள்

வெயிலின் தாக்கம் இல்லாமலிருக்க முரட்டுத் திரைத் துணிகளை சிலர் தங்கள் கதவு, ஜன்னல்களில் மாட்டியிருப்பர். அது தவறு. மெல்லிய திரைகளை மாட்டினால் தான் வீடு காற்றோட்டமாகவும் வெளிச்சமாகவும் இருக்கும்.


### செடிகள் வளருங்கள்

நமது வீட்டில் சிறுசிறு செடிகளை தொட்டியில் வளர்க்கலாம். இந்த பசுமையான செடிகள் கோடை வெப்பத்தைக் குறைக்கும்.



### குப்பைகளைத் தூக்கிப் போடுங்கள்

தேவையே இல்லாமல் நீண்ட நாள்களாக வீட்டுக்குள் அடைந்து கிடக்கும் பொருள்களை அப்புறப்படுத்துங்கள். அவை வீட்டுக்கு உள்ளேயே இருக்கக்கூடாது. முடிந்தால் அவற்றை விற்று விடுங்கள்.





# தூக்கத்தை பாதிக்கும் முழு நிலவு

சுவிஸ் விஞ்ஞானிகளால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் நிம்மதியான தூக்கத்தைப் பாதிக்கும் ஆற்றல் பூரண சந்திரனுக்கு உண்டு என்ற தகவல் வெளியாகியுள்ளது.

பஸல் பல்கலைக்கழகம் உட்பட சில ஆராய்ச்சி நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட இந்த ஆய்வுக்காக 33 நபர்களின் தூக்கம் தொடர்பான விவரங்களை பகுப்பாய்வு செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் புகைத்தலோ அல்லது மதுபானம் அருந்தும் பழக்கமோ அற்றவர்கள்.


இதில் 17 பேர் 21 தொடக்கம் 31 வயது வரையானவர்கள், எஞ்சிய 16 பேரும் 57 தொடக்கம் 74 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பூரண சந்திரன் தோன்றியபோது இவர்கள் தமது தூக்கத்தில் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர், அவர்கள் தூங்கிய பகுதியை இருட்டாக்கியபோது நன்றாகத் தூங்கியுள்ளனர்.

ஆய்வின் முடிவில் உடலின் செயற்பாட்டை ஒழுங்குமுறையாக மேற்கொள்ள உதவும் மெலடோனின் என்ற ஹோர்மோன் உற்பத்தி பாதிக்கப்படுவதனாலேயே தூக்கமின்மை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தலைகீழாக அமைந்துள்ள விசித்திர வீடு



தலைகீழாக அமைக்கப்பட்டிருக்கும் விசித்திர வீட்டின் மீது சீன மக்களின் கவனம் திரும்பியுள்ளது. சீனாவின் சங்காய் நகரில் அமைந்துள்ள இந்த வீடு தலைகீழாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டின் விசேடம் என்னவெனின், வீட்டின் அறைகள், பொருள்கள் அனைத்துமே தலைகீழாகவே அமைக்கப்பட்டுள்ளன.

தளபாடங்கள், அழகு பொருள்கள், பொம்மைகள் என அனைத்துமே தலைகீழாகவே காட்சியளிக்கின்றன.



■ கே.என். ராமசந்திரன்

# வியக்க வைக்கும் இயற்கை



சுமார் 200 கோடியாண்டுகளுக்கு முன் உலகில் முதல் உயிரினம் தோன்றியதிலிருந்து பருவ நிலைகளிலும் சுற்றுச் சூழல்களிலும் பலவிதமான மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. அதற்கேற்றபடி உயிரிகள் தமது வாழ்க்கை முறைகளையும் உடலமைப்புகளையும் வடிவங்களையும் தகவமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

அவை தமது உறுப்புகளையும் வடிவங்களையும் கூட்டியோ, குறைத்தோ சூழ்நிலைகளுக்கேற்றவாறு செம்மைப்படுத்திக் கொண்டு தப்பிப் பிழைத்தலுக்கான தகுதிகளை வளர்த்துக் கொண்டன. அவ்வாறு செய்ய முடியாதவை முற்றாய் அழிந்து போயின.

சில விசேடமான தேவைகளுக்கேற்றபடி உயிரிகளில் சில விசேடமான உறுப்புகள் உருவாகியுள்ளன. அவற்றை ஆய்வு செய்து மனிதர்களுக்கு உதவக்கூடிய அமைப்புகளைச் செயற்கையாக உருவாக்க ஆய்வாளர்கள் முயன்று வருகிறார்கள். பயாலொஜி, எலக்ட்ரோனிக்ஸ் ஆகிய இரு துறைகளும் இணைந்த பயோனிக்ஸ் துறை உருவாக்கப்பட்டுள்ளது. மனிதன் இதுவரை சுயமாகச் சிந்தித்துப் புதுப்புனைவு செய்துள்ள சாதனங்களையெல்லாம் இயற்கை, உயிரிகளில் ஏதாவது ஓர் இடத்தில் செம்மையாகவும் வெற்றிகரமாகவும் முன்னதாகவே அமைத்து வைத்துவிட்டது.

எடுத்துக்காட்டாக ஒரு சிறிய விலங்கின் கண்ணோடு மிகச் சிறந்த ஒளிப்பதிவுக் கருவி கூடப் போட்டியிட முடியாது. உயிரிகளின் கண்கள் ஒவ்வொரு விசேட தேவைக்கும் ஏற்றபடி அமைந்துள்ளன. ஒரு தவளையின் கண் அதன் நாக்கு எட்டக்கூடிய தொலைவுக்குள் வருகிற இரையை மட்டுமே பதிவு செய்யும். உயிருள்ள பூச்சிகளை மட்டுமே இனம் காணும்.

தவளையைச் சுற்றி, அசையாத அல்லது இறந்த பூச்சிகள் குவிந்து கிடந்தாலும் தவளை சட்டை செய்யாது. அதேபோலத் தவளையின் எதிரிகளை அடையாளம் கண்டு எச்சரிக்கை செய்வதுடன் ஆபத்தற்ற மற்ற உருவங்களைப் புறக்கணித்துவிடும் தனித் திறைமையும் தவளையின் கண்களுக்கு உள்ளது.

தவளைக் கண்களின் அமைப்புத் தத்துவங்களின் அடிப்படையில் பாதுகாப்பு, விண்வெளி ஆய்வு போன்ற துறைகளுக்குப் பயன்படவல்ல 'செயற்கைக் கண்கள்' உருவாக்கப்பட்டுள்ளன. ஏவுகணைகளில் இத்தகைய ஒரு கண்ணைப் பொருத்தினால் அது நட்பு விமானங்களை விட்டுவிட்டு எதிரி விமானங்களைப் பிரித்தறிந்து தாக்க வல்லதாயிருக்கும். தற்போதுள்ள ராடர் கருவிகள் வானில் உள்ள எரிகற்கள், மேகங்கள், பறவைக் கூட்டங்கள் போன்றவற்றையும் சேர்த்துப் பதிவு செய்து விடுகின்றன. விமான கூடங்களில், வான்வழிப் போக்குவரத்து அளவுக்கு மீறிப் பெருத்துவிட்ட தற்காலத்தில், வெவ்வேறு வகை விமானங்களை அடையாளம் கண்டு, பிரித்தறியக் கூடிய ராடர் கருவிகளை இயக்க தவளைக் கண் தத்துவங்கள் உதவுகின்றன. நவீனமான ராடர் கருவிகள் மனிதத் தலையீடின்றித் தாமாகவே செயற்பட்டு வான்வழிப் போக்குவரத்தைக் கண்காணிக்கும்.

ராடரின் தத்துவமே வௌவாலிடமிருந்து பெறப்பட்டதுதான். வௌவால் கேளா ஒலிக்கீச்சுகளைப் பரப்பி சுற்றியுள்ள பொருள்களில் மோதித் திரும்பும் எதிரொலிகளை உணர்ந்து கும்மிருட்டில்கூடத் தனக்கு இரையாகக்கூடிய பூச்சிகளைப் பிடிப்பதுடன் மரங்களிலும் கிளைகளிலும் மோதிக் கொள்ளாமல் பறக்கிறது. கண்ணைக்கட்டி காட்டில் விட்டால்கூட அதற்குக் கவலையில்லை.

கிலுகிலுப்பைப் பாம்பு இரவில் இரை தேடும்போது தனது தலைப் பகுதியில் அமைந்திருக்கும் வெப்பம் உணர் உறுப்புகளைப் பயன்படுத்தி, அருகில் ஏதாவது வெப்ப உடல் உள்ள இரை உள்ளதா என்று தேடிக் கண்டுபிடிக்கிறது. பொதுவாகவே எல்லாப் பாம்புகளுமே அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுவதுகூடக் காற்றிலுள்ள இரசாயனப் பொருள்களைச் சோதித்து அருகில் ஏதாவது இரை இருப்பதற்கான வாய்ப்பைக் கண்டறிவதற்காகத்தான். உடும்பு, கொமோடோ, டிராகன் போன்ற விலங்குகளும் தமது நாக்குகளை இதே நோக்கத்தில் பயன்படுத்துகின்றன.

இதே தத்துவத்தில் எதிரிகளின் வாகன மற்றும் விமான எஞ்சின்களின் வெப்ப உமிழ்வைப் பின்பற்றிச் சென்று அவற்றைத் தாக்கும் சைட்வைண்டர் ஏவுகணைகள், சமையல் வாசனை, வியர்வை நாற்றம் போன்றவற்றை மோப்பம் பிடித்து அடர்ந்த காட்டுக்குள் ஒளிந்திருக்கும் எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகள், பூமிப்பரப்பில் நிகழும் அணுகுண்டுச் சோதனைகள், ரொக்கெட் ஏவுதல் போன்ற செயற்பாடுகளைக் கண்காணிக்கும் மைதாஸ் செயற்கைக் கோள்கள் போன்றவற்றை அமெரிக்கா உருவாக்கியிருக்கிறது. எதிரிகளின் ஏவுகணைகளை அழிக்கும் பாட்ரியாட் ஏவுகணைகளும் இத்தகையவையே.

கொசுக்கள் தமது இறக்கைகளை அடித்து எந்தப் புற ஒலியாலும் பாதிக்கப்படாத ஒரு ரீங்காரத்தை வெளியிட்டு மற்றக் கொசுக்களுடன் செய்திப் பரிமாற்றம் செய்து கொள்கின்றன. அந்த ஒலி ஏறத்தாழ 150 அடி தொலைவிலுள்ள கொசுவைக்கூடச் சென்றடைகிறது. அந்துப் பூச்சி தனது அடி வயிற்றிலுள்ள காதுகளின் உதவியால் கேளா ஒலிகளைக் கேட்டறிந்து தனது இணையிருக்குமிடத்தைச் சென்றடைகிறது.

மனிதனின் அதிநவீனமான ஒலிவாங்கியால் கூட அந்தக் கேளா ஒலிகளைப் பதிவு செய்ய முடியவில்லை. அதேபோன்று வளிக்குழப்பங்கள், மின்னல், சூரிய வெடிப்பு போன்றவற்றால் குலைக்கப்படாதவாறு, செய்திப் போக்குவரத்துக்கு உதவக்கூடிய ரேடியோ மின்னல்களை உருவாக்கும் உபாயங்கள் தேடப்பட்டு வருகின்றன.

சாதாரணமாகவே உயிரின உறுப்புகளின் அமைப்புகள் பல சாதாரணங்களை உருவாக்க உதவியிருக்கின்றன. பறவைகளின் உடலமைப்பு விமானங்களை உருவாக்க வழி காட்டியது.

மீன்களின் செதில்களைப் போன்ற சாதனங்கள் நீரிலிருந்து ஒட்சிசனைப் பெறவும், கரியமில வாயு போன்ற கழிவுகளை நீக்கவும் நீர்மூழ்கிக் கப்பல்களில் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கைச் சிறுநீரகங்களும், இதயங்களும் பரவலாக மருத்துவத்துறையினரால் பயன்படுத்தப்படுகின்றன. டொல்பின் மீனின் மேற்றோலைப்போல நீரின் இழுப்புத் தடையைக் குறைக்கும் படலங்கள் படகின் வெளிப் பரப்புகளில் பொருத்தப்படுகின்றன.

கண்ணை ஒத்த ஒரு கருவி நுண்ணோக்கியில் தெரியும் செல்களில் புற்று நோய் செல்களை மட்டும் பிரித்துக் காட்டுகிறது: மின்மூளை வரைபடங்களிலிருந்து நோய்ச் சின்னங்களை அடையாளம் காண்கிறது. விசிலாக் என்ற கருவி கண்ணைப் போலவே செயற்பட்டு எதிரிலுள்ள பொருளின் தொலைவை அளவிடுகிறது.

வாகனங்களின் முகப்புகளிலும், கோளிறங்கும் விண்கலங்களிலும் விசிலாக் கருவிகள் பொருத்தப்பட்டுத் தடைகள் அல்லது தரைகள் நெருங்க நெருங்க வேகத்தைக் குறைத்துக் கொள்ளும்படி செய்கின்றன. பார்வையில்லாதவர்களுக்கும் உதவும் வகையில் விசிலாக் கருவிகள் உருவாக் கப்பட்டுள்ளன.

சாதாரண ஈ பறக்கும்போது மேலேழும்பும் போதும், கீழிறங்கும்போதும், திரும்புகையிலும் தனது உடலில் உள்ள இரு நீட்சிகளின் உதவியால் தனது சமநிலையைப் பராமரித்துக் கொள்கிறது. அவை காற்றியக்க அழுத்தத்தில் ஏற்படும் மாற்றங்களை ஈக்கு உடனுக்குடன் தெரிவிக்கின்றன. அதன் அடிப்படையில் ஸ்பர்ரி ராண்ட் என்பவர் இயங்கும் பகுதிகள் இல்லாத ஜைராட்ரான் என்ற சமநிலையாக்கிக் கருவியை உருவாக்கினார். தற்கால ஏவுகணைகளில் அது ஓர் இன்றியமையாத பாகமாக உள்ளது.

பீட்டில் வண்டின் கூட்டுக் கண்கள் இரு பகுதிகள் கொண்டவை. வண்டு பறக்கிறபோது ஒரு பிம்பம் ஒரு பகுதியிலிருந்து மற்ற பறக்கும் வேகத்தை வண்டு அளந்து கொள்கிறது. இதே போல ஒரு விமானம் அல்லது ஏவுகலத்தின் இரு முனைகளில் இரண்டு போட்டோ மின்கலங்களைப் பொருத்திக் கணினியின் உதவியால் பறப்பு வேகத்தை உடனுக்குடன் அறிய முடியும்.

ஆந்தையின் காதுகள் ஒலி வரும் திசையைக் கண்டுபிடிக்க வல்லவை. இருட்டில் ஓர் எலி தனது இரையைக் கடிக்கும் ஓசையைக் கேட்டு ஆந்தை குறி தவறாது பாய்ந்து எலியைப் பிடித்துவிடும். இத்தத்துவத்தைப் பயன்படுத்திக் கப்பல்கள், விமானங்கள் போன்றவற்றைக் கண்டு பிடிக்கும் சோனார் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.


விலங்குகள் தமது மோப்பத்திறனால் இரைகளையும் இணைகளையும் தேடிப்பிடிக்கின்றன. சாலமன் மீன்களும், கடலாமைகளும் மூக்கின் மோப்பத் திறன் மூலம் தாம் முட்டையிடும் இடங்களைச் சென்றடைகின்றன. அதேபோல வியர்வை, சிறு நீர் போன்றவற்றின் மணங்களை உணரும் ஆயுதங்கள் போர்க்களங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

சமாதான காலங்களில் கெட்டுப்போன உணவுகள், நச்சு வாயுக்கள், வெடி மருந்துகள், போதைப் பொருள்கள் போன்றவற்றை வாசனை மூலம் கண்டு பிடிக்கும் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. சில நோய்கள் உடலில் குறிப்பான நாற்றத்தை உண்டாக்கும். அதை அடையாளம் காணச் செயற்கை மூக்குகள் மருத்துவர்களுக்கு உதவுகின்றன.

என்னதான் அறிவியல் முன்னேறினாலும் மூளையை மட்டும் பிரதிபண்ண முடியவில்லை. இடையன் பூச்சி தனது இரை பறப்பதைப் பார்த்த நொடியிலேயே அதன் வேகம், பாதை, திசை ஆகியவற்றைக் கணித்து இரையைப் பாய்ந்து பிடித்துவிடும். இவ்வளவும் ஒரு விநாடியில் இருபதில் ஒரு பங்கு நேரத்தில் நடந்து முடிந்து விடும். மனிதன் உருவாக்கியுள்ள எந்தவொரு தடம் காணும் கருவிக்கும் இவ்வளவு திறமை கிடையாது.

ஓர் எறும்பின் மூளைகூட உலகின் மிகச் சிறந்த செயல் திறனுள்ள கணினியை விட அதிகச் செயல் திறனுள்ளதாகும்.

---





வயோதிபத்திலும் மூளையில் புதிய உயிர்க்கலங்கள் உற்பத்தியாகலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## இள இரத்தம் பாய்ச்சி மூப்பின் பாதிப்புகளைக் குறைக்க முடியும்

மூப்படைவதால் உடலில் ஏற்படும் தாக்கங்களை எதிர்காலத்திலே ஒரு நாள் எம்மால் கட்டுப்படுத்தி விட முடியும் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மூப்பான சுண்டெலிகளுக்கு இளம் சுண்டெலிகளின் இரத்தத்தை செலுத்தி ஆய்வுகளை நடத்திய நிலையில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.


அவ்வாறாக இரத்தம் செலுத்தப்பட்ட வயோதிப சுண்டெலிகளின் மூளைத் திறனும் செயற்பாடுகளும் மேம்பட்டதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இயற்கையான இரசாயனங்களின் பயனால் மூப்படைந்தவர்களின் மூளையிலும் புதிய உயிர்க்கலங்கள் உற்பத்தியாகலாம் என ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

சுண்டெலிகளில்செய்யப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சி மனிதர்களிடத்திலும் இனி மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆய்வை வழிநடத்திய மருத்துவர் டோனி விஸ் கோரே, நேச்சர் மெடிசின் என்ற சஞ்சிகையில் எழுதியுள்ளார்.

ஆனால் டிமென்ஷியா, அல்செய்மர்ஸ் போன்ற மூளைப் பாதிப்பு நோய்கள் மூப்படைவதால் மட்டும்தான் வருகின்றன என்று கூறுவதற்கில்லை என்று அந்நோய்கள் சம்பந்தமாக ஐக்கிய ராச்சியத்தில் சேவை ஆற்றிவரும் தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# வேற்றுக் கிரக வாசிகளுக்கான எமது தேடல் எமக்கே சாபமாகலாம்



பிரபஞ்சத்தில் நாம் உறுதியாக அறிந்த ஒரேயொரு புத்திக் கூர்மை மிக்க உயிரின வாழ்க்கையாக எமது பூமியில் நிகழும் மனித வாழ்க்கையைக் கூறலாம்.

இந்தநிலையில் மனிதன் தன்னைப் போல் புத்திக் கூர்மை மிக்க வேற்றுக் கிரகவாசிகள் யாரும் இந்தப் பிரபஞ்சத்தில் வாழ்ந்து வருகின்றனரா என்று மேற்கொள்ளும் ஆராய்ச்சி அவனுக்கே சாபக்கேடாக அதாவது மனித இனத்தின் அழிவுக்கே வழி வகுக்கலாம் என்று விஞ்ஞானிகள் அதிர்ச்சியான தகவலைக் கூறுகின்றனர்.

இதற்கு விஞ்ஞானிகள் கூறுவது 'பெரிய வடிகட்டி' என்று பொருள்படும் Great Filter தத்துவம். அதாவது பிரபஞ்சத்தில் புத்திக் கூர்மை மிக்க உயிரினங்களின் வாழ்க்கை ஒரு கட்டத்தைத் தாண்டி வளர்வதை ஒரு மர்ம வேலி போன்ற சக்தி தடுத்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். Great Filter என அழைக்கப்படும் இவ்வேலி மனித வாழ்க்கையின் கடந்த காலத்தில் இருந்திருக்கும் என்றும் வருங்காலத்தில் நாம் எதிர்நோக்க வேண்டிய சவாலாகக் காத்துக் கொண்டிருக்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

நாம் இப்பிரபஞ்சத்தில் வேறு ஏதும் புத்திக் கூர்மை மிக்க உயிரினங்களைக் கண்டு பிடித்தால் இந்த Great Filter இன் விளைவை நாம் சந்திக்க நேரிடும் எனப்படுகின்றது. அதாவது மனித இனம் உட்பட இப் பிரபஞ்சத்தில் ஏதேனும் பாகத்தில் வசிக்கும் ஏனைய தொழிநுட்ப அறிவு மிக்க அனைத்து உயிரினங்களின் நாகரிகங்களும் தமது அண்டத்தில் (Galaxy) இருந்து இன்னொரு அண்டத்துக்கு பயணிப்பதை இந்த Great Filter இன் செயற்பாடு தடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

> விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாத UFO என்ற பறக்கும் தட்டு பற்றிய கட்டுக் கதைகளைத் தவிர்த்துப் பார்த்தால் enrico Fermi என்ற பௌதிகவியலாளர் கூறும் Fermi Paradox நியாயமானதாகவே தோன்றுகின்றது.

இதனால் நாம் மட்டுமல்லாது வேற்றுக் கிரகவாசிகளும் கூட தமது நாகரிகத்தின் உச்சத்தில் அதாவது அறிவின் உச்சத்தை அடையும் போது பேரழிவை விரைவில் சந்திக்கும் கட்டத்தில் இருப்போம் என விஞ்ஞானிகள் எச்சரிப்பது குறிப்பிடத்தக்கது. இந்த Great Filter தத்துவம் பிரபஞ்சத்தில் நிச்சயம் செயற்படுகின்றது என்பதற்கு சான்றாக இந்த வாதத்தை விஞ்ஞானிகள் முன் வைக்கின்றனர். அதாவது விஞ்ஞான வானியல் ஆராய்ச்சி வளர்ச்சியில் உச்சத்தில் இருக்கும் மனிதன், தற்போது சூரிய குடும்பத்தைப் போன்ற நூறு பில்லியன்களுக்கும் மேற்பட்ட நட்சத்திர மண்டலங்கள் பிரபஞ்சத்தில் வியாபித்து இருப்பதை அறிவான்.

இந்நிலையில் பூமியைத் தவிர்த்து இந்த பில்லியன் கணக்கான நட்சத்திர மண்டலங்களில் பூமியைப் போன்றே உயிர் வாழ்க்கையின் பரிணாமத்துக்கு உதவக் கூடிய சூழல் அமைந்திருக்கும் பல கிரகங்கள் அடையாளம் காணப்பட்ட போதும் இதுவரை எம்மைப் போன்ற உயிரினங்களை ஏன் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதே இவர்களின் முக்கிய கேள்வியாக உள்ளது. Fermi Paradox என்று அழைக்கப் படும் இந்தக் கேள்விக்கான பதிலாக Great Filter தத்துவம் கூறப்படுகின்றது.

விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப் படாத UFO என்ற பறக்கும் தட்டு பற்றிய கட்டுக் கதைகளைத் தவிர்த்துப் பார்த்தால் enrico Fermi என்ற பௌதிகவியலாளர் கூறும் Fermi Paradox நியாயமானதாகவே தோன்றுகின்றது. இதேவேளை பூமியில் மனித வாழ்க்கை தோன்றி 200, 000 வருடங்களில் நாம் பல சூப்பர் எரிமலைகள், விண்கற் தாக்குதல்கள் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களில் இருந்து தப்பி வந்துள்ளோம் என்றும் விஞ்ஞானிகள் கூறுவது குறிப்பிடத்தக்கது.

■ இணையவன்

# பெண்களுக்கு வயது 30 இல் ஆண்களுக்கு வயது 40 இல் மற்றவர்களுக்கு அழகாகத் தெரிவர்!

பெண்கள் 30 வயதிலும், ஆண்கள் 40 வயதிலும் மற்றவர்களுக்கு அழகாகத் தெரிவர் என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. மனிதர்கள் எந்த வயதில் அழகாகக் காணப்படுகின்றனர் என்பது குறித்து சமீபத்தில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து ஆண்கள் மற்றும் பெண்களிடம் தனித்தனியாக கருத்துக் கேட்கப் பட்டது. அதில் பெண்கள் 30 வயதிலும், ஆண்கள் 40 வயதிலும் மிக அழகாகத் தெரிகின்றனர் என்பது தெரியவந்தது. ஏனெனில் 40 வயதில் தான் ஆண்கள் அழகான உடல் அமைப்பைப் பெறுகின்றனர். அதுவே பெண்களைக் கவருகிறது. அதுபோன்று பெண்கள் தங்களது 30 வயதில் தான் அழகாக இருக்கின்றனர். அந்த வயதில்தான் மற்றவர்களைக் கவரும் உடைகளையும், வாசனைத் திரவியங்களையும் பயன்படுத்தத் தொடங்குகின்றனர். ஆண்கள் தங்களது 40 வயதுக்குப் பிறகுதான் ஆடம்பர மான ஆடைகளை அணிவதில் விருப்பம் கொள்கின்றனர். மேலும் விருந்து விழாக்களில் பங்கேற்று வைன் மற்றும் மதுவகைகளில் நாட்டம் கொள்கின்றனர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.



# உலகில் அணுசக்தி வீழ்ச்சி அடைந்து சூரிய சக்தி மின் பாவனை கூடும்

உலக புவி தினத்தைக் கொண்டாடிய அறிவியலாளர்கள் உலகுக்கு ஒரு நற்செய்தியையும் வழங்கி உள்ளார்கள்.

தறபொது உலகில் சக்தித் தேவையை அதிகரிப்பதற்கு அணுசக்தியை விட சூரிய சக்தியை உப யோகித்தல் உலகுக்கு நன்மை அளிக்க வல்லது என்று உலக நாடுகள் மெல்ல உணர்ந்து வருவதாகவும் இதற்கான அபிவிருத்திப் பணிகளில் அவை முனைப்புக் காட்டி வருவதாகவும் அறிவியலாளர்கள் தெரிவித்துள் ளனர்.

இதனால் இவ்வருட புவி தினம் சூரிய சக்தி யுகத்தின் விடிவு நாளாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஒன்று எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் 2013 ஆம் ஆண்டில் மட்டும் solar photovoltaic installations எனப்படும் சூரியப் படல்கள் நிறுவப்பட்டு அதில் இருந்து பெறும் மின்சாரத்தின் அளவு 4.2 gigawatts ஆக அதிகரித்துள்ளது. அதாவது இச்சக்தியின் மூலம் 1.6 மில்லியன் வீடுகளுக்கு மின் வழங்கும் சூழல் உருவாகியுள்ளது.



இதைவிட 2013 ஆம் ஆண்டில் உலகம் முழுதும் சூரியப் படல்கள் மூலம் பெறும் மின்னின் அளவு 38 gigawatts இனால் அதிகரித்திருப்பதாக வும் அதாவது மொத்தம் 96 இல் இருந்து 134 gigawatts ஆக அதிகரித்து இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் 2013 இன் உலக அணுசக்தி தொழில் தகவல் அறிக்கைப் படி உலகம் முழுதும் காற்றின் மூலம் பெறப்படும் மின் 45 gigawatts ஆகவும் சூரியப் படல் மூலம் பெறும் மின்சாரம் 32 gigawatts ஆகவும் கிடைக்குமாறு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இவற்றை இணைத்துப் பார்க்கும் போது அணுசக்தி மூலமான மின் வெறும் 1.2 gigawatts மாத்திரமே அதிகமாக உள்ளது.

இதேவேளை அமெரிக்காவில் அணுசக்தி மூலமான மின்னுற்பத்திக்கான முதலீடு குறைந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

2013 இல் அமெரிக்காவில் புதிதாகக் கட்டப்படவிருந்த 9 நியூக்ளியர் ரியாக்டர்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான தகவல்கள் மூலம் உலகில் அணுக்கழிவுகள் மற்றும் காபன் வாயுக்களின் வெளி யேற்றம் என்பன கட்டுப்படுத்தப்படும் விதத்தில் சூரிய சக்தி மூலமான மின்சாரப் பாவனை அதிகரித்து வருகின்றது என்பது உலக மக் களுக்கு நற்செய்தியே!